மலர் : 47

# சத்தியத்தின் குரல்

# THE VOICE OF TRUTH INTERNATIONAL

TAMIL EDITION

Volume - 47

# ✯ சத்தியத்தின் குரல் ✯


## Editorial Team

Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

Translating Editor
**B.Benny Martin**

**Guest Editors**

Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

**Staff Writers**

Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Kingsly rajah
Abel R. Nayagam

Publishing Consultant

**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from
**Tamil World Soul Winning Campaign**
**86-A, Dharapuram Road,**
**Kangayam - 638701. TN. India.**
**Cell : 98427 30382, 99655 30385**

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
**Cell : 92 4421 4421, 92 4420 4420**

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
**Cell : 94435 58041**



## ஆசிரியர் உரை

# பரிசுத்த ஆவியானவர் பற்றி சரியும், தவறும்

# The Holy Spirit True and False

Louis Rushmore

மனிதர்களைப் பொறுத்தவரை பரிசுத்த ஆவியானவர் சம்மந்தமாக சில காரியங்கள் உண்மையாகவே இருக்கின்றன. கூடுதலாக, கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களால் போதிக்கப்படும் சில காரியங்கள் கூட வேதாகம அடிப்படையில் ஆதார மற்றவைகளாகவும், உபதேசரீதியாக தவறானவைகளாகவும் இருக்கின்றன. பரிசுத்த ஆவியானவர் ஒரு தேவனுடைய பிள்ளைக்குள் சரீரப் பிரகாரமாக வாசம் செய்கிறார் அல்லது தம்முடைய வார்ததை மூலமாக வாசம் செய்கிறார் என்பதை ஒருவர் விசுவாசித்தாலும் சரி, விசுவாசியாவிட்டாலும் சரி பரிசுத்த ஆவியானவரைப் பற்றி சில உபதேசங்கள் உண்மையாக இருக்கின்றன, சில உபதேசங்கள் பொய்யாக இருக்கின்றன.

பொதுவாக, ஒரு கிறிஸ்தவனுக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறார் என்னும் உபதேசத்திற்கு ஆதரவாகப் பேசுகிறவர்கள் அற்புத அடையாளங்களின் காலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே முடிந்துவிட்டது என்று போதிக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதும்போது அற்புத அடையாளங்கள் அவைகளின் நோக்கம் நிறைவேிறிய பிறகு நின்று விடும் அல்லது ஒழிந்துபோம் என்று எழுதுகிறார் (I கொரிந்தியர் 13:8-12). எப்போதுமே அற்புத அடையாளங்களின் நோக்கம் வசனத்தை உறுதிப்படுத்துவது (மாற்கு 16:20) கிறிஸ்துவை உறுதிப் படுத்துவதுமாகத் தான் இருந்தது (யோவான் 20:30-31). தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதிய எபிரெய ஆசிரியர் முதல் நூற்றாண்டு அற்புத அடையாளங்கள் தேவனுடைய வார்த்தையை உறுதிப் படுத்தின என்கிறார். அதிலும் குறிப்பாக, ஆத்தும இரட்சிப்பு சம்மந்தமான தேவனுடைய வார்த்தையை உறுதி செய்தன என்று ஒத்துக் கொண்டார் (எபிரெயர் 2:3-4).

ஆகவே, தற்கால பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகள் ஒரு தேவனுடைய பிள்ளையோடோ அல்லது வேறு யாரோடோ நேரடியாகப் பேசுவதை உள்ளடக்கியது. வரலாற்றுப் பூர்வமாக நாம் பார்க்கும்போது வேதாகமம் அற்புத அடையாளங்களின் காலக் கட்டத்தின்போது பரிசுத்த

ஆவியானவர் பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளிடம் நேரடியாகப் பேசினார் [II பேதுரு 1:21] இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டில் அற்புதங்கள் இருந்த காரணத்தினாலும், புதிய ஏற்பாடு நம் கைகளில் முழுமையாக எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறபடியாலும் பரிசுத்த ஆவியானவர் நேரடியாக யாரிடமும் பேசுவதில்லை. சில பேர் அப்படிச் சொல்லிக் கொண்டாலும் இன்று பரிசுத்த ஆவியானவர் மூலமாக தேவன் யாரிடமும் மெல்லிய குரலில் பேசுவதில்லை [I ராஜாக்கள் 19:12].

மேலும், பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய பிள்ளைகளை முடிவெடுக்கச் செய்வதுமில்லை. அவர்களுடைய முடிவெடுப்பின் போது நேரடியாக வழிநடத்துவதுமில்லை. மாறாக, பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிற வார்த்தைகளுக்கு செவி கொடுத்து அவைகளைத் தங்கள் வாழ்க்கையில் யாரெல்லாம் நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறார்களோ அவர்களை ஊக்கப்படுத்துகிறார். பழங்காலம் முதல் நாம் பார்த்தால் மனித இனத்திடம் தேவன் எப்போதெல்லாம் பரிசுத்த ஆவியானவர் மூலமாகப் பேசினாரோ அந்த பேச்சு அல்லது உரையாடல் அற்புத அடையாளங்களால் உறுதி செய்யப்பட்டது [உதாரணமாக, மோசேயின் கோல் [யாத்திராகமம் 4:1–5]. வேதாகம அற்புதங்களின் காலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே நிறைவு பெற்றபடியால் ஒருவர் இன்று கேட்கும் மெல்லிய குரல் வேதாகம அற்புத அடையாளங்களினால் உறுதி செய்யப்படுவதில்லை. ஆனால், அது அவருடைய தனிப்பட்ட உணர்வுகளாகும். இந்நாட்களில் தேவ குரலை பகுத்தறிவதற்கு அற்புத அடையாளங்கள் எதுவுமில்லாதபடியால் அது தேவனுடைய குரலா அல்லது கர்த்தருடைய குரலா என்பதை பகுத்தறிய முடியாது. அக்குரலின் ஆதாரத்தை ஒருவருடைய தனிப்பட்ட உணர்வுகளே யூகிக்கும்.

பரிசுத்த ஆவியானவர் நேரடியாக வழிநடத்துகிறார், பேசுகிறார் போன்ற உபதேசங்களெல்லாம் வேதாகமத்தை ஆதாரமாகக் கொண்டவைகளல்ல. மாறாக, இவைகள் அற்புத சுகமளிக்கும் பெந்தேகொஸ்தே ஊழியங்களிலிருந்து ஊற்றெடுத்து வருபவைகளாகும்.

இருந்தபோதிலும், கிறிஸ்துவின் சபைகள் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுகின்றன என்பது மகிழ்ச்சிகரமான ஒரு காரியமாகும் [ரோமர் 8:14; கலாத்தியர் 5:18]. சபைகளும், கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட தங்கள் மனதை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு பரிசுத்த ஆவியானவரால் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற வார்த்தைகளை நம் இருதயத்தில் பதிய அனுமதிக்க வேண்டும். மேலும், நாம் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவோம் [I பேதுரு4:11]. நாம் அஸ்தோத்தின் மொழியைப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும் [நெகேமியா 13:24].✝



நிர்வாக ஆசிரியர் உரை

# எல்லாம் கிறிஸ்தவர்களுக்காக!

## All For Christians!

*E.Z.S. Rajanayagam*

எல்லாம் கிறிஸ்தவர்களுக்காக என்ற இச்சொற்றொடரைத் தன்னகத்தே கொண்டுள்ள தனித்துவம் கொண்ட எபிரெயர் நிருபம் பற்றி முதலில் கொஞ்சம் தெரிந்துகொள்ளுவோம். இந்நூலை யார் எழுதினது, எங்கிருந்து எழுதப்பட்டது போன்றவை ஏதோ காரணத் திற்காக ஆவியானவரால் நமக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், இந்நூலின் நோக்கம் பற்றி நமக்கு வெளிப்படுத்தப்படாம லில்லை. முதல் நூற்றாண்டுக் காலத்தில் கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கப்பட்ட போது, மோசேயின் பிரமாணத்தின்படி வாழ்ந்து கொண்டிருந்த யூதர்கள் பலர், கிறிஸ்துவின் புதிய பிரமாணத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுத்தனர். ஆனால், யூத மதத்தில் தீவிரத்தன்மை கொண்டவர்கள் கீழ்ப்படிந்து கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட சக யூதர்களை துன்புறுத்தத் தொடங்கினர். இதில் அதிர்ந்து போன யூத கிறிஸ்தவர்கள், தங்கள் விசுவாச வீரத்தின் சாரத்தைக் குறைத்து, விட்டு வந்த மோசேயின் முறைமைகளுக்குத் திரும்பிச் செல்ல எண்ணம் கொண்டனர். அப்படிப்பட்ட ஓர் எக்கச்சக்க சூழ்நிலையில், நடக்கவிருந்த ஆவிக்குரிய விபரீதத்தை தடுத்து நிறுத்தும்படியாகவே இந்நூல் ஆவியானவரால் எழுதிக் கொடுக்கப்பட்டது.

ஆணிவேதான், நீங்கள் திரும்பிச் செல்ல நினைக்கும் மோசேயின் முறைமை எந்த வகையிலும் கிறிஸ்துவின் முறைமைகளுக்கு மேலானது அல்ல என்ற உண்மை பலவழிகளில் நிலை நிறுத்தப் பட்டுள்ளது. அத்தோடு அப்படி நிலைநிறுத்துவதற்கு தேவையான ஆதாரங்களும் இவ்விதமாய் அடுக்கப்பட்டுள்ளது. 1. கிறிஸ்து, தேவதூதர்களைக் காட்டிலும் மேலானவர். ஏனெனில் தேவ தூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்கிறவர்களாயிருக்கிறார்கள். 2. கிறிஸ்து, மோசேயைக் காட்டிலும் மேலானவர், ஏனெனில், மோசே அவராலே படைக்கப்பட்டவர். 3. கிறிஸ்துவின் ஆசாரியத்துவ முறை ஆரோனு டையதைக் காட்டிலும் மேலானது. ஏனெனில், அது ஒரே தரம் செலுத்தப்பட்டது. 4. கிறிஸ்து, மோசேயின் பிரமாணத்தைக் காட்டிலும் மேலானவர். ஏனெனில், அவர் புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.

ஆக, மொத்தத்தில், கிறிஸ்துவிலும், கிறிஸ்தவத்திலும் நீங்கள் இழந்து போவதற்கு ஒன்றுமேயில்லை என்று எபிரெயர் நிருபம் யூத கிறிஸ்தவர்களுக்கு எடுத்து விளக்கி எச்சரிக்கிறது.

இப்படிப்பட்ட இந்நூலின் 9 ம் அதிகாரத்தில்தான் நமது தலைப்புக்கான இக்கருத்து இடம் பெற்றுள்ளது. குறிப்பாக, புதிய பிரமாணத்தின் பலி பற்றி பேசும் இவ்வதிகாரத்தின் இரண்டாம் பகுதியில் [9:12–28] இது பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. ஆம், 24 ம் வசனம், இயேசு, இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருகிறார் என்றும், வசனம் 26, இயேசு, பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்த கடைசி காலத்தில் ஒரே தரம் வெளிப்பட்டார் என்றும், மேலும், வசனம் 28, இயேசு, தமக்காக காத்துக்கொண்டிருப்பவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி – இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் என்றும் கூறுகிறது. **பிரவேசித்திருக்கிறார், வெளிப்பட்டார், தரிசனமாவார்** என்ற இம்மூன்று வார்த்தைகளும், இயேசு **கடந்த காலத்தில்** மனுக்குலத்துக் காகச் செய்தது, இயேசு **தற்காலத்தில்** கிறிஸ்தவர்களுக்காகச் செய்து கொண்டிருப்பது மற்றும் இயேசு **எதிர்காலத்தில்** அவர்களுடையவர் களுக்காகச் செய்யப்போவது என மூன்று காலங்களையும் சம்பந்தப் படுத்தி பேசுகிறதாக உள்ளது. மொத்தத்தில், இயேசுவின் கடந்த காலம் மனிதர்களுக்காக, இயேசுவின் நிகழ்காலம் மனிதர்களுக்காக, இயேசுவின் எதிர்காலம் மனிதர்களுக்காக என்ற பேருண்மை அழகாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

### 1. நமக்காக வெளிப்பட்டார்

எல்லாம் நமக்காக என்ற தலைப்பிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், இயேசுவானவர் கடந்த காலத்தில் வெளிப்பட்டது மனிதர்களாகிய நம்மை இரட்சிக்கும்படியாகத் தான் என்பது.

பரலோக வாசியான இயேசுவானவர், சரீரத்தில் வெளிப்படுவார் என்று நூறுக்கும் மேற்பட்ட தீர்க்கதரிசனங்கள் முன்னுரைக்கிறது. இயேசு பிறப்பதற்கு முன்பாக, தனக்காக நியமிக்கப்பட்டிருந்த கன்னி மரியாளினிமித்தம் ஐயப்பாடோடிருந்த நீதிமானாகிய யோசேப்பிடம், கர்த்தருடைய தூதன் தோன்றி, ஐயப்படாதே என்று சொன்னதோடு அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றும் சொன்னார். [மத் 1:21] பிறகு, இயேசு பிறந்து ஊழியம் செய்ய ஆரம்பித்த நாட்களில், யோவான் ஸ்நானகன் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு; இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றார். [யோவா 1:29] இன்னும், லூக்கா நற்செய்தியாளரும் இயேசு வந்ததின் நோக்கத்தை இவ்விதம் கூறுகிறார். இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார் என்று. [லூக் 19:10] இந்த வசனங்கள் எல்லாம் இயேசு எதற்காக வெளிப்பட்டார் என்று துல்லியமாகவே கூறுகிறது.

எபிரெய ஆசிரியர், இயேசு வெளிப்பட்டதன் மூலம் மனிதர்களுக்கு கிடைத்த பாக்கியம் பற்றி சொல்லும்போது ஆதலால், அவர் தேவ தூதருக்கு உதவியாகக் கை கொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாக கை கொடுத்தார். [எபி 2:16] என்று உரக்கக் கூறுகிறார். பேதுரு அப்போஸ்தலன், இன்னும் கூட ஒருபடி மேலே சென்று ஆவியின் ஏவுதலால், மனிதர்களுக்கு இயேசுவின் மூலம் கிடைக்கும் இரட்சிப்பின் திட்டத்தை உற்றுப் பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருந்தார்கள் [1பேதுரு 1:12] என்று வியந்து கூறுகிறார். ஏனென்றால், தேவ தூதர்கள்பாவம் செய்த போது மீட்பின் திட்டத்தை தேவன் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார். [யூதா 6] இதிலிருந்து தெரிவது என்ன? தேவாதி தேவன் தேவதூதர்களைக் காட்டிலும் மனிதர்களை அதிகம் நேசிக்கிறார் என்பது எவ்வித சந்தேகத்திற்கிடமின்றி தெரிகிறது.

சரி, இப்படி இயேசு நமக்காகவே வெளிப்பட்டிருக்கும் போது, அவர் வெளிப்பட்டதின் நோக்கத்தை நாம் புரிந்து, அவர் வெளிப்பட்டதின் மூலம் மனிதர்களாகிய நாம் அடைய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படும் ஆவிக்குரிய நன்மைகளை நாம் அடைந்து விட்டோமா? தேவதூதர்களைக் காட்டிலும் தேவன் நம்மை அதிகமாக நேசித்திருக்கும் போது அந்த நேசத்தை நாம் அற்பமாக எண்ணலாமா? மனுக்குலத்தின் மீது தேவன் கொண்ட உயர்ந்தபட்ச நேசத்தின் வெளிப்பாடாகத்தானே, பரலோகத்தின் மிகச்சிறந்த கொடையாகிய இயேசுவை தேவன் ஈவாக அனுப்பித் தந்தார். [யோவா 3:16] அந்த தேவ குமாரனும், தன்னுடைய நேசத்தை நம்மிடத்தில் வெளிப்படுத்தும் பொருட்டு தன்னையே பலியாகத் தந்தார் தானே. இயேசுவின் அன்பு குறித்து அப்போஸ்தலன் பவுலடியார் எபேசியருக்கு எப்படிக் கூறுகிறார் என்று பாருங்கள். கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள் [எபே 5:2] என்று.

II. **நமக்காகப் பிரவேசித்திருக்கிறார் [எபி 9:24] :**

எல்லாம் நமக்காக என்ற தலைப்பிலிருந்து நமக்கு கிடைக்கும் இரண்டாம் பாடம், இயேசுவானவர் மரணத்தை வென்று பரலோ கத்தில் பிரவேசித்து கிறிஸ்தவர்களுக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் என்பது.

இந்த இடத்தில் ஒரு காரியத்தை உங்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். இயேசு பூமிக்கு வந்தது மானிடம் முழுமைக்குமாகத் தான்.

இதில் எவ்வித சந்தேகமுமில்லை . ஆனால், அவர் பரலோகில் பிரவேசித்திருப்பதோ மனிதர்கள் அனைவருக்காகவும் அல்ல. இந்த சிலாக்கியம் யாரெல்லாம் கிறிஸ்துவின் போதனைகள் அடங்கிய புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுத்து வாழ்கி றார்களோ அவர்களுக்காகத்தான். எபிரெயர் ஆசிரியர் நமக்காக என்று பயன்படுத்தியிருக்கும் வார்த்தையின் பொருள் புதிய ஏற்பாட்டு சத்தியத்தின்படியான கிறிஸ்தவர்களுக்காக என்பது தான். மற்றபடி, அவ்வார்த்தை எல்லா மனுக்குலத்தையோ அல்லது பல கூறுகளாகப் பிரிந்து கிடக்கும் ஒட்டு மொத்த கிறிஸ்தவ சமுதாயத்தையோ குறிக் கும் வார்த்தை அல்ல. உலகத்தின் பார்வையில், கிறிஸ்தவர்கள் என்ற அங்கீகாரத்தை பெற்றிருப்பவர்கள் அனைவரும், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப் பார்வையில் கிறிஸ்தவர்கள் என்று அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சரி, மரணத்தை வென்று மூன்றாம் நாளில் உயிரோடெழுந்த இயேசுவானவர் இப்போது எங்கே இருக்கிறார்? பிதாவினுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். (எபி 12:2) இப்படி தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணா மல், சிலுவையை சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இயேசுவானவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவர் அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறார் என்ற முழு விவரம் நமக்குத் தெரிவிக்கப்படவில்லை . ஆனால், ஒரு காரியத்தை அவர் செய்து கொண்டிருக்கிறார் என்பது மாத்திரம் திட்டமாக நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அது என்ன? யோவான் அப்போஸ்தலன் அது என்ன என்று நமக்குச் சொல்லுகிறார். என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார். (1யோ 2:1) யோவான் மாத்திரமல்ல, பவுல் அப்போஸ்தலனும். ரோமாபுரியாருக்கு எழுதும் போது, இவ்விதமாகவே கூறியுள்ளார். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்: அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே. (ரோம 8:34).

உயிரோடெழுந்த இயேசுவானவர் பரலோகத்தில் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து, அவருடைய புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி கிறிஸ்தவர்களாக வாழ்கிறவர்களின் பெலவீனங்களில் உதவி செய்வதற்காக [எபி.4:14-15] பிதாவினிடத்தில் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். மெய்க் கிறிஸ்தவர்களுக்காகப் பரிந்து பேசும் வேலையை இயேசு ஆண்டவர் இலவசமாகச் செய்து கொண்டிருக்கிறார். நம்முடைய பிரச்சனைகளுக்காக இலவசமாக வாதாட ஒருவரை இப்பூமியில் நாம் கண்டுபிடிக்க முடியுமா? அழிந்து போகும் சொத்து சுகத்திற்காக வாதாடுவதற்கே இலவசமாக ஆள் கிடைக்காத போது, நித்திய சுகத்திற்காகவும், நித்திய வாழ்வுக்காகவும் அவர் இலவசமாக வாதாடிக் கொண்டிருக்கிறார் என்றால் அது எவ்வளவு பெரிய பாக்கியம் என்று எண்ணிப்பாருங்கள்! அப்பொழுது தான் அவர் கிறிஸ்தவர்களுக்காகச் செய்து கொண்டிருக்கும் வேலையின் மகத்துவம் புரியும்.

III. **நமக்காகத் தரிசனமாவார் [வ. 28] :**

எல்லாம் கிறிஸ்தவர்களுக்காக என்ற தலைப்பிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து பரிந்து பேசிக் கொண்டிருப்பவர், அவருடையவர்களுக்காக மீண்டும் தரிசனமாவார் என்பது.

எபிரெயர் ஆசிரியர், 9:28 ல் சொல்லுவதை நன்றாகக் கவனியுங்கள். கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருப்வர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார். இவ்வசனத்தில் இரண்டு காரியங்களை நாம் கவனிக்க வேண்டும்.

முதலாவது, ஆவியானவர், கிறிஸ்து இரண்டாந்தரம் **வருவார்** என்று சொல்லாமல் **தரிசனமாவார்** என்று கூறுகிறார். தரிசனமாவார் என்பதற்கும், வருவார் என்பதற்கும் பெருத்த வேறுபாடுண்டு. இயேசு இரண்டாம் தரம் தரிசனமாவாரேயொழிய, அநேகர் நினைத்துக் கொண்டும், பேசிக் கொண்டுமிருப்பது போல இரண்டாம் தரம் பூமிக்கு வரமாட்டார். பூமியில் ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கமாட்டார். ஏனெனில், ஏற்கனவே சபையாகிய ராஜ்ஜியத்தை ஸ்தாபித்து விட்டார். [கொலோ 1:13]

இயேசு ஆண்டவர் பூமிக்கு மீண்டும் வரப்போவதில்லை என்பதைத் திட்டப்படுத்திக் கொள்ள பவுலடியார் தெசலோனிக்கேயருக்கு எழுதின முதலாம் நிருபத்திற்கு உங்களை அழைக்கிறேன். ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாம் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம் [1 தெச 4:16, 17]. இயேசு இரண்டாம் தரம் பூமிக்கு வருவதாக இருந்தால், எதற்காக அவர் வருகையில் மெய்க் கிறிஸ்தவர்கள் அவருக்கு எதிர் கொண்டு போக வேண்டும்? எதற்காக, மேகங்கள் மேல் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்? சிந்திப்போம். உபதேசத்திற்கு மாறான வழியில் நாம் நடக்கவோ அல்லது நடத்தப்படவோ வேண்டாம்.

இரண்டாவதாக, எபிரெய ஆசிரியர் 9:28 ல் கிறிஸ்துவானவர், தமக்காகக் காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இரட்சிப்பை அருளும் படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் என்று கூறுகிறார். நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். முதல் தரம் இயேசுவானவர் வந்தது மனுக்குலம் முழுமைக்குமாக. ஆனால், இரண்டாம் தரம் தரிசனமாவது, தமக்காக காத்துக் கொண்டிருப்பவர்களுக்காக. அப்படியானால் யார் அவருக்காக காத்துக்கொண்டிருக்கிறவர்கள்? பவுலடியார், பிலிப்பி பட்டணத்து சபைக்கு நிருபம் எழுதும்போது, நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் [பிலி 3:20] என்கிறார். அங்கே அந்த பட்டணத்தார் முழுவதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எழுதுகிறாரா அல்லது அங்குள்ள கிறிஸ்துவின் சபையார் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக எழுதியுள்ளாரா? இதற்கான பதில், அவர் இந்நிருபத்தை எப்படி ஆரம்பிக்கிறார் என்பதிலிருந்து புரியும். இயேசு கிறிஸ்துவின் ஊழியகாரராகிய பவுலும், தீமோத்தேயும், பிலிப்பி -பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது என்று ஆரம்பிக்கிறார். அப்படியானால், கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் யார்? கிறிஸ்துவுக்குள்ளான பரிசுத்தவான்களாகிய கிறிஸ்துவின் சபையார் தான். மற்றவர்களுக்கு இதிலே பங்கில்லை. ✝

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| பரிசுத்த ஆவியானவர் .... | Louis Rushmore | ... 1 |
| எல்லாம் கிறிஸ்தவர்களுக்காக .... | E.Z.S. Rajanayagam | ... 3 |
| நீங்கள் தேவனுடைய வார்த்தையோடு .... | J.C. Choate | ... 11 |
| என்னுடைய திட்டமா? தேவ சித்தமா? | E.Z. Selvanayagam | ... 15 |
| நான் உங்களுக்கு செவிகொடுப்பேன் | P.C. Philemon Rajah | ... 18 |
| தேவ கிருபை | Arjunan | ... 23 |
| விதையும், இதயமும் | Benny Martin | ... 27 |

**தேவனுடைய வார்த்தை – The Word of God**

| | | |
|---|---|---|
| ஏமாற்றப்பட்டேன் | Donald R.Fox | ...32 |
| ஜீவனுள்ள வார்த்தை | Patrick Morrison | ... 35 |
| உங்கள் வேதாகமத்தை வாசித்து.. | Cecil May, Jr | ... 38 |

**இரட்சிப்பு – Salvation**

| | | |
|---|---|---|
| ஞானஸ்நானத்திற்கு முன்பாகவே இரட்சிக்கப் ... | Alvin Tennings | ... 40 |
| சவுல் இரட்சிக்கப்பட்ட போது எங்கே ..... | Royce Frederich | ... 42 |
| ஒருவர் எப்போது எப்படி இரட்சிக்கப்படுகிறார்? | Sunny David | ... 45 |
| எவ்விதத்திலும் இது இரட்சிப்பற்கான .... | Damer Elam | ... 47 |

**வாழ்வதற்கான உபதேசம் –Doctrine to Live by**

| | | |
|---|---|---|
| வேலிக்கம்பத்தில் உட்காருதல் | Ernest S. Underwood | ... 51 |

**செயலில் கிறிஸ்தவம் – Christianity in Action**

| | | |
|---|---|---|
| நீங்கள் எதை விட்டிருக்கிறீர்கள்? | Gary C.Hampton | ... 54 |
| போதிக்கும் சிலாக்கியம் | Neal Pollard | ... 56 |
| நண்பர்கள் உங்களை விட்டு விலகும்போது | Cliff Holmes | ... 59 |

## சபை – The Church

| | | |
|---|---|---|
| இயேசு நம் மாதிரியாயிருக்கிறார் | **Grey Tidwell** | ...61 |
| மூன்ற முக்கியமான கேள்விகள் | **Jimmy Clark** | ...63 |
| எண்ணிக்கை அடிப்படையிலான மற்றும் .... | **Ronald D. Reeves** | ...66 |
| கிறிஸ்தவர்களும், சபையும் | **Da. R. Owen** | ...68 |
| வசன ஆராய்ச்சி | **Jerry Bates** | ...71 |

## ஆராதனை – Worship

| | | |
|---|---|---|
| பாடல் சபை வளர்ச்சியை பாதிக்கிறது | **E. Claude Gardner** | ... 74 |
| நேர்மறையான பிரசங்கம் | **Neal Pollard** | ... 77 |
| சபையாக சேர்ந்து நாம் பாடும் .... | **Wes MC Adams** | ... 80 |
| தேவனுக்கு மகிமையைக் கொண்டு .... | **Demar Elam** | ... 83 |

## அனுதின கிறிஸ்துவ ஜீவியம் – Daliy Christian Living

| | | |
|---|---|---|
| விசுவாசம், நம்பிக்கை மற்றும்.... | **T. Pandal Matheny** | ... 88 |
| ஒருவருக்கொருவர் தயவாயிருங்கள் | **Raymond Elliott** | ... 91 |

## கிறிஸ்தவ இல்லம் – The Christian Home

| | | |
|---|---|---|
| விவாகம் தேவனுடைய வழியில் | **Denny Petrillo** | ... 93 |
| குடும்பம் முக்கியமாகிறது | **Derek Broume** | ... 95 |
| ஒரு பொதுவான விளக்கம் | **Cecil May. Jr** | ... 99 |

## வேதாகம கதாபாத்திரங்கள் – Bible Characters

| | | |
|---|---|---|
| மரியாளும், மார்த்தாளும் | **Martha Lynn Rushmore** | ... 101 |
| ஆறு வழிகளில் சாத்தான் நம் மீது .... | **David Conley** | ... 104 |

## வேதாகம கேள்விகள் – Bible Questions

| | | |
|---|---|---|
| பரிசேயர் குருடருக்கு வழிகாட்டுகிற | **Ardron Hinton** | ... 105 |
| எல்லாம் முடிந்தது | **Jerry. R. Kendall** | ... 107 |



1932—2008

# நீங்கள் தேவனுடைய வார்த்தையோடு வாக்குவாதம் செய்யமுடியாது

## You Cannot Argue With the Word of God

### *J.C. Choate*

நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். நம் இரட்சகர் இந்த வார்த்தைகளை பரமேறி பிதாவின் வலது பாரிசத்தில் உட்காருவதற்கு முன்பாக தம்முடைய அப்போஸ்தலர்களிடம் பேசினார். இந்த சீஷர்கள் இயேசு யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானப்படுத்தப்பட்டதிலிருந்து இயேசுவை எப்போதும் முழுமையாகப் புரிந்து கொள்ளாவிட்டாலும் கூட அவருக்கு உண்மையாக விசுவாசமாக இருந்தார்கள். இந்தக் கட்டளையை அவர்களால் மிக எளிதாகப் புரிந்துகொள்ள முடிந்திருக்கிறது. அப்போஸ்தலனாகிய பேதுரு ஆண்டவரைப் பார்த்து இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்? என்று கேட்டார். அதற்கு கர்த்தருடைய பதில் ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப்போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்... பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்பதாக இருந்தது.

இங்கே இயேசு கிறிஸ்து அவருடைய சரீரம் அல்லது சபையில் முதல் அங்கத்தினர்களிடத்தில் பேசிக் கொண்டிருக்கிறார். அவர்கள் பின்பற்றவேண்டிய வழிமுறைகளை கொடுத்துக் கொண்டிருக்கிறார். உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்னும் கட்டளை செயலிழந்த உயிரற்ற ஒன்றல்ல – மாறாக, இது முதல் நூற்றாண்டில் மட்டுமல்ல, ஒவ்வொரு தலைமுறையிலும் தேவனுடைய ஜனங்களைத் தட்டி எழுப்பும் உந்து சக்தியாக இருந்து வருகிறது.

நாம் மேற்கோள்காட்டிய இயேசுவின் வாக்கியத்தின் மூலமாக அவர் இரண்டு கட்டளைகளைக் கொடுக்கிறார்: முதல் கட்டளை சபைக்கு; இரண்டாவது கட்டளை உலகத்திற்கு. கிறிஸ்து சபைக்கு என்ன சொன்னார்? விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய நாம் பல வருடங்களாக மத உலகில் இருக்கும் நம் நண்பர்கள் இந்த இரண்டாவது கடடளையை புரிந்து கொள்ளத் தவறும் போது அவர்களுடைய குருட்டாட்டத்தைக் குறித்து ஆச்சரியப்படுகிறோம். இந்தக் காரியத்தில் நாம் மற்றவர்களைப் பார்த்துவிட்டு, நம்மை நாமே பார்க்க மறந்து விடுகிறோம். தனிப்பட்ட கிறிஸ்தவர்களாக நமக்கு இரண்டாவது கட்டளையில் பிரச்சனை எதுவுமில்லை. ஆனால், உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை மற்றவர்களுக்குப் பிரசங்கிப்பதற்கான முக்கியத்துவத்தை காண நாம் தவறியிருக்கிறோம். முழுமையான நித்தியத்திற்கு நம் கண்கள் குருடாகி விட்டனவா?

பிரதான கட்டளை பற்றி நம் மனநிலையை நான் சிந்தித்துப் பார்க்கும் போது, தன் கண்ணில் உத்திரத்தை வைத்துக் கொண்டு, தன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்த்த ஒருவனைப் பற்றி இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தைகள் தான் நினைவுக்கு வருகிறது. அப்படி இயேசு என்னத்தான் சொன்னார். அது கேட்பதற்கு அவ்வளவு இனிமையான வார்த்தை இல்லை. அப்படித்தானே? பல வேளைகளில் நாம் அந்த மாயக்காரர்களை விட சிறந்தவர்களாக இல்லை. அது மாத்திரமல்ல, மத சம்பந்தமான அறியாமையிலும், பிழையிலும் இருக்கும் நம் அயலகத்தார் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் இருக்கிறது போல் தான் நாமும் இருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், அதைவிட மோசமானவர்களாக இருக்கிறோம்.

நம்மில் பெரும்பாலானவர்களுக்கு பிரதான கட்டளை என்பது விசுவாசிக்கிற சில வார்த்தைகளை விட மேலான ஒன்றாக இல்லை. அதை நாம் பெரிதாக எடுத்துக் கொள்வதுமில்லை. உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிஷேசத்தைப் பிரசங்கிப்பது நமது கடமை என்று காதுகளில் உரக்கச் சொல்லப்பட்டாலும் கூட நாம் உயிரற்றவர்களாகவே இருக்கிறோம். பிரதான கட்டளை நிறைவேற்றுவதைக் குறித்து நம் இருதயத்தில் எவ்வித அக்கறையும் இல்லை, ஆசையும் இல்லை. ஊழியத்தை உலகின் பல பகுதிகளுக்கு கொண்டு செல்வதை நாம் கண்டுகொள்ளாமல் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளாக சுற்றிக்கொண்டிருக்கிறோம். மனித இனம் இரட்சிக்கப்படாமல் அழிந்து போவதைக் குறித்து இம்மியளவும் கவலையில்லாமல் இருக்கிறோம்.

நம் வாழ்க்கைப் பயணத்தில் நாம் ஊழியத்தைக் குறித்து பாரா முகமாக இருந்தால் எது நமக்கு அதிர்ச்சியைக் கொடுத்து ஊழியத்தைக் குறித்த உணர்வைத் தரும் என்று தெரியவில்லை. நாம் தண்ணீரில் மிதந்து கொண்டே எதிர்நீச்சல் போடாமல் எளிதாக நித்திய இரட்சிப்பை அடையவே முடியாது. வாழ்க்கைப் பயணத்தில் பிசாசு நம்மைத் துரத்துவதாகவே எண்ணி துடுப்பைப் பயன்படுத்தி வாழ்க்கைப் படகை ஓட்ட வேண்டும். நம்மில் பெரும்பாலானோர் வாழ்க்கைப் பயணத்தில் நீர்ச்சூழலில் சிக்கிவிட்டோம் என்பதை அறியாமலேயே, உணராமலேயே இருக்கிறோம். சகோதரரே, உலகமெங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்காமல் இருப்பது தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமலிப்பதாகும். இப்படி கீழ்ப்படியாமலிருக்கும் ஒவ்வொருவருக்கும் நிச்சயம் நித்திய தண்டனை உண்டு. நாம் எப்போது நமக்கு முன்பாகவும், மனித இனத்துக்கும் முன்பாகவும் இருக்கும் படுகுழியில் விழாமல் எழுந்திருப்போம்?

நாம் உலகெங்கும் போய் இயேசுவைப் பற்றிச் சொல்வதற்கு மற்றுமொரு காரணம் உண்டு. இயேசு கிறிஸ்துவின் தாக்கம் இல்லாமல் இவ்வுலம் எப்படி இருக்கும் என்பதை ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள்? உங்கள் தனிப்பட்ட வாழ்வில் இயேசுவை நாம் ஏற்றுக் கொண்டதால் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்கள் தான் எத்தனை? ஆனால், இன்னும் இவ்வுலகில் லட்சக்கணக்கான மக்கள் இயேசு என்னும் பெயரைக் கேட்டது கூட இல்லை என்பதை நாம் அறியும் போது மிகுந்த வேதனையாக இருக்கிறது. அவர்களுக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இயேசு கிறிஸ்து என்னும் ஒருவர் தங்களுடைய பாவங்களுக்காக மரித்தார் என்பதைக் குறித்து எள்ளளவும் எண்ணமில்லை. அவர்கள் தங்கள் வாழ்க்கையை எதை மாதிரியாக கொண்டு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி அறியாதிருக்கிறார்கள் அல்லது மிகச்சிறந்த மாதிரியாகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றி அவர்களுக்கு போதிக்கப்படவில்லை. அவர்கள் எல்லாக் கிறிஸ்தவர்களும் பெற்றுக் கொள்ளுகிற ஆசீர்வாதங்களில் ஒன்றைக்கூட பெற்றுக்கொள்ளவில்லை. ஒரு நிமிடம் அவர்களுடைய இடத்தில் உங்களை வைத்துப் பாருங்கள். அப்படிப் பட்ட வாழ்க்கை அந்தகாரத்தால் சூழப்பட்ட ஒன்றாக இருக்காதா? ஒரு கிறிஸ்தவராக உங்களால் அந்த இருளை வெளிச்சமாக மாற்ற முடியும்! உங்களால் முடிந்தவரை இந்த மக்கள் இயேசுவைப் பற்றிய சுவிசேஷத்தை அறிய காரியங்களைச் செய்வது உங்கள் பொறுப்பாக இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் இது பொறுப்பைவிட மேலானது. இது ஒரு சிலாக்கியமாகும்! இதைச் சிந்தித்துப் பாருங்கள். உங்களுக்கு ஓர் இரட்சகர் இருக்கிறார். அவர் உங்கள் கடந்த கால பாவங்களை எடுத்துப் போட்டிருக்கிறார். மேலும், அவர் நம் சார்பாக தேவனிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். கிறிஸ்து நாம் இவ்வுலகில் எப்படி வாழ வேண்டுமென்று முழுமையான வழிமுறைகளைக் கொடுத் திருக்கிறார். அவர் உங்களுக்கு சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் என்றென்றும் வாசம் செய்ய ஒரு வீட்டை அளிப்பதாகவும் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். ஜனங்கள் இதைவிட அவரிடம் வேறு எதைத்தான் கேட்க முடியும்? இருந்த போதிலும் கிறிஸ்து நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம் கிறிஸ்தவத்தின் ஆசீர்வாதங் களை உலகம் முழுவதும் பகிர வேண்டும் என்பதாகத்தான் இருக்கிறது. நாம் குறைந்தபட்சம் இதைக்கூட செய்யாமல் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ள முடியுமா? அப்படி நான் நினைக்கவில்லை. கிறிஸ்து மனித இனத்துக்காக தம்முடைய எல்லாவற்றையும், தம்முடைய ஜீவனையும் கூட கொடுத்து விட்டார். அவர் உங்க ளுக்காகவும், எனக்காகவும் மட்டுமல்ல அவருடைய நாமத்தை இதுவரை கேள்விப்படாதவர்களுக்காகவும் தம் ஜீவனை கொடுத் திருக்கிறார். கிறிஸ்து தம்முடைய எல்லாவற்றையும் கொடுத்திருக்கும் போது, அவரிடமிருந்து பெற்றுக் கொண்ட சுவிசேஷத்தை நம்மைப் போல் பெற்றுக் கொள்ளத் தகுதியான வர்களிடம் பகிர்ந்து கொள்வோம்.



**மன்னிப்பு**

**கசப்பின் கதவையும், பகையின் கைவிலங்கையும் உடைத்தெறியும் சாவி மன்னிப்புதான். இச்சாவியை பலர் பயன்படுத்தாததால் தான் இவ்வுலகம் சமாதானமும், சந்தோஷமும் இல்லாமல் சிக்கித் தவிக்கிறது.**

# என்னுடைய திட்டமா? தேவ சித்தமா?

## My Plan? or God`S Will?

### *E.Z. Selvanayagam*

**சு**மார் கி.பி 57 – ல் அப்போஸ்தலன் பவுல் ரோமாபுரியில் உள்ள பரிசுத்தவான்களுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதில் அவர்களுடைய விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாயிருக்கிறது என்று அவர்களை மெச்சிக் கொள்கிறார் [ரோமர் 1: 8]. அவர்களைக் காணவும், ரோமாபுரியாருக்கு சுவிசேஷம் அறிவிக்கவும் தனக்குள்ள வாஞ்சையைத் தெரிவிக்கிறார் [ரோமர் 1, 15] ஆனாலும், அவருடைய எண்ணம் நிறைவேறாமல் தேவனால் தடுக்கப்பட்டுவிட்டதாகப் புலம்புகிறார் [ரோமர் 13: 15:22]. இருந்தபோதிலும், நான் ஸ்பெயின் நாட்டுக்குப் போகும் போதாவது உங்கள் ஊர் வழியாய்ப் பயணம் செய்து , உங்களைக் கண்டுகொள்ளவும் உங்களிடத்தில் சற்றுத் திருப்தியடைந்த பின்பு அவ்விடத்திற்கு உங்களால் வழி விட்டனுப்பப் படவும் எனக்கு சகாயம் கிடைக்கும் என நம்புகிறேன் என்று தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார் [ரோமர் 15: 24,28]

கர்த்தரோ தரிசனத்தில் **பவுலே, நீ திடன் கொள் நீ என்னைக் குறித்து எருசலேமில் சாட்சி கொடுத்ததைப் போல ரோமாவிலும் சாட்சி கொடுக்க வேண்டும்** என்றார் [அப். 23 : 11] பின்னே , ஏன் எனக்கு ரோமபுரிக்குப் போவதற்குத் தடை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது? என்று பவுலுக்கு ஒரே குழப்பமாக இருந்திருக்கலாம். தேவன் சொன்னதில் மாற்றமில்லை. பவுல் அப்போஸ்தலன் ரோமாபுரிக்குப் போனார், சுவிஷேமும் அறிவித்தார். ஆனால், அவர் கற்பனை செய்து கொண்டிருந்ததைப் போலவும், அவர் விரும்பிய காலகட்டத்திலும் அல்ல. மாறாக, சிறைக் கைதியாக அழைத்துச் செல்லப்பட்டார். கைதியாகதான் பிடிக்கப்பட்ட பிறகு, நான் சுவிஷேத்தைப் பிரகடனம் செய்வது எப்படி முடியும்? என் திட்டம் எல்லாம் பாழாகிவிட்டதே என்று பவுல் நிலைகுலைந்து போயிருக்கலாம். ஆனாலும், தேவன் தன் திட்டத்தை நிறை வேற்றினார். பவுல் ரோமாபுரியில் தனக்கென்று ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, அங்கே கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்ந்தார். ஏராளமானவர்கள் அவருடைய சிறை வீட்டுக்கு வந்து சுவிசேஷத்தைக் கேட்டனர். தடையில்லாமல் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்துப் பிரசங்கித்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார் [அப். 28: 23, 30, 31].

மனிதர்களாகிய நாம் மிகுந்த ஞானத்துடனும், எச்சரிப்புடனும் திட்டங்களைத் தயாரித்து, கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதாக நினைத்துக் கொண்டாலும், தேவனுக்கு என்று ஒரு திட்டம் உண்டு. அது, அநேக நேரங்களில் நம்முடைய திட்டத்துக்கு ஒத்துப் போகாது. அப்பொழுதெல்லாம் நமக்குக் கொடுக்கப்பட்ட அந்த முள் நீங்க வேண்டும் என்று கண்ணீரோடு மன்றாடியிருப்போம். ஆனால், அந்த முள் நீக்கப்படாதது மட்டும் அல்ல, அது இன்னும் கூர்மையாகி நமக்கு வேதனை அளிக்கிறது நாம் தேவனை சபித்துவிட்டு செத்துப் போகலாம் என்று முடிவுக்கு வருமுன்னே (யோபு 2:9) உன் பெலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும் (IIகொரி. 12:9) என்ற மெல்லிய சத்தத்தால் நம்மைத் தேற்றுகிறார். நம்முடைய பெலத்தையும், திறமையையும் குறித்துப் பெருமை பாராட்டிக் கொள்ளாதபடி, தேவன் மேல் சார்ந்து அவருடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுப்பதற்கு நமக்கு குறிப்பிட்ட சோதனைகளும், துன்பங்களும் அவசியமாக இருந்திருக்கலாம்.

நான் கர்த்தருடைய திராட்சைத் தோட்டத்தில் சிறப்பாகச் வேலை செய்வதற்கு இன்னும் சில வசதிகள் இருந்தால் பெரிய அறு வடையைச் செய்து காண்பிப்பேன் என்று ஏங்கியிருப்போம். ஆனால், இப்படியே வறுமைக்கும், பிரச்சனைகளுக்கும் மத்தியில் உழல்வது, நாம் மனத்தாழ்மையோடு ஊழியம் செய்வதற்கு நல்லது என்று தேவன் நினைத்திருப்பார். சவுல் அரசனுடைய உடைகளையும் போர் ஆயுதங்களையும் தரித்துக்கொண்டு கோலியாத்தை வெல்வதற்கு தாவீது முயற்சித்தான். ஆனால், அது அவனுக்குச் சரிப்பட்டு வரவில்லை. மாறாக, தன்னுடைய எளிமையான மேய்ப்பனின் ஆடைகளும், ஆயுதங்களும் கோலியாத்தை வீழ்த்துவதற்குப் போதுமானது என்னும் தேவ திட்டதைப் பின்னர் தான் அவன் உணர்ந்தான் (1 சாமு. 17: 38–51 ) வசதியாக இருக்கும் ஊழியனைப் பார்த்து, நானும் அப்படியிருந்தால் நன்றாக இருக்குமே என்று ஆசைப்பட வேண்டாம். தேவன் உனக்கு கொடுத்திருக்கிற தாலந்துகளைக் கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து உபயோகி, அப்பொழுது தேவன் நிச்சயம் நன்மை செய்வார்.

மோசேயை பயன்படுதியைதைப் போல நம்மையும் ஒரு முக்கியமான பணிக்கு தேவன் பயன்படுத்தமாட்டாரா? என்று அங்கலாய்த்திருப்போம் (அப். 7:25) மோசேக்குக் கல்விச் செல்வம், நிர்வாகப் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி, வில்வித்தை, வாள் வீச்சு இன்னும் எத்தனை எத்தனையோ பயிற்சிகளும் கொடுக்கப்பட்டி ருக்கலாம் (அப். 7:22) இளமை இருந்தது (வ.23) சமுதாயப் பற்று இருந்தது (வ.24) சொல்லப்போனால், தேவனே மோசேயை

அப்பணிக்கு என்று தான் பயிற்றுவித்தார். அப்படியில்லாவிட்டால் அடிமைகளைப் பெற்றோராகக் கொண்ட ஓர் அடிமை, தான் அடிமையாக இருக்கிற அதே நாட்டின் அரசுக் கட்டில் ஏற சூழ்நிலை அமையுமா? ஆனால், தேவன் நியமித்த நேரமும், சூழ்நிலைகளும் வரவில்லை என்பதை மோசே அறியமுடியாமல் உயிர் பிழைத்தால் போதும் என்று மீதியான் தேசத்துக்கு ஓடிப்போகச் செய்தார். தேவனுடைய திட்டத்தில் மாற்றமா? இல்லை. மோசே மீதியான் தேசத்துப் பாலைவனப் பல்கலைக்கழகத்தில் மௌனம் என்னும் சிறப்புப் பாடத்தை எடுத்து நாற்பது ஆண்டுகள் பயில வேண்டும் என்று தேவன் நினைத்தார். மோசே எப்படிப்பட்ட கடினமான பணிக்கு ஏற்படுத்தப்பட்டவன் என்பதை மோசேயை விட தேவன் தெளிவாக அறிந்திருந்தார். சகோதரனே, அவசரப்பட்டு ஆசைப்படாதே! கர்த்தருடைய வேலைக்காகக் காத்திரு.

முன்னொரு காலத்தில் தென் இராஜ்ஜியமாகிய யூதாவை ஆண்ட மிகச் சிறந்த அரசனாக விளங்கினார் எசேக்கியா. அவனைப் போல நல்ல அரசன் அவனுக்கு முன்னும் இருந்ததில்லை, பின்னும் இருந்ததில்லை என்று பேர் பெற்று இருந்தான். அவர் மரிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று தேவன் ஏசாயா தீர்க்கன் மூலமாக தகவல் தந்தார். இது எல்லாருக்கும் கிடைக்கும் பேறு அல்ல; இருந்தபோதிலும், அவர் தேவசித்தத்துக்கு ஒப்புக்கொடாமல் இன்னும் சில காலம் வாழவேண்டும் என்று விரும்பி கண்ணீர் மல்க மன்றாடினான். தேவன் அவன் விருப்பப்படியே பதினைந்து ஆண்டுகள் நீட்டிக் கொடுத்தார். என்னே பரிதாபம்! அந்த நீடிக்கப்பட்ட ஆண்டுகளில் அவன் சமாதானம் இழந்தான். அந்த நாட்களில் அவன் பெற்ற பிள்ளை தான் **மனாசே** என்ற பொல்லாத அரசன். அவன் தன் தகப்பனுக்கு எதிர்த்திசையிலே பயணம் செய்து தேவனுக்கு அருவருப்பான விக்கிரக ஆராதனையை ஊக்குவித்து நாட்டை அழிவின் பாதையில் அழைத்துச் சென்றான். **எசேக்கியா தேவ சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து மரணத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் அவனுடைய ஆட்சி, வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கும்.** தேவசித்தத்துக்கு ஒப்புக் கொடுக்காததால் கிடைத்தது என்ன என்று சிந்தித்துப் பாருங்கள், [IIராஜா20,21ம் அதிகாரம்].

ஆக, நம்முடைய ஜெபங்களுக்கு **இல்லை** என்று மறுமொழி கிடைத்தாலும், நமக்குக் கொடுக்கப்பட்ட முள் எடுபட்டு போகா விட்டாலும், நம்முடைய பணித்திட்டங்கள் நிறைவேறாமற் போனாலும் நாம் கர்த்தருடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து நம்முடைய ஊழியத்தைச் செய்வோம். ஆபகூக் தீர்க்கனைப் போல மகிழ்ச்சியாயிருப்போம். ✝

## நான் உங்களுக்கு செவிகொடுப்பேன்

## I Will Listen To You

Philemon Raja

வேதாகமத்தில் ஏறக்குறைய 7500 வாக்குத்தத்தங்கள் உள்ளது. ஆயினும், எந்த வாக்குத்தத்தமும் நிபந்தனையின்றி இல்லை. வருடத்திற்கு ஒரு வாக்குத்தத்தம் எனப் படித்தாலும் 7500 ஆண்டுகள் ஆகிவிடும். வாக்குத்தத்தங்கள் அந்தந்த நாட்களில் வாழ்ந்த ஒரு குறிப்பிட்ட நபருக்கோ, ஒரு குடும்பத்தினருக்கோ, ஏதோ ஒரு குழுவினருக்கோ அல்லது தேசத்திற்கோ கொடுக்கப்பட்டிருக்கும். எல்லாவற்றையும் நமக்கென்றும் எடுத்துக்கொள்ள முடியாது. ஆயினும், அந்த வாக்குத்தத்தங்களைப் படிப்பதிலிருந்து, நாம் கர்த்தரையும் அவர் சித்தத்தையும் அறிந்துகொள்ள முடியும். அது நம் ஆவிக்குரிய வாழ்விற்கு மிகவும் ஊக்கமானதாகவும் இருக்கும்.

இஸ்ரவேலர்கள் 70 ஆண்டுகள் பாபிலோனில் அடிமைகளாகச் சென்ற பின்பு, அவர்களது அடிமைத்தனத்தின் நாட்களில் கர்த்தர் எரேமியா தீர்க்கனை கொண்டு, இந்த அடிமைத்தனத்திற்கு பின்பு தான் செய்யப்போவதை அவர்களுக்கு அறிவித்தார். இந்த நாளிலும் அவைகளை படிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எரேமியா 29:12 அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்.

### 1. நீங்கள் கூடிவந்து...

எரேமியா 29:12 அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்.

’சபை கூடிவருதல்’ என்பது இந்த நாட்களில் மிகவும் சவாலான காரியம் தான். கொரோனாவின் தாக்கம் என்பது, சபையாக கூடிவருதலை பெருமளவில் தடை செய்திருக்கின்றது. அரசாங்க சட்டத்திற்கு நாம் கீழ்ப்படிந்து, நோய் வேகமாக பரவும் நேரத்தில் ஒன்றாகக், கூடிவராமல் இருப்பது என்பது சரியானது தான்; ஆயினும் அநேகர், தடைகள் (Lockdown) நீங்கிய போதும், கூடிவர தருணங்கள்

இருக்கின்ற போதும், நேரடியாகக் கூடிவராமல் இருப்பது பற்றிய பயமா? உயிர் பயமா? எது நம்மை தடுக்கின்றது? கர்த்தருடைய வார்த்தை சொல்வதை கவனிப்போம், எபி 10:25 சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக் கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்.

சபை எப்பொழுதுதெல்லாம் கூடி வருகின்றதோ, அப்பொழு தெல்லாம் கூடிவர வேண்டும். அது மாத்திரமல்ல, சபை எப்படி யெல்லாம் கூடி வருகின்றதோ (நேரடியாக மற்றும் ஆன்லைன்) மற்றும் அப்படியும் தவறாமல் கூடி வர வேண்டும். ஓரிடத்தில் ஒன்றாக கூடி வர வேண்டும் தான். அது இப்படிப்பட்ட சூழலில் சாத்தியமற்ற போது, ஆன்லைனில் சபை கூடிவருவதை தவிர்க்க வேண்டாம். அப்படித் தவறவிடுவது, நம் ஆவியை உள்ளான மனிதனை பெலவீனப்படுத்தும். ஒன்றாக கூடிவருவதைப் போன்றே ஒருமனப் படுவதும் முக்கியமாகும். (மத்தேயு 18:20) ஏனெனில், இரண்டு பேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக் கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.

நாம் சபையாக, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அதி காரத்தின்படியே, அவரது அதிகாரத்தோடே, அவரது கட்டளைப்படியே நாம் கூடி வரவேண்டும். 1 கொரி 5:4 நீங்களும், என்னுடைய ஆவியும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடி வந்திருக்கையில் என்கிறது. அப்படி கூடிவருதல் என்பது நன்மையை உண்டாக்குவதாக இருக்க வேண்டும். அது சக பரிசுத்தவான்களுக்கு இடறலாகவோ, தடுக்கலாகவோ இருந்து விடக் கூடாது. கொரிந்து சபையார் அப்படி இருந்ததற்காக கடிந்து கொள்ளப் பட்டனர். 1 கொரி 11:17 உங்களைப் புகழாமல் இதைக்குறித்து உங்களுக்குக் கட்டளை கொடுக்கிறேன் ; நீங்கள் கூடிவருதல் நன்மைக்கேதுவாயிராமல் தீமைக் கேதுவாயிருக்கிறது.

நாம் சபையாகக் கூடி வருதல் என்பது, மற்றவர்களை அன்பிற்கும் நற்கிரியைகளுக்கும் தூண்டுவதாக இருக்க வேண்டும் (எபிரேயர் 10:24,25). ஒரு போதும் நாம் சபைகூடிவருதலை விட்டுவிட மாட்டோம் என தீர்மானம் எடுப்போம்! அதனை முழுமனதோடும் முழு இருதயத்தோடும் செய்வோம்! எரேமியா 29:13 உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். சபையாக கூடிவருதலை எந்தக் காரணத்தினைக் கொண்டும் தவற விட வேண்டாம்! அது மிகப்பெரிய பாவமாக இருக்கின்றது. (எபி 10:26,31).

**2. என்னைத் தொழுதுகொண்டு...**

எரேமியா 29:12 அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்.

இந்த நாளிலே நாம் எடுக்க வேண்டிய மற்றொரு தீர்மானம், 'எந்த காரணத்தைக் கொண்டும் கர்த்தரைத் தொழுது கொள்வதை நான் விட்டுவிட மாட்டேன்' என்பதாக இருக்க வேண்டும். வெளி 15:4 கர்த்தராவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுது கொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின என்றார்கள்.

இந்த அண்டசராசரங்கள் அனைத்தையும் படைத்த பரம பிதாவை மாத்திரமே தொழுதுகொள்ள வேண்டும். வெளி 14:7 மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுகொள்ளுங்கள் என்று கூறினான்.

அவரவர் கிரியைக்கு தக்க பலனை கொடுக்கின்ற நியாயாதி பதியாகவும் அவர் இருக்கின்றார். 1 பேதுரு 1;17 அன்றியும் பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந் தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுது கொண்டுவருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்து கொள்ளுங்கள்.

அந்தப் பரம பிதாவை, நாம் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் என ஆண்டவர் இயேசு கட்டளையாக நமக்கு கொடுத்திருக்கின்றார். யோவான் 4:24 தேவன் ஆவியா யிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்.'' அவரை மாத்திரமே தொழுது கொள்ள வேண்டும் என்றும் கட்டளை யிட்டிருக்கின்றார். (மத்தேயு 4:10).

பரிசுத்த பிதாவாகிய அவரை நாம் பரிசுத்த அலங்காரத்துடனே தொழுகை செய்யும்படி பைபிள் நம்மை உற்சாகப்படுத்துகின்றது. சங்கீதம் 29:2 கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள். மேலும் அதை விளையாட்டுத்தனமாக செய்யாமல், பயத்துடனும், நடுக்கத்துடனும் செய்யும்படி நம்மை எச்சரிக்கவும்

செய்கின்றது [சங் 2:11]. அதனை ஒருமனப்பட்டு செய்ய வேண்டும் [செப்பனியா 3:9]. தம்மை தொழுதுக்கொள்கின்ற அனைவருக்கும் அவர் ஐசுவரிய சம்மபன்னராக இருக்கின்றார். [ரோமர் 10:12] யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்கு கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார்.

ஆகையால் சங்கீதக்காரன் நான் உயிரோடிருக்கும் வரை, இரட்சிப்பின் பாத்திரத்துடன், நன்றி பலிகளை செலுத்தி அவரை தொழுது கொள்ளுவேன் என்று தீர்மானம் செய்தது போல, நாமும் செய்து செயல்படுவோம். சங்கீதம் 116:2,13,17 அவர் தமது செவியை எனக்குச் சாய்த்தபடியால், நான் உயிரோடிருக்குமளவும் அவரைத் தொழுதுகொள்ளுவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண் டு , கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் உமக்கு ஸ்தோத்திரபலியைச் செலுத்தி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன்.

**3. என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள்....**

எரேமியா 29:12 அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்.

இந்த நாளிலே நாம் எடுக்க வேண்டிய மற்றொரு தீர்மானம், 'நான் ஜெபம் செய்வதை விட்டு விட மாட்டேன்'. நாம் எல்லா மனிதர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டியவர்கள். I தீமோத்தேயு 2:1 நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும்.

நாம் எதைக் குறித்தும் கவலைப்படாமல், எல்லாவற்றிற்காகவும் ஜெபம் செய்வோம். பிலிப்பியர் 4:6 நீங்கள் ஒன்றுக்குங் கவலைப் படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். வேதாகமம் ஜெபம் என்பது நம் வாழ்வில் சங்கிலி தொடர் போன்று தொடர்ந்து செய்ய வேண்டிய ஒன்று என்கின்றது. கொலோ 4:2 இடைவிடால் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்.

சோதனையில் விழாதபடிக்கு ஜெபிக்க வேண்டும். [மாற்கு 14:38]. துன்பத்தின் வேளையில் ஜெபிக்க வேண்டும் [யாக் 5:13]. வியாதியின் வேளையில் ஜெபிக்க வேண்டும் [யாக் 5:15, 16]. மேலும், எப்பொழுதும் எல்லாருக்காகவும் ஜெபித்து விழித்திருங்கள் எனவும் அறைகூவல் விடுக்கின்றது. எபேசியர் 6:18 எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள். ஆகையால், நாம் ஜெபம் செய்வதில் முதலாம் நூற்றாண்டு பரிசத்தவான்களைப் போலவும், அப்போஸ்தலர்கள் போலவும் இடைவிடாமல் தரித்திருப்போம். [அப் 2:42:6:4].

பிரியமானவர்களே ! நாம் கிறிஸ்துவின் அதிகாரத்தின்படியே கூடிவந்து, பரலோக பிதாவைத் தொழுது கொண்டு , அவரை நோக்கி விண்ணப்பங்களை இடைவிடாமல் ஏறெடுப்போம்; அவர் நமது விண்ணப்பத்திற்கு செவிகொடுப்பார். அவர் சொன்னதை செய்கின்ற வாக்குமாறாத கர்த்தர். ஆகையால், நாம் எடுத்த தீர்மானங்களில் உறுதியாக இருந்து செயல்படுத்துவோம். ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் கேட்பவைகளை, நிச்சயம் பெற்றுக்கொள்வோம் என்ற விசுவாச உறுதியுடனே ஜெபிப்பபோம். அவர் சொன்னபடியே செவி கொடுப்பார். யோவான் 16:23 அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங் களுக்த் தருவார்.

✝

## விழித்திருங்கள்

**உன் பக்தி வாழ்க்கையில் நீ உறங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் தான் எதிராளியாகிய பிசாசு தீவிரமாய் திட்டமிடுகிறான்.**

**தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசனவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான் [I பேதுரு 5:8]**

# தேவ கிருபை

## God`s Grace

*Bro. Arjunan*

**தே**வனுடைய கிருபையை அநேகர் அசட்டை செய்கின்றனர். இப்பொழுது ''எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவக்கிருபையானது பிரசன்னமாகி'' என தீத்து 2:11-ல் படிக்கிறோம். ஒருவராகிலும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்பது தேவனுடைய சித்தமா யிருக்கிறது. ஆகையால், தேவனுடைய இரக்கம் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது, பொதுவாக ஜனங்கள் வேண்டிக் கொள்ளும் போது தான், தன்னுடைய குடும்பம், நன்றாக இருக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்வார்கள். இன்னும் அதிகமாக வேண்டிக் கொண்டால் தன்னுடைய உறவினர்களுக்காக வேண்டிக் கொள்வார்கள். உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டா க்கின பிதாவாகிய தேவன் இந்த உலகத்தில் உள்ள ஒருவராகிலும் கெட்டுப்போவதை அவர் விரும்பாமல் எல்லோரும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகவே அவருடைய கிருபை பிரசன்னமாகி இருக்கிறது. இந்த இரக்கத்தை இரட்சிப்பு என்று எண்ணுங்கள்.

ஆகையால், நாம் செய்யவேண்டுவதென்ன? இந்த இரக்கத்தைப் பெறவும், அதை சம்பாதித்துக் கொள்ளவும் நாம் செய்யவேண்டிய காரியங்கள் அநேகம் இருக்கிறது. ''நாம் அவபக்தியையும், லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம் பண்ணி '' என தீத்து 2:12-ல் படிக்கிறோம். தேவனுடைய மனுஷன் எப்படிவேண்டுமானாலும் வாழலாம் என்பதல்ல. தேவனுடைய மனுஷன் இப்படித்தான் வாழவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். ஆகையால், நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே வாழவேண்டும். நம்முடைய பேச்சும் செயல்பாடுகளும் பக்திக்குரியதாகவும், நம்முடைய நடைமுறை வாழ்க்கை பக்திக்குரியதாகவும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயிராமல் தெளிவானவர்களாகவும் இருக்கக் காணப்படவேண்டும். நம்முடைய முற்பிதாக்களில் யோசேப்பு போன்றோர் இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தனர். நாமும் அந்தவிதமாக வாழும்போது தேவ கிருபை நம்மை காத்துக்கொள்ளும். ''உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்;

ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை'' என யோவான் 2:15–ல் பார்க்கிறோம். சதா உலகம், உலகம் என்று உலக வேலைகளைப் பிடித்துக்கொண்டு வாழ்ந்து தேவனுடைய மாபெரும் கிருபையை அசட்டை செய்கின்றனர். நாம் காண்கின்ற யாவற்றையும் பிதாவாகிய தேவன் ஆறுநாட்களில் சிருஷ்டித்தார் என திருமறை நமக்குப் போதிக்கிறது. அவ்வாறு உண்டாக்கப்பட்ட நாம் சிறுசிறு வேலைகளை செய்துகொண்டு அதுவே பெரிய வேலையென்று நினைக்கிறோம். அதிலே அதிக கவனம் செலுத்தி நாளடைவில் அதில் அன்புகூரவும் ஆரம்பித்து விடுகிறோம். இப்படியே உலகம் அநேகரை பற்றிப்பிடிக்கிறது. இப்படிச்செய்யும்போது தேவனுடைய உன்னதமான அன்பை இழக்கிறவர்களாக இருப்போம்.

தேவனுடைய கிருபையின் இரகசியம் என்ன? தேவன் தம்முடைய கிருபையின் இரகசியத்தை வெளிப்படுத்த சித்தமானார். ''அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக் கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்'' என்பது தேவ கிருபையின் இரகசிய மாயிருக்கிறது (1தீமோ.3:16). இதையாரும் ஒப்புக்கொள்ளாமல் இருக்கமுடியாது. இது உலகமறிந்த உண்மையாயிருக்கிறது. இது எல்லோருக்கும் வெளிப்படுத்தப்பட்டது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார். ஆம், கிறிஸ்துவானவர் அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார். அவர் கீழ்ப்படிந்தவராகிய தம்மைத்தாமே தாழ்த்தினார். அவர் நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார். இயேசுவை சிலுவையில் அறையும்படியாக ஜனங்கள் கூக்குரலிடுகையில் பிலாத்துவின் மனைவி, அவன் நியாயாசனத்தில் உட்காந் திருக்கையில் ஆளனுப்பி நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று சொல்லச் சொன்னாள். அவர் நீதிபரராயிருந்த படியினாலும், அவர் நிமித்தமாக அன்று இரவு அவள் சொப்பனத்தில் அநேக பாடுகள் பட்டபடியினாலும் அப்படிச் சொன்னாள். மேலும், தேவதூதர்களால் காணப்பட்டார். ஆம், அவருடைய பிறப்பின்போது திரளான சேனைகள் தோன்றி உன்னதத்திலே தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானம் உண்டாவதாக என்று சொன்னார்கள். மூன்றரை ஆண்டுகள் தேவனுடைய சுவிசேஷத்தை எருசலேமைச்சுற்றியுள்ள நாடுகளில் பிரசங்கித்தார். அநேக யூதர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் தேவனை அறியாத அநேகர் ஏற்றுக்

கொண்டு மனந்திரும்பினார்கள். உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார். கிறிஸ்துவானவர் பிறந்தது முதல் இன்றுவரை அவரை உலக ஜனங்கள் விசுவாசித்து ஏற்றுக் கொண்டு வருகிறார்கள். அவர் மகிமையிலே எடுத்துக்கொள்ளப்பட்டார். மனிதனோடு மனிதனாக வாழ்ந்து தேவனுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றி, முப்பத்து மூன்றாம் வயதில் அவர் சிலுவையில் அநேகருடைய பாவங்களை சுமந்து தீர்த்து பின்பு உயிர்த்து நாற்பது நாளளவும் தேவனுடைய காரியங்களை தம்முடைய சீஷர்களோடு பகிர்ந்துகொண்டு பின்பு மகிமையிலே எடுத்துக் கொள்ளப்பட்டார்.

ஆகையால், பவுல் தீத்துவுக்கு எழுதும்போது; தீத்து 2:15–ல் ''இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்து கொள். ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடாதிருப்பாயாக'' என்கிறார். உன்னதமான தேவனுடைய கிருபையின் இரகசியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கும்போது அவைகளைக் குறித்துப் போதிக்கையில் சகல அதிகாரத்தோடும் கடிந்துகொண்டு போதித்து புத்தி சொல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம். உலக ராஜ்யங்களில் ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அந்தக் கட்டளையை அந்த அரசு எவ்வளவு பகிரங்கமாக வெளியிடும். அந்த ராஜ்யத்தின் கீழ் உள்ள அனைவரும் அந்த கட்டளைக்கு கீழ்ப்படிவார்கள் அல்லவா? அப்படி உலக ராஜ்யங்களின் கட்டளைக்கு கீழ்ப்படியும்போது, உன்னதத்தின் கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டியது அவசியமல்லவா? ஆகையால், மேலும் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; ''சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்து கொண்டு, புத்திசொல்லு'' என்கிறார் (2தீமோ.4:2). புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளும் காதுகள் ஞானமானவைகள். அநேகர் இவ்விதமான புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளாமல் அதைக்குறித்து விமர்ச்சிப்பார்கள்

அன்பானவர்களே! உன்னதத்தின் கிருபையானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதை நீ விசுவாசிக்கிறாயா? நீ விசுவாசிப்பாயானால் இந்த இரக்கம் உன்னை பாதுகாக்கும், உன்னை இரட்சிக்கும். இந்த கிருபைக்கு செவிகொடுத்து உன்னை ஆயத்தப்படுத்துவாயானால் நீ தேவனோடு என்றென்றும் வாழும் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்வாய். மனிதன் உலகமுழுவதையும் ஆதாயம் செய்து கொண்டாலும் தன் ஜீவனை அவன் நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் ஒன்றுமில்லை. கர்த்தருடைய சத்தத்திற்கு செவி கொடுத்து அவன் கீழ்ப்படியும் போது எல்லையில்லா சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளுவான். நீங்கள் இவைகளைப்

பெற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட பிரயாசப்படுங்கள். தேவனுடைய உன்னதத்தின் கிருபையை அசட்டை பண்ணாமல் அவருடைய வல்லமையுள்ள வசனங்களுக்குச் செவிகொடுங்கள். தேவ கிருபை எப்பொழுது உங்களுக்கு உதவி செய்யும்?

பவுல் கொலோசெய சபையாருக்கு எழுதிய கடிதத்தில் இதைத் தெளிவு படுத்துகிறார். ''அந்த நம்பிக்கையைக்குறித்து, நீங்கள் முன்னமே சத்தியவசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப் பட்டீர்கள்; அந்தச் சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பி பலன் தருகிறது போல, உங்களிடத்திலும் வந்து, நீங்கள் அதைக் கேட்டு, தேவ கிருபையைச் சத்தியத்தின்படி அறிந்துகொண்ட நாள்முதல், அது உங்களுக்குள்ளும் பலன்தருகிறதாயிருக்கிறது'' என்கிறார் (கொலோ.1:6). தேவக் கிருபையை சத்தியத்தின்படி அறிந்து கொள்ளாமல் நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன் என்று ஒருவர் நினைத்துக் கொண்டிருப்பாரேயானால் அவருடைய விசுவாசம் வீணாய் போய்விடும்.

சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வசனத்தை இங்கே நினைவுகூர்ந்து பாருங்கள். சத்தியம் சத்தியமாகவே இருக்கிறது. சத்தியத்தை சத்தியத்தின்படி அறிந்துகொள்ளாவிட்டால் அது நமக்கு உதவாது. ஏடிஎம் பயன்படுத்துகிறவர்கள் தங்களுடைய பாஸ்வேர்டை சரியாக அழுத்தினால் தான் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். உலக வங்கி இப்படி ஒரு சரியான வழிகாட்டியை வைத்திருக்கும் போது; உன்னதத்தின்தேவன் அவருடைய கிருபையை அறிந்தகொள்ள சத்திய வழியை ஏற்படுத்தியிருக்கிறார். அதை சரியாக கடைபிடிக்கிறவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள். ஆகையால் அன்பானவர்களே, தேவ கிருபையை சத்தியத்தின்படி அறிந்து கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

✝

---

**இளைஞர்களுக்கான சில புத்திமதிகள்**

✍ நீதிமான்களில் பாதைகளில் நட (நீதி2:20).

✍ பெற்றோர்களுக்குக் கீழ்ப்படி (நீதி3:11).

✍ தீயவர்களோடு சேராதே (நீதி 1: 10 –19)

✍ எல்லாக் காவலோடும் இருதயத்தைக் காத்துக்கொள் (நீதி 4:23)

# விதையும், இதயமும்

## The Seed and The Heart

*Benny Martin*

**வி**தைக்கிறவனுடைய உவமையிலிருந்து சில உண்மைகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள நான் ஆசைப்படுகிறேன். லூக்கா எட்டாம் அதிகாரத்தில் இந்த உவமை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது விதைக்கிறவனுடைய உவமை என்றழைக்கப்பட்டாலும், இது உண்மையில் விதைக்கிறவனைப் பற்றியில்லாமல் விதை விழும் நிலத்தைப் பற்றியே உள்ளது. இவ்வசனப் பகுதியில் உலக இரட்சகர் இவ்வுலகிலுள்ள ஒவ்வொருவரைப் பற்றியும் விவரிக்கிறார். என்ன! என்னைப் பற்றி இவ்வசனப் பகுதியில் இயேசு கிறிஸ்து விவரித்திருக்கிறாரா என்று நீங்கள் புருவத்தை உயர்த்துவது எனக்குத் தெரிகிறது. உங்கள் பெயரும் என் பெயரும் இங்கே நம் இரட்சகரால் குறிப்பிடவில்லை என்பது உண்மைதான். ஆனால், உங்கள் இருதயத்தைப் பற்றியும், என் இதயத்தைப் பற்றியும் இவ்வசனப் பகுதியில் அதாவது இந்த விதைக்கிறவனுடைய உவமையில் விவரித்திருக்கிறார் [லூக்கா 8:4–15].

### வழியருகே இருதயம்

நம் அருமையான இயேசு முதல் வகையான இருதயத்தை வழியருகே இருதயம் என்று வரையறுக்கிறார். [லூக்கா 8:11] ல் விதை தேவனுடைய வசனம் என்று உவமையின் கருப்பொருளைத் தெரிவித்திருக்கிறார். நம் இந்தியா போன்ற விவசாய நாட்டில் நிலத்தில் நாமே விதை விதைத்திருப்போம் அல்லது மற்றவர்கள் விதைப்பதையாவது பார்த்திருப்போம். ஒவ்வொரு சிறு விதையிலும் ஜீவன் இருக்கிறது. அது நம் கண்ணுக்கு முன்பாக மண்ணிலிருந்து முளைத்து தழைத்து கனி தருவதை நாம் அறிந்திருக்கிறோம். மண்ணில் விதைக்கப்பட்ட விதை மிகுந்த வல்லமையுடன் மண்ணை துளைத்துக்கொண்டு முளைக்கிறது. ஆவிக்குரிய விதையாகிய தேவனுடைய வசனத்திற்கும் மிகுந்த வல்லமை உண்டு. அதற்கு எல்லையே இல்லை! இப்போது வழியருகே இருதயத்திற்கு மறுபடியும் வருவோம். இவ்வகையான இருதயத்தைக் கொண்டிருக்கும் ஒரு நபர் தேவனுடைய வசனத்தை தன் இருதயத்தின் மேல் தட்டில் மட்டும் வைத்திருக்கிறார். அதைத்தன் இருதயத்திற்குள் ஊடுருவ

அனுமதிப்பதில்லை. (மத்தேயு 13:19)ல், நம் ஆண்டவர் இவ் வகையான இருதயத்தைக் கொண்டிருப்பவர்கள் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கிறார்கள் என்று சொல்கிறார். தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போது அவர்களுக்கு எந்த விதமான உணர்வோ, உற்சாகமோ உள்ளத்தில் ஏற்டுவதில்லை. எனவே, பிசாசானவன் வந்து வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப் போடுகிறான். அருமையானவர்களே! நம்மில் ஒருவருக்கும் இவ்வகையான இருதயம் அறவே வேண்டாம்.

**கற்பாறை இருதயம்**

இது இரண்டாவது வகையான இருதயம். இவ்வகையான இருதயத்தைக் கொண்டவர்கள் ஆரம்பத்திலே தேவனுடைய வார்த்தையை சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், இவ்வகையான இருதயத்தில் பிரச்சனை என்னவென்றால், இந்த நபருக்கு ஆவிக்குரிய வேர்கள் இருப்பதில்லை. மேலும், அவர் தேவனுடைய வார்த்தை உள்ளத்தில் ஊடுருவ அனுமதிப்பதில்லை. இவ்வகையான இருதயத்தைக் கொண்டிருப்பவர்கள் மேலோட்டமான ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்பவர்கள். நம் அருமை இரட்சகர் இவர்களுக்கு என்ன நடக்கும் என்று சொன்னார்? (மத்தேயு 13:21–ல்), **வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவார்கள்** என்று சொன்னார். நீங்களும் நானும் தேவனுடைய வார்த்தையை எப்படி இருதயத்திற்குள் ஆழமாக ஊடுருவச் செய்வது? அதற்கு அனுதின முயற்சியும், பயிற்சியும் தேவை. நாம் அனுதினமும் தேவனுடைய வார்த்தைகளை வாசித்தால் மட்டும் போதாது அவைகளை நாம் ஆழமாகவும், விரிவாகவும் சிந்திக்க வேண்டும். நம் அன்றாட வாழ்வில் தேவனுடைய வார்த்தைகளை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்று யோசித்து அவைகள் நம் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தத்தக்கதாக உள்ளத்தில் நாட்ட வேண்டும் (யாக்கோபு 1:21).

**முள்ளுள்ள இருதயம்**

இது மூன்றாவது வகையான இருதயம். இந்த முட்கள் தேவனுடைய வார்த்தையின் மீது எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது? இவைகள் தேவனுடைய வார்த்தையை நெருக்கிப் போடுகிறது. இது, இத்தகைய இருதயத்தை உடைய நபரின்

ஆவிக்குரிய வாழ்க்கையில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். இவர் ஆவிக்குரிய கனியைக் கொடுப்பதற்கு வாய்ப்பே இல்லை. விவசாய ரீதியாகப் பார்த்தால், ஒரு விவசாயி தன் பயிர்கள் நடுவில் முட்கள் வளர்ந்தால் என்ன செய்வார்? அதை உடனே அகற்றிப் போடுவார். ஏனென்றால், அம்முட்கள் பயிர்களை நெருக்கிப் போட்டு, அவைகள் அவருடைய வாழ்வையும், வாழ்வாதாரத்தையும் வற்றச் செய்துவிடும். பிரியமானவர்களே! நம் இருதயங்களில் ஆவிக்குரிய முட்கள் வளர்ந்தால் அவசரமாக, அவசியமாக அகற்றிட வேண்டும். இந்த உவமையில் உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து எவைகளை ஆவிக்குரிய முட்களாக சொல்லியிருக்கிறார்? இப்பிரபஞ்சத்திற்குரிய கவலைகள், ஐசுவரியம், சிற்றின்பம் போன்றவைகளைத் தான். இவைகள் நம் இருதய விருட்சத்தில் கூடுகட்டிக் குடியிருக்க நாம் அனுமதித்தால் தேவனுடைய வார்த்தைகளையும், நம் வாழ்க்கையையும் நெருக்கி விடும். மத்தேயு 13:22-ல், நம் ஆண்டவர் ஐசுவரியத்தின் மயக்கம் என்று குறிப்பிடுவதில் எந்த தயக்கமும் காட்டவில்லை.இவ்வுலகம் ஐசுவரியத்தின் மயக்கத்தில்தான் மயங்கிக் கிடக்கிறது. பணப்பசி நிறைந்த இவ்வுலகம் காலை தோறும் பணச் சிந்தனையில் தான் கண் விழிக்கிறது. **பண ஆசை எல்லாத்தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை கச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்** என்று வேதாகமம் பண ஆசையைக் குறித்து எச்சரிக்கிறது [1தீமோத்தேயு 6:10].

**நல்ல இருதயம்**

இது நான்காவது வகையான இருதயம். இந்த இருதயத்தைத்தான் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நல்ல நிலத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறார். பயிர் செய்யும் ஒரு விவசாயிக்கு நல்ல நிலம் கிடைத்தால் அது எல்லையில்லா மகிழ்ச்சியைக் கொடுக்கும். எனவேதான், நீங்களும் நானும் இவ்வகையான இருதயத்தைக் கொண்டிருக்க இறுதிவரை பாடுபட வேண்டும். மேலும், இயேசு கிறிஸ்து இவ்வகையான இருதயத்தைப் பற்றிச் சொல்லும்போது உண்மையும் நன்மையுமான இருதயமாக இருக்கிறபடியால் தீய சிந்தனைகள் இங்கு குடியிருக்கவே முடியாது என்றும் இந்த நல்ல இருதயத்தி லிருந்து யாரும் தேவனுடைய வார்த்தையைப் பிரிக்கவோ,

பறிக்கவோ முடியாது. அடுத்ததாக, இவ்வகையான இருதயத்தைக் கொண்டிருக்கும் நபர் பொறுமையுடனே பலன் கொடுக்கிறார். அதாவது, இவர் தேவனுடைய வார்த்தைகளை கேட்கிறவராய் மாத்திரம் இராமல் அதின்படி செய்கிறவருமாயிருக்கிறார் [யாக்கோபு 1:11]. உண்மையும் நன்மையுமான இருதயமே தேவனுக்குப் பிரியமான இருதயமாக இருக்கிறபடியால், இவ்வகையான இருதயத்தை அதாவது, உண்மையும் நன்மையுமான இருதயத்தைக் கொண்டு தேவனைப் பிரியப்படுத்துவோம்.

✝

## பெருமையின் அபாயம்

1. பெருமை ஜனங்களை கொடூரமான காரியங்களைச் செய்ய வைக்கிறது [ எஸ்தர் 3:5,6]

2. பெருமை அழிவைக் கொண்டு வருகிறது [ எஸ்தர் 6:11 நீதிமொழிகள் 16:18]

3. பெருமை ஒருவருடைய வெற்றியைக் குறித்து தவறான மதிப்பீட்டிற்குள் வழிநடத்துகிறது. [ உபாகமம் 8:11-14]

4. பெருமை ஒருவர் தன்னுடைய சாதனைகளைக் குறித்து தம்பட்டம் அடிக்க வைக்கிறது [ தானியேல் 4:30]

5. பெருமை பழிவாங்குதலுக்கு வழிவகுக்கிறது [யாத்திராகமம் 14:5]

6. பெருமை உலகத்தன்மைக்கு வழிவகுக்கிறது [ I சாமுவேல் 8:19,20]

7. பெருமை ஒருவர் ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வைக்க காரணமாகிறது [எசேக்கியேல் 28:4:5]

# இப்பொழுது அறிந்திருக்கிறேன்

## Now I Know

## Cecil May, Jr.

ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படிக்கு தன்கையை நீட்டிக் கத்தியை எடுத்தான். அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து ஆபிரகாமே, பிள்ளையாண்டான்மேல் உன் கையைப்போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்தபடியினால் நீ தேவனுக்கு பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார் (ஆதியாகமம் 22:12)

ஈசாக்கு ஆபிரபாமால் அதிகமாக நேசிக்கப்பட்டார், எல்லா தகப்பன்மார்களும் தங்கள் பிள்ளைகளை நேசிப்பதுபோல் ஆபிரகாமும் ஈசாக்கை நேசித்தார். இருந்தபோதிலும் ஈசாக்கு ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணைப்பட்ட்ட குமாரனாகவும், ஈசாக்கினிடத்தில் ஆபிரகாமின் சந்நிதி விளங்கும் என்று தேவனால் சொல்லப்பட்ட படியாலும் ஈசாக்கு விசேஷித்த குமாரனாக இருந்தான் (ஆதியாகமம் 21:12). தேவன் ஆபிரகாமுக்கு வாக்குதத்தம்பண்ணின ஒவ்வொரு வாக்குதத்தமும் ஆபிரகாமின் சந்ததியில் நிறைவேற்றப்பட வேண்டிய தாயிருந்தது, ஆபிரகாமிடத்தில் மாத்திரமல்ல. எனவே, தேவன் ஈசாக்கு மூலமாக தன் சந்ததியை தழைக்கச் செய்வார் என்று ஆபிரகாமுக்கு அபிரிதமான விசுவாசம் இருந்தது. அதனால்தான் ஆபிரகாம் தன் விசுவாச முதிர்ச்சியால் தன் ஏகபுத்திரன் ஈசாக்கை கொல்லத் துணிந்தார்.

ஆசிரியரின் குறிப்பு : ஆபிரகாமுக்கு எந்த அளவு விசுவாசம் இருந்ததோ அதே அளவு விசுவாசம் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைக்கும் இருந்து அனுதின ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும். ✝

# ஏமாற்றப்பட்டேன்

# Bamboozle

*Donald R. Fox*

**ஆ**ங்கில மொழியில் சில வார்த்தைகள் பல அர்த்தங்களைக் கொடுக்கிறவைகளாக இருக்கின்றன. அப்படி ஒரு வார்த்தைத்தான் **Bamboozle** எனும் வார்த்தை. இவ்வார்த்தை ஏமாற்றுதல் வஞ்சித்தல், மாயையான தோற்றம் அளித்தல் போன்ற பொருள்களைக் கொடுக்கின்றன. இந்த வித்தியாசமான வார்த்தையைக் குறித்து நான் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்த போது, என் வாழ்க்கையில் சில முறை ஏமாற்றப்பட்டதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். நான் அதிகமாக ஏமாற்றமடையவில்லை என்றாலும் கூட தவறான வைகளை சரியானவைகள் என்று நினைத்து ஏற்றுக் கொண்டிருக்கி றேன். பொதுவாக, வாழ்க்கையில் வஞ்சிக்கப்படுவது பயங்கரமான ஓர் அனுபவமாகும். சத்தியம் ஒருவரை விடுதலையாக்கும் எனும் உண்மையை அறிந்து கொள்வது நன்மையானது, சரியானதுமாகும். சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் ( யோவான் 8:32).

வஞ்சகமான முறையில் நாம் காரியங்களை சாதிப்பதைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கையில் சில காரியங்களில் என்னை ஏமாற்ற முடியாது என்பதை நான் அறிந்திருக்கிறேன், உதாரணமாக, ஆங்கில எழுத்துக்களை குறித்து என்னை ஏமாற்ற முடியாது. தமிழ்மொழியில் உள்ள எல்லா வார்த்தைகளுக்கும் எனக்கு அர்த்தம் தெரியும் என்று சொல்லவில்லை, அதற்கு வழியே இல்லை, வாய்ப்பே இல்லை. ஆனால், ஆங்கில அகராதியின் துணை கொண்டு வார்த்தைகளின் அர்த்தத்தை என்னால் சொல்ல முடியும்.

மேலும், வேதாகம சத்தியம் தேவனால் கொடுக்கப்படாத சத்தியம் போன்றவைகளைக் குறித்து என்னை வஞ்சிக்க முடியாது. பல வருடங்களாக நான் வேதாகமமாகிய தேவனுடைய வார்த்தையில் நம்பிக்கை வைத்திருக்கிறேன். வோகமத்தின் எல்லா காரியங்களும் எனக்குத் தெரியுமா? இல்லை எனக்குத் தெரியாது. இருந்த போதிலும்யச, நமது பக்திவழி காட்டியாகிய வேதாகமத்தை ஏற்றுக் கொள்வதின் மூலமாக எப்போதுமே என்னால் சத்தியத்தை தீர்மானிக்க முடியும்.

எது சரி, எது தவறு என்று உங்களால் கண்டுபிடிக்க முடியுமா? வேதாகம விதிகளும், அளவுகளும், நற்கிரியையுமான அரசாங்கங்கள் மற்றும் அதன் சட்டங்களின் அடையாளமாயிருக்கிறது. தங்க விதியைக் குறித்து ஆழ்ந்து சிந்தியுங்கள். ஆதலால் மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களுமாம் (மத்தேயு 7:12). வேதாகமம் தான் உலகில் ஒழுக்க நெறிகளுக்கான ஒரே சரியான அளவுகோலாக இருக்கிறது. உலகிலுள்ள அவிசுவாசிகளை வேதத்தில் குறை கண்டுபிடிக்கும் படியாக நாம் சவால்விடலாம். பிலாத்து சத்தியமாவது என்ன என்றான் (யோவான் 18:38). இக்கேள்விக்கான சுலபமான பதில் உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம் (யோவான் 17:17) என்பதே.

மனிதப் புரிதலுக்கு அப்பால் நிறைய இரகசியங்களும், அறியாதவைகளும் இருப்பதை நாம் அறிவோம். குழப்பமும், முரண்பாடும் நிறைந்த மனித தத்துவங்களை விட தேவனுடைய வார்த்தையை நம்புவதையே தெரிந்து கொள்வேன். மறைவானது தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள் வெளிப்படுத்தப் பட்டவைகளோ இந்த நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்யும் படிக்கு நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள் (உபாகமம் 29:29).

சில வேளைகளில் நாம் மனிதர்களால் உருவாக்கப்பட்ட கொள்கைகளைப் பற்றி Phillp Schalb சொல்லும் போது இவைகள் பிரிவினைவாதப் பிரச்சனைகளையும், பகையுணர்வையும் உயிரோடு வைத்துக் கொள்கின்றன. **Schalb** அவர்கள் சொன்னது போல மனிதக் கொள்கைதான் எப்போதும் வகுப்புவாதம் அல்லது பிரிவினை வாதப் பிரச்சனைக்குத்தான் வழிவகுக்கும்.

மத அமைப்புகள் அல்லது பல தரப்பட்ட இறையியல் கொள்கை களினால் நீங்கள் வஞ்சிக்கப்படாதிருங்கள். ஏனென்றால், விசுவாசம் அல்லது ஒழுக்கநெறி சம்பந்தமான காரியங்களில் அவைகளுக்கு எந்த அதிகாரமுமில்லை. நமக்குத் தேவையான சட்டதிட்டங்களும், ஒழுக்க நெறிகளும் தேவ ஆவியினால் ஏவப்பட்ட கடைசி எழுத்தாளர் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக ஆமென் என்று

எழுதி கொடுத்து முடிக்கப்பட்டுவிட்டன ( வெளிப்படுத்தின விசேஷம் 22:21. இன்றைய நாட்களில் புதிய ஒழுக்க நெறிகளுடன் தாங்கள் வாழ்வதாக பலர் சொல்ல நாம் கேள்விப்படுகிறோம். இது மிகப்பெரிய ஏமாற்று வேலையாகும். அது மாத்திரமல்ல, இன்றைய நாட்களில் மதச்சார்பற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் மனிதர்கள் முழு மூச்சுடன் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். நம் சமுதாயம் தரை மட்டத்திற்கு தாழ்த்தப்பட்டதற்கு காரணம் நாம் நம் பாரம்பரியத்தை மறந்து போனதும், தேவனால் கெடுக்கப்பட்ட ஒழுக்க நெறிகளை நிராகரித்ததுமே ஆகும். உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலால் எல்லாப் பொய் வழிகளையும் வெறுக்கிறேன் (சங்கீதம் 119:104).

✝

---

## உங்களுக்குத் தெரியுமா?

*கிறிஸ்துவின் சபை வேதாகமம் அல்லாமல் வேறெந்த சபை ஒழுங்கு முறையையோ, கொள்கைப் புத்தகத்தையோ, வழிகாட்டி கையேடுகளையோ ஆதரிப்பதில்லை. கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்கள் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, கர்த்தரால் சபையில் சேர்க்கப்பட்டு, கிறிஸ்தவர்கள் என்று மட்டும் அழைக்கப்படுகிறார்கள் (அப்போஸ்தலர்கள் 2:47; 11:26; ரோமர் 16:16). கிறிஸ்துவின் சபை தேவனுடைய வார்த்தையோடு ஒன்றையும் கூட்டுவதுமில்லை. அதிலிருந்து ஒன்றையும் எடுத்துப் போடுவதுமில்லை (உபாகமம் 4:2) நீதிமொழிகள் 30:6; வெளிப்டுத்தின விசேஷம் 22:18).*

✝

---

## வேண்டாமே ஒத்தி வைத்தல்

- **வேத வசனங்களை கேட்க ஒத்தி வைக்கிறார்**
- **மனமாற்றம் அடையும் வாய்ப்பை ஒத்தி வைக்கிறார்**
- **மனமாற்றத்தை ஒத்தி வைக்கிறார்.**
- **இரட்சிப்பின் சிலாக்கியத்தை ஒத்தி வைக்கிறார்**
- **ஆனால், இரட்சிப்பிற்குள் வராதவர்களால் நியாயத்தீர்ப்பின் நாளில் நித்திய நரகத்தை ஒத்தி வைக்க முடியாது.**

# தேவனுடைய வார்த்தை
# ஜீவனுள்ள வார்த்தை
# Living Word

*Patrick Morrison*

**வே**தாகம் மற்றவர்களை வழி நடத்த, கண்டித்து உணர்த்த வல்லமையில்லாத ஓர் உயிரற்ற கடிதம் என்று அதற்கெதிரான குற்றம்சாட்டுகிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இன்னும் பலர், தேவன் வேத வாக்கியங்கள் மீதோ, வேத மாணக்கர் மீதோ எவ்வித செயல்பாட்டையும் காட்டவில்லையென்றால் அல்லது வேத வாக்கியங்களுக்கு உயிர் கொடுக்கவில்லையென்றால் அவைகள் அர்த்தமற்றவைகளாக மாறிவிடும் என்று உறுதியாய் சொல்கிறார்கள். அதே போல், வேத வாக்கியங்களை ஜனங்களுக்கு புரிய வைக்கிற செயலில் பரிசுத்த ஆவியானவரின் பணிபற்றி தவறான விளக்கங்கள் வரம்பின்றி வலம் வருகின்றன. வேத வாக்கியங்கள் மீது இவர்கள் வைக்கும் குற்றச்சாட்டுகள் உண்மைதானா? வேதாகமாகிய தேவ னுடைய வார்த்தை வேறொன்றும் இல்லையா? இன்றைய நாட்களில் தேவன் தம்முடைய வார்த்தை மூலமாக நம்மோடு பேசுகிறார் என்பதை நிரூபிப்பதற்காக ஏதாவது வித்தியாசமான ரீதியில் அல்லது அற்புத அடையாளங்கள் மூலமாக எதையாவது செய்ய வேண்டுமா?

இந்த விவாதத்தில் தொலைந்து போன ஓர் உண்மை என்ன வென்றால், தேவன் ஏற்கனவே தம்முடைய வார்த்தையை உயிரோட்ட முள்ளதாக மாற்றுவதற்கு தேவையான காரியங்களை செய்துவிட்டார். பவுல் தீமோத்தேயுவுக்கு வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்று நினைப்பூட்டினார் (II தீமோத்தேயு 3:16). ஏவப்படுதல் என்னும் வார்த்தை ஒரு கூட்டு கிரேக்க வார்த்தையிலிருந்து உருவடுத்து வருகிறது. அதன் பொருள், தேவன் சுவாசம் விட்டார் என்பதாகும். தேவனுடைய சுவாசம் உயிரற்ற மண்ணினால் சரீரத்திற்கு உயிரைக் கொடுத்தது. தேவன் ஜீசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். தேவன் ஜீவனையும், தம்முடைய வார்த்தைக்கு ஜீவனையும் ஒரே விதமாக கொடுத்தார். இரண்டிற் குள்ளும் தேவன் ஜீவசுவாசத்தை ஊதினார். தேவன் பரிசுத்த ஆவியானவர் மனிதனுக்கான தம்முடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்கு ஜீவனைக் கொடுத்தார்.

பேதுருவும் தீர்க்கதரிசனமானது ஒருக்காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை, தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் என்று பதிவு செய்திருக்கிறார். விலையேறப்பெற்ற தேவனுடைய வார்த்தையை மனிதனுக்குக் கொடுக்கும் பொறுப்பு பரிசுத்த ஆவியான வருக்கு உண்டு. பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய மனுஷர்கள் தேவ வார்த்தையை எழுவதற்கு அவர்களை ஏவினார். தேவனுடைய வார்த்தை ஆவியின் பட்டயமாயிருக்கிறது [எபேசியர் 6:17]. தேவனிடத்திலிருந்தோ, கிறிஸ்துவிடத்திடலிருந்தோ அல்லது பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்தோ வரும் வார்த்தைகள் ஒரு போதும் உயிரற்றதாக இருந்ததில்லை. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஆவியே உயிர்ப்பிக்கிறது. மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது, நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது என்று சொன்னார் [யோவான் 6:63]. வார்த்தை பிதாவினிடத்திலிருந்து ஜீவனுள்ள செயல்படுகின்ற ஆத்துமாவை இரட்சிக்கின்ற செய்தியைக் கொடுக்காதா?

தேவனுடைய வார்த்தையை உண்மையாய் பதிவு செய்யும் பொறுப்பு கொடுக்கப்பட்டவர்கள் தேவனுடைய வெளிபடுத்தப்பட்ட சித்தத்தின் வல்லமையை எழுதும்படி வழிநடத்தப்பட்டார்கள். பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷ செய்தி மூலமாக ஆத்துமாக்களை தேவனிடத்தில் வழிநடத்த பரிசுத்த மனிதர்களின் கரங்களைப் பயன்படுத்தினார். தேவன் அச்செய்தியில் வல்லமையை வைத்து அதன் மூலம் மனிதர்கள் அச்செய்திக்கு செவி கொடுத்து அதற்கு கீழ்ப்படியும் போது இரட்சிக்கப்படுவது தேவனுடைய சித்தமா யிருக்கிறது. தேவ ஆவியினால் எழுதப்பட்ட இந்த மனிதர்கள் தேவனுடைய வார்த்தையின் வல்லமையில் குறைவுள்ளதென்றோ அல்லது இது ஓர் உயிரற்ற கடிதம் என்று சொல்லியிருக்க மாட்டார்கள். யாக்கோபு ஆசிரியர் இவ் விதமாக எழுதுகிறார். ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க் குணத்தையும் ஒழித்து விட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப் பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள் [யாக்கோபு 1:21]. சுவிசேஷ செய்தி வல்லமை நிறைந்தது என்பதை பவுல் புரிந்து கொண்டார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப் படேன்; முன்பு யூதரிலும்



பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது ( ரோமர் 1;16). பவுலுக்கு அந்தச் செய்தியில் வல்லமை ஜீவனுள்ள தேவனால் வைக்கப்பட்டது என்பது தெரியும். எபிரெய எழுத்தாளரும் வேத வாக்கியங்களின் வல்லமையை அறிந்திருந்தார். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும் இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது (எபிரெயர் 4:12). தேவனுடைய வார்த்தை எப்போதும் உயிரோட்டமுள்ளதாயிருக்கிறது. ஜீவ வார்த்தை ஜீவனின் ஆதாரத்திலிருந்து வருகிறது. தேவனுடைய வார்த்தையில் எப்போதுமே ஜீவன் இருக்கும். ஏனென்றால், அவ்வார்த்தையைக் கொடுத்த தேவன் ஒரு போதும் மரிப்பதில்லை!

✝

---

***பிரச்சனைகள் வரும்போதும், சங்கட சமயங்களிலும் நாம் கையைப் பிசைவதைக் காட்டிலும் எல்லாவற்றையும் தேவனுடைய கைகளில் விட்டு விட்டால், கடைசியில் தேவனுடைய கைகள் எல்லாவற்றுக்கும் மேலாக இருந்து தீர்க்கமாக விசாரிக்கிறபடியால், உங்கள் கவலையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்ககள்( I பேதுரு5:7)***

# தேவனுடைய வார்த்தை

## உங்கள் வேதாகமத்தை வாசித்து அதற்கு கீழ்ப்படியுங்கள்

## Read and obey Your Bible

## Cecil May, Jr.

ஒரு வேதபாட வகுப்பில் அதில் பங்கெடுப்பவர்கள் இந்த வசனம் என்ன பொருள்படுகிறது என்று வெறுமனே கேட்டால், அது அறியாமையை பகிர்ந்து கொள்ளும் பயிற்சியாக இருக்குமே தவிர கற்றுக்கொள்ளும் அனுபவமாக இருக்காது. யாரோ ஒருவர் வேத வாக்கியங்களை சரியாகப் புரிந்துகொண்டு அதை மேற்கோள் காட்ட வேண்டும். ஒரு பிரச்சனையில் அங்கே எழுப்பப்படும் கேள்விகளுக்கு ஒரு வேதாகம உபதேசத்தையோ, அல்லது ஒரு வேத வசனப் பகுதியையோ சுட்டிக் காட்டாமல் அக்காரியத்தைக் குறித்து தனிப்பட்ட விவாதங்களில் ஈடுபடுவதோ, மத சம்மந்தமான அல்லது ஒழுக்க ரீதியான விவாதங்களில் ஈடுபடுவதோ அர்த்தமற்றதாயிருக்கும்.

இக்காரியம் பிலேயாமல் சிறப்பாக விவரிக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது பிலேயாம் பாலாக்கை நோக்கி : பாலாக் எனக்குத்தன் வீடு நிறைய வெள்ளியும் பொன்னும் கொடுத்தாலும் நான் என் மனதாய் நன்மையாகிலும், தீமையாகிலும் செய்கிறதற்குக் கர்த்தரின் கட்டளையை மீறக்கூடாது. கர்த்தர் சொல்வதையே சொல்வேன் என்று சொன்னான் (எண்ணாகமம் 24:12). பிலேயாம் இந்த வார்த்தைகளை எல்லாம் மிகச்சரியாக சொல்லியிருந்தாலும் கூட, அவர் சரியாக செய்ய விரும்பவில்லை. பிலேயாம் மோவாபின் ராஜாவாகிய பாலாக்கின் ஐசுவரியத்தை விரும்பி இருக்கிறார். இவர் தேவன் தம்முடைய ஜனங்களை சபிப்பது எந்த நன்மையையும் பயக்காது என்பதை நன்றாக அறிந்திருந்தபோதும் தான் செய்த காரியங்களை நியாயப்படுத்திக்கொண்டு பாலாக்கின் பின் தொடர்ந்தான்.

பொதுவான அடிப்படையில் பார்க்கும்போது மத சம்மந்தமான விவாதங்கள் 1. வேதாகமம் சரியாக மேற்கோள் காட்டப்படாதவரை 2. விவாதத்தில் ஈடுபடும் நபர்கள் தேவன் சொல்கிறதை ஏற்றுக்கொண்டு செய்யும் வரை தீர்க்கப்படுவதில்லை.

செம்மையான வழியைவிட்டுத் தப்பி நடந்து பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப் போனவர்கள்; அவன் அநீதத்தின் கூலியை விரும்பி தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்து கொள்ளப்பட்டான. பேசாத மிருகம் மனுஷப் பேச்சை பேசித் தீர்க்கதிரிசியினுடைய மதிகேட்டைதடுத்தது (**II** பேதுரு 2:15,16).

இச்சிறிய புத்தகத்திலிருந்து நாம் எதை கற்றுக்கொள்ள முடியும்? அவைகள் சிறியவைகளாக இருந்தாலும் கூட அவைகளில் இடம் பெற்றிருக்கும் தகவல்களிலிருந்து முக்கியமான பாடங்களை நாம் கற்றுக்கொள்ள முடியும்.

ஆகாய் புத்தகத்தில் தேவனுடைய ஜனங்கள் தேவாலயத்தை கட்டுவதற்கு பதிலாக பல சாக்கு போக்குகளை சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆகாய் 1:2 இவ்விதமாகச் சொல்கிறது. இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு ஏற்றகாலம் இன்னும் வரவில்லை என்று சொல்வதை கவனியுங்கள். ஆனால் கர்த்தர் விரும்பியது இது அல்ல. 3-4 வசனங்களில் இந்த வீடு பாழாய்கிடக்கும்போது நீங்கள் மச்சுப் பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ? என்று கர்த்தர் கேட்கிறார். தொடர்ந்து தேவன் சொல்லும்போது இப்போதும் சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக்கொண்டு வருகிறீர்கள். நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை குடித்தும் பரிபூரணமடைய வில்லை; நீங்கள் உடை உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர்விட வில்லை; கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான் உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (ஆகாய் 1:5-7).

தேவன் திரும்ப திரும்ப தம்முடைய ஜனங்களிடம் உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள் என்று சொல்கிறார். ஜனங்கள் புசிக்கவும், குடிக்கவும், விதைக்கவும், செய்தார்களே தவிர தேவ னுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. அவர்கள் தேவனுக்கு ஆற்ற வேண்டிய கடமையில் குறை வைத்தார்கள். நாமும் கூட வேத வாக்கியங்களை முழுமையாகப் படிக்கும் வாய்ப்பு இருந்தும் அதைக் கண்டு கொள்ளாமல் இருக்கிறோமா? நம் சிருஷ்டிகளின் மகத்துவத்தை உணர்ந்து கொள்ளும் காரணத்திற்காக கூட நாம் வேதவாக்கியங்களை முழுமையாக படிக்க வேண்டாமா?

இந்த தகவல்களை எல்லாம் நான் உங்களுக்கு தருவதாக நினைக்க வேண்டாம். தேவன் உங்களுக்கு இத்தகவல்களை தருவ தாக எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு முறை நீங்கள் வேதாகமத்தை வாசிக்கும் போதும் முழுமையாக அதை வாசியுங்கள். நான் சொல்வதின் பொருள் என்னவென்றால், தேவன் தம்முடைய தாசர்களைக் கொண்டு எழுதிக் கொடுத்திருக்கிறவைகள் எல்லாமே முக்கியமானதுதான். எனவே, வேதாகமத்தை நாம் ஒரு முறையாவது முழுமையாக படிக்க வேண்டும். நான் சொன்ன இத்தகவல்கள் தேவனுடைய வார்த்தையின் ஒவ்வொரு பகுதியையும் வாசிப்பதில் நீங்கள் அதிக நேரத்தை செலவழிக்க உங்களை உற்சாகப்படுத்தும் என்று நம்புகிறேன். ✝

## இரட்சிப்பு
## ஞானஸ்நானத்திற்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டதாக நீங்கள் சொல்லிக்கொண்டால்...
## *IF You Claim You Were Saved Before Baptism...*
**Alvin Tennings**

- *உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு முன்பாகவே நீங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள்?* பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் [அப்போஸ்தலர் 2:38].

- *உங்கள் பாவங்கள் கழுவப்படுவதற்கு முன்பாகவே இரட்சிக்கப் பட்டிருப்பீர்கள்?* நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் [ அப்போஸ்தலர் 22:16].

- *நீங்கள் மறுபடியும் ஞானஸ்நானத்திற்கு முன்பாகவே இரட்சிக்கபட்டிருப்பீர்கள் இயேசு பிரதியுத்தமாக?* ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் [யோவான் 3:5]

- *நீங்கள் கிறிஸ்துவோடு இணைக்கப்படுவதற்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள்?* ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்கள் [ கலாத்தியர் 3:27].

- *நீங்கள் இரட்சிப்பதற்கு முன்பாக இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள்?* அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானம் மாம்ச அழுக்கை நீக்க தலாயிராமல் தேவனைப் பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையாயிருந்து இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது

- *உங்களை கர்த்தர் இரட்சிப்பதாக வாக்குத்தத்தம் செய்த நேரத்திற்கு முன்பாகவே நீங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள்?* விசுவாசமுள்ள வனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான் [ மாற்கு 16:16].

*நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுவதற்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள்?* முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமை களாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப் பூர்வமாய்க் கீழ்ப்படிந்த தினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம் பாவத்திலிருந்து நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள் [ரோமர் 6:17,18].

*நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளும், அவருடைய இரத்தத்திற் குள்ளும் பிரவேசிப்பதற்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள்?* அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின் படியே இவருடைய இரத்தத் தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. [ எபேசியர் 1:7].

*உங்கள் ஆத்துமாக்கள் சுத்தமாவதற்கு முன்பாக நீங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள்?* ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களை சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால் சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள் [*I* பேதுரு 1:22].

*நீங்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்வதற்கு முன்னும் கிறிஸ்துவை உடையவராக மாறுவதற்கு முன்னும் இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள்?* தேவன் தமக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள். அப்போஸ்தலர் 5:32]; கிறிஸ்து வின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல [ரோமர் 8:9].

*உங்கள் விசுவாசத்திற்கு மதிப்பு உண்டாகும் முன்பும், அது அன்பில் வெளிப்படுவதற்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டீர்கள்?* அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும் [ கலாத்தியர் 5:6].

*நீங்கள் கீழ்ப்படிவதற்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள்?* ஆனால், இயேசு கிறிஸ்து இரட்சிப்பைப் பெறும் எல்லோ ருக்கும் கீழ்ப்படிதல் அவசியம் என்று கட்டளையிட்டிருக் கிறார்.

தமக்குக் கீழ்ப்படிந்த யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகியிருக்கிறார் [எபிரெயர் 5:9].

# இரட்சிப்பு

# சவுல் இரட்சிக்கப்பட்ட போது எங்கே இருந்தார்?

## *Where Was Saul When he Was Saved?*

**Royce Frederick**

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மிகப்பெரிய சத்துருக்களில் ஒருவனாக தர்சு பட்டணத்து சவுல் இருந்தான். சவுல் எருசலேம் சபையை அதிகமாய்ப் பயமுறுத்தி, அவர்களை சிதறடித்தான் [அப்போஸ்தலர் 8:14]. பின்பு கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை அறவே ஒழிக்க அவர்களை அந்நியப்பட்டணம் வரைக்கும் துரத்தினான் [அப்போஸ்தலர் 26:11]. சவுல் என்பவன் இன்னும் கர்த்தருடைய சீஷரை பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப்பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும், ஸ்திரீகளையாலும் தான் கண்டுபித்தால் அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டு வரும்படி, தமஸ்கு விலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான் [அப்போஸ்தலர் 9:12].

இருந்த போதிலும், சவுல் ஜெப ஆலயங்களில் பிரசங்கித்த செய்திகள் தான் முதலில் பேச நினைத்த செய்திகளிலிருந்து வித்தியாசப்பட்டது. ...கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான் [அப்போஸ்தலர் 9:20].

சவுலின் மனதையும், செய்தியையும் எது மாற்றியது? சவுல் தமஸ்குவுக்குப் போகும் பாதையில் ஒரு பிரகாசமான ஒளி அவனைச் சுற்றிப் பிரசித்து தரையிலே விழுந்தான். இயேசு சவுலிடம் பேசின பிறகு, சவுல் எழுந்து தன் கண்களைத் திறந்தான். ஆனால், அவனால் பார்க்க முடிவில்லை. அப்பொழுது கைலாகு கொடுத்து, அவனை தமஸ்குவுக்கு கூட்டிக் கொண்டு போனார்கள். அப்பட்டணத்தில் சவுல் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்தான் [அப்போஸ்தலர் 9:39,11]. பின்பு, இவர் தன்னுடைய நிருபங்களில் இரட்சிக்கப்பட்டவர்களோடு தன்னையும் சேர்த்துக் கொள்கிறார் [I தீமோத்தேயு 1:15,16; II தீமோத்தேயு 1:8–9; தீமோத் 3:5].

எனவே, சவுல் தான் இரட்சிக்கப்பட்ட போது எங்கே இருந்தார்? பெரும்பாலான மக்கள் சவுல் தமஸ்குவுக்குச் செல்லும் போது விசு வாசத்தினாலே மாத்திரம் இரட்சிக்கப்பட்டான் என்று போதிக் கிறார்கள். ஒரு பிரசங்கியார் சவுல் குதிரையிலிருந்து விழும்போது

அவர் தரையில் விழுவதற்கு முன்பாக இரட்சிக்கப்பட்டதாக பகிரங்கமாக அறிவித்தார். ஆனால், வேதாகமம் எந்த ஒரு குதிரை யையும், குறிப்பிடவில்லை. உண்மையில், சவுலும் மற்றவர்களும் நடந்து கொண்டிருந்தது போல் தெரிகிறது. கர்த்தர் சவுலை குருடாக்கின பிறகு சவுலோடு கூட சென்றவர்கள் கைலாகு கொடுத்து அவனைத் தமஸ்குவுக்கு கூட்டிக் கொண்டு போனார்கள் ( அப்போஸ்தலர்கள் 9:8; 22:11). இச்சம்பவத்தில் சவுல் குதிரையில் பயணம் செய்தார் என்று மிகைப்படுத்திச் சொல்வது தேவனிடத்தி லிருந்து வந்த ஒன்றல்ல. மனிதனிடத்திலிருந்து என்பது மனிதர் தேவ வெளிப்பாட்டிலிருந்து வந்த ஒன்றல்ல.

உண்மையாகவே, வேதாகமம் மிகத் தெளிவாக சவுல் தமஸ்கு வுக்குப் போகும் போது அல்ல, தமஸ்குவுக்குப் போன பிறகு தான் இரட்சிக்கப்பட்டான் என்று சொல்கிறது. பார்வையிழந்த சவுல் தமஸ்குவிற்கு அனனியாவிடம் அனுப்பப்பட்டபோது ஒரு வீட்டில் இருந்தார். அனனியா சவுலை சுகமாக்கி இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவரிடம் பேசி இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்று முடித்தார் ( அப்போஸ்தலர் 22:16). இது தெளிவாகவே சவுல் தமஸ்குவுக்குப் போகும் பாதையில் இரட்சிக்கப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. அனனியா மூன்று நாட்களுக்குப் பிறகு தமஸ்குவில் சவுலிடம் பேசின போது அவரிடம் பாவம் இருந்திருக்கிறது. அனனியா பேசிய பிறகு விசுவாசத்தின் மூலமாக அந்த நாளிலேயே சவுல் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தார்; எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்றான் ( அப்போஸ்தலர் 9:18) சவுல் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற போது கிறிஸ்துவின் இரத்தத்தினாலே அவருடைய பாவங்கள் கழுவப்பட்டன. சவுல் ஞானஸ்நானம் பெற்ற போது தேவனுடைய கிருபையினாலே சவுலின் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டான்.

இயேசு கிறிஸ்து அன்றைய நாட்களில் சவுலுக்கு காட்சி அளித்தது போல் இந்நாட்களில் காட்சி அளிப்பதில்லை. ஆனால், பவுலின் வாழ்வின் நடந்த இந்த மாபெரும் சம்பவத்தின் மூலமாக நம்மை இன்னும் ஆசீர்வதித்துக் கொண்டிருக்கிறார். இந்த சவுல்தான் பின்னர் பவுல் என்றழைக்கப்பட்டார் (அப்போஸ்தலர் 13:9). இந்த பவுல் அர்ப்பணிக்கப்பட்ட ஓர் அப்போஸ்தலனாக மாறி பல யூதர்களையும், புறஜாதிகளையும் இரட்சிப்பிக்கு வழி நடத்தினாள்.

பவுல் மூலமாக தேவன் இரட்சிப்பு கிறிஸ்துவினிடத்தில் இருக்கிறது என்று உறுதிசெய்கிறார். ரோமர் 8:1) II கொரிந்தியர் 5:17 தெசலோனிக்கேயர் 4:16' பேதுரு 5:14). பவுல் கலாத்தியக் கிறிஸ்தவர்கள் எப்படி கிறிஸ்துவக்குள் பிரவேசித்தார்கள் என்று நினைப்பூட்டுகிறார். ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே ( கலாத்தியர் 3:27) ,இந்த வசனமும், இன்னும் வேறு சில வசனங்களும் கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒரு பாவி ஞானஸ்நானம் பெறும் போது இரட்சிக்கப்படுகிறார் என்பதைக் காட்டுகிறது. (யோவான் 3:16 ; 6:3–5 ; கொலேசெயர் 2:12).

சவுல் தமஸ்குவுக்குப் போகும் போது இரட்சிக்கப்படவில்லை என்பதை நாம் அறிவோம். ஏனென்றால், மூன்று நாட்களுக்குப்பிறகு கூட அவரிடத்தில் பாவம் இருந்தது. மேலும், நாம் அவர் தேவனுடைய கிருபையினாலே பவுலின் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டார். விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிக்கப் படவில்லை என்பதை அறிவோம். பவுல் பாவ மன்னிப்புக்காக கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற போது இரட்சிக்கப்பட்டார் (அப்போஸ்தலர் 2:38 ;8:36–38). ✝

## ஒரு நிமிடம் ஒதுக்கலாமே

- **நின்று நீங்கள் காண்கிற புதியவரிடம் ஹலோ என்று சொல்லி சில வார்த்தைகளைப் பேசுவதற்கு**
- **வியாதியாயிருக்கிற ஒருவருக்கு அல்லது குடும்ப அங்கத்தினரை இழந்து போன ஒருவருக்கு ஆறுதல் கடிதம் எழுதுவதற்கு**
- **மழலை மொழியில் ஒரு குழந்தை உங்களிடம் எதைச் சொல்ல முயற்சிக்கிறதோ அதைக் கவனிப்பதற்கு**
- **பிரச்சனைகளை மறந்து மற்றவர்களைப்பற்றி நமக்குத் தெரிந்த நல்ல காரியங்களைப் பரப்புவதற்கு**
- **தாழ்வு மனப்பான்மை உடைய ஒருவரையோ அல்லது கவலை மற்றும் சோர்வாக கணப்படுகிற ஒருவரையோ உற்சாகப்படுத்துவதற்கு.**

# இரட்சிப்பு

# ஒருவர் எப்போது, எப்படி இரட்சிக்கப்படுகிறார்?

## *Where and how is One Saved?*

## *Sunny David*

ஒருவர் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் இந்த நிமிடத்திலேயே இரட்சிக்கப்படுகிறார் அல்லது ஒருவர் பாவியின் ஜெபத்தை செய்யும் போது இரட்சிக்கப்படுகிறார் போன்ற மனித உபதேசங்கள் மற்றும் அபிப்பிராயங்களுக்கு எதிராக வேதாகமம் ஒருவர் கிறிஸ்துவில் இரட்சிக்கப்பட சுவிசேஷ செய்தியை கேட்க வேண்டும். விசுவாசிக்க வேண்டும், பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் பாவ மன்னிப்புக்காக கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற வேண்டும் இதன் பொருள், ஒருவர் இரட்சிக்கப்படவும், பரலோகம் போகவும் இவைகளை மாத்திரம் செய்தால் போதும் என்பதல்ல. ஆனால், ஒருவர் கிறிஸ்தவ நடையைத் தொடங்க இந்த ஆரம்பப் படிகளை பின்பற்ற வேண்டும்.

இயேசு கிறிஸ்து பரமேறின போது, தம் சீஷர்களுக்கு இவ்விதமாக கட்டளை கொடுத்தார். பின்பு அவர் அவர்களை நோக்கி நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும், சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். கிறிஸ்து விசுவாசமுள்ளவனாகி என்று மாத்திரம் சொல்லி முடிப்பதில்லை. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று தான் முடித்தார். எனவே, விசுவாசத்தினாலே மாத்திரம் என்று சொல்லி இரட்சிப்பை போதிப்பவர்கள் மக்களை வஞ்சிக்கிறார்கள் [ரோமர் 16;17,18].

அதன் பிறகு, ஒருவர் இரட்சிக்கப்பட அல்லது மறுபடியும் பிறக்க அவருக்கு அப்பாற்பட்ட சக்தி இருக்க வேண்டுமென்று சிலர் வாதாடுகிறார்கள். இந்த எண்ணம் நியாயமற்றதும், வேதாகமத்திற்கு புறம்பானதுமாகும். இக்கொள்கை ஒருவர் வாழ்க்கையின் ஏதாவது கட்டத்தில் தான் செய்த ஜெபத்திற்குப் பதிலாக விசுவாச அனுபவத்திற்குள் கடந்து வருவதாகவும், வாழ்க்கையின் வினோதமான சந்தர்ப்பத்தில் உணர்வுப்பூர்வமான விசுவாசத்தை பெற்றுக் கொள்வதாகவும், அந்த நிமிடத்தில் அந்த நபருடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதாகவும், ஆவிக்குரிய பிரகாரமாக மிகப்பெரிய மாற்றத்திற்குள் கடந்து வருவதாகவும், மறுபடியும் பிறந்து நித்திய நித்தியமாக இரட்சிக்கப்படுவதாகவும் சொல்கிறது. இக்கொள்கை முற்றிலும் நியாயமற்றதும் கேலிக்கூத்தானதுமாகும்.

சிலர் இத்தகைய அனுபவத்தை தங்கள் உறக்க வேளையில் பெற்றுக் கொள்வதாகவும், திடீரென வானம் திறக்கப்பட்டு ஏதோ ஒரு குரல் வானத்திலிருந்து அவர்கள் இரட்சிக்கப்பட்டதை உறுதி செய்யும்படி ஒலிப்பதாகவும் சொல்கிறார்கள். வேதாகமத்தில் இது சம்பந்தமாக எந்தக் கட்டளையோ, அல்லது உதாரணமோ இல்லை. அப்போஸ் தலருடைய புத்தகத்தில் இடம் பெற்றுள்ள மனமாற்ற சம்பவங்களில் கூட, மேற்சொல்லப்பட்ட தவறான உபதேசத்தின்படி யாரும் கிறிஸ்தவராகவில்லை.

மறுமுனையில், எந்த ஒரு மனிதனுக்கும் ஏற்பட்ட அனுபவமும் தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் ஏற்பட்ட அனுபவத்திற்கு ஈடாகாது. பவுல் உண்மையாகவே, கர்த்தரைக் கண்டார். இருந்த போதிலும் மூன்று நாட்கள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்ததாக நாம் வாசிக்கிறோம். பின்பு அனனியா மூலமாக தனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையாகிய ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்னும் கட்டளைக்கு கீழ்ப்படிந்த பிறகு தான் இரட்சிக்கப்பட்டான் என்று நாம் வாசிக்கிறோம் (அப்போஸ்தலர் 22:16). அப்போஸ்தலருடைய நடபடிகள் (9:18) ல் **எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றான்** என்று வாசிக்கிறோம். ஒட்டு மொத்தமாக இங்கே உண்மை என்னவென்றால், ஒருவர் இரட்சிக்கப் பட விசுவாசிக்கவும் வேண்டும், கீழ்ப்படிய வேண்டும் என்பதா யிருக்கிறது. விசுவாசித்தால் மாத்திரம் போதுமானதல்ல (யாக்கோபு 2:24,26).

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இது சம்பந்தமாக பல உதாரணங்களை நாம் பார்க்கிறோம். அவைகள் பொதுவாக மனமாற்ற சம்பவங்கள் என்றழைக்கப்படுகிறது. அங்கே எல்லா சம்பவங்களிலும் ஜனங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டு கிறிஸ்தவர்களாக எல்லோரும் சுவிசேஷத்தை விசுவாசித்து, அதற்கு கீழ்ப்படிந்ததை நம்மால் வாசிக்க முடியும்.

உதாரணமாக, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்ட பிறகு பெருந்திரளான கூட்டம் அப்போஸ்தலர்களிடம் சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். அவர்களுக்கு இவ்விதமான பதில் கொடுக்கப்பட்டது. பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று ( அப்போஸ்தலர் 2:38).

சுவிசேஷனாகிய பிலிப்பு சமாரியாவில் பிரவேசித்து அங்கே கிறிஸ்துவை பிரசங்கித்த போது புருஷரும், ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று ( அப்போஸ்தலர் 8:12)ல் வாசிக்கிறோம்.

## எவ்விதத்திலும் இது இரட்சிப்பிற்கான விஷயமல்ல

## Hey, It is not a matter of salvtation Any way

### Damer Elam

அடிக்கடி, நாம் யாரோ ஒருவர் எவ்விதத்திலும் இது இரட்சிப்பதற்கான விஷயமல்ல என்று சொல்லக் கேட்கிறோம். சில வேளைகளில் இந்த வாக்கியம் உண்மையாகவே எவ்விதத்திலும் இரட்சிப்பதற்கில்லாத காரியங்களுக்காக சொல்லப்படுகிறது. ஆனால், சிலர் இவ்வாக்கியத்தை தேவன் கட்டளையிட்ட ஒவ்வொன்றிற்காகவும் கூட பயன்படுத்துகிறார்.

ஆகவே, நமக்கு இரட்சிப்பு சம்மந்தமான பிரச்சனைகள் இரட்சிப்பு சம்மந்தப்படாத பிரச்சனைகளை எதிர்கொள்ளும்படி சவால் விடப்பட்டிருக்கிறது. பொதுவாக நாம் பார்க்கும்போது, ஒரு காரியத்தை செய்வதற்கு பல்வேறு வழிமுறைகள் உண்டு. எனவே, மக்கள் விரும்புகிறபடி செய்ய நாம் அவரவர்களுக்கு முழு சுதந்திரத்தைக் கொடுக்க வேண்டும். ஆனாலும் சிலர் எவ்விதத்திலும் இரட்சிப்பிற்கான விஷயம் அல்ல என்னும் வாக்கியத்தை எல்லை மீறி தேவனுடைய ஒவ்வொரு கட்டளைக்கும் பயன்படுத்த முயற்சிக்கிறார்கள். இது ஜனங்களை தேவனுடைய கட்டளைகளைச் செய்யத் தவறவிட்டு அவர்களை இழந்துபோகச் செய்யும். இயேசு கிறிஸ்து நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளை செய்ய தவறவிட்டு அவர்களை இழந்துபோகச் செய்யும். இயேசு கிறிஸ்து நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளை கைகொள்ளுங்கள் என்கிறார். (யோவான் 14:15).

வேதாகமத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட வார்த்தைக்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட வசனப் பகுதிக்கோ நாம் பகுத்தாய்ந்து விரிவான விளக்கத்தைக் கொடுக்கும்போது பொதுவான கட்டளைகள், குறிப்பிட்ட அல்லது விசேஷித்த கட்டளைகள் என்று வரும்போது தேவன் கட்டளையிட்டபடியே அவைகளை நாம் செய்து முடிக்க வேண்டும். அதன் பின்பு, பொதுவான விதிகள் என்று வரும்போது அவைகளை நாம் பல வித்தியாசமான வழிகளில் செய்து முடிக்கலாம். மேலும், பொதுவான விதிகளில் அங்கத்தினர்கள் கட்டளைகளை சிறப்பாக நிறைவேற்ற அவர்களுக்கு முழு சுதந்திரத்தையும் கொடுக்க

வேண்டும். இத்தகைய சூழ்நிலையில் கிறிஸ்தவ அன்பே ஆளுகை செய்ய வேண்டும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாம் ஒருவரில் அன்பாயிருந்தால் அதினால் நாம் அவருடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்று சொன்னார் [13:34,35].

மாற்கு 16:15,16 ல் நாம் இப்படி வாசிக்கமுடியும். பின்பு அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போல் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். இவ்வசனத்தில் போய் என்பது குறிப்பிட்ட ஓர் வார்த்தையாகும். கிறிஸ்துவின் சீஷர்கள் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியும் பொருட்டு போக வேண்டும். இவ் வசனத்தில் போங்கள் என்பது நம்முடைய விருப்பத்தின்படியானதல்ல, கட்டாயம் செய்ய வேண்டிய ஒன்றாகும். கிறிஸ்துவின் சீஷர்கள் எங்கே போக வேண்டும்? அவர்கள் குறிப்பாக ஏதாவது செய்ய வேண்டி யிருக்கிறதா? ஆம் அவர்கள் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து விசுவாசிக்கின்ற எல்லோருக்கும் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்.

இங்கே எப்படிப் போக வேண்டும் என்று குறிப்பாக சொல்லப் படவில்லை என்பதை கவனிக்க வேண்டும். ஏன்? தேவன் இதை போகிறவர்களின் கையிலே விட்டுவிட்டார். ஆகவே, இது தன்மையில் பொதுவான கட்டளையாகும். இன்றைய நாட்களில் நாம் நடந்து போகலாம், வாகனத்தில் போகலாம், விமானத்தில் போகலாம், கப்பலில் போகலாம் அல்லது ஏதாவது போக்குவரத்து சாதனங்கள் மூலமாகப் போகலாம். ஆனால், கட்டளை குதிரையில் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கொடுக்கப் பட்டிருந்தால் அது குறிப்பிட்ட கட்டளையாயிருக்கும். ஆனால், வேதாகமம் தெய்வீக புத்தகமாகும். அதில் பிழைகள் ஒன்றும் ஒருபோதும் இராது. ஏனென்றால், குதிரையில் சவாரி செய்து உலகமெங்கும் பயணிக்க முடியாது, குதிரை மூலமாக கடல்களை கடக்க முடியாதே.

தேவனுடைய வார்த்தைகளெல்லாம் இரட்சிப்பின் காரியங்களைப் பற்றியதுதான். தேவனுடைய வார்த்தையின் ஒவ்வொரு நிலையையும்

முக்ணுயத்துவம் வாய்ந்த ஒன்றாக நாம் பார்க்க வேண்டும். வேத வாக்கியங்களின் மையமே இரட்சிப்பின் காரியங்களோடு இடைபடுவதுதான். ஒருவர் வேத வாக்கியங்களை எடுத்துக்கொண்டு இது நித்திய முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்று சொன்னால், அவர் நித்தியத்தை இடிக்கிறார் என்றுதான் பொருள். அதேபோல் ஒருவர் தனக்கு நன்றாக இருக்கிறது என்பதற்காக ஞானஸ்நானம் முக்கியமானதுதான். ஆனால், அது இரட்சிப்புக்கு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்று சொன்னால் அவர் மிகப்பெரிய தவறு இழைக்கிறார் என்று தான் பொருள். இது ஞானஸ்நானத்திற்கு மட்டுமல்ல. வேதாகமம் முழுவதிலும் இடம்பெற்றுள்ள தேவனுடைய எல்லா கட்டளைகளுக்கும் பொருந்தும். வேதாகமம் தெளிவாக ஞானஸ்நானம் பாவ மன்னிப்புக்காக பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்று தெளிவுபடுத்தியிருக்கிறது [அப்போஸ்தலர் 2:38; I பேதுரு 3:21; மாற்கு 16:15,6].

ஒரு தனிமனிதன் ஞானஸ்நானம் என்பது நித்திய முக்கியத்துவம் வாய்ந்ததல்ல, ஒருவர் ஞானஸ்நானம் பெறாமலேயே பரலோகம் போக முடியும் என்று தனக்குச் சரியாக இருப்பதால் சொல்லலாம். அந்த மனிதன் அப்படி நினைக்கிறார் என்பதற்காக ஞானஸ்நானத்தைப் பற்றிய தேவனுடைய உபதேசங்கள் மாற்றப்பட்டிருக்கிறது என்று பொருள்படாது. சிலர் பரலோகம் போவதற்கு பல்வேறுபட்ட பாதைகள், சபைகள் உண்டு என்று சொல்கிறார்கள். சிலர் இது எவ்விதத்திலும் இரட்சிப்பதற்கான விஷயமல்ல என்று சொல்லுவார்கள். ஆனால் சபை கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது. கிறிஸ்து அச்சரீரத்தின் தலையா யிருக்கிறார். ஒரே சரீரந்தான் உண்டு என்று பரிசுத்த ஆவியானவர் தம்முடைய பரிசுத்த மனுஷர்களைக் கொண்டு எழுதிக் கொடுத்திருக் கிறவைகளெல்லாம் எந்த விதத்திலும் மாறாது [எபேசியர் 1:22-23; கொலோசெயர் 1:18]. அப்போஸ்தலனாகிய பவுல் கீழ்க்காணும் வார்த்தைகளைக் கொண்டு எபேசியர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர்

முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும் கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் அதற்காக ஒப்புக்கொடுத்தார் (எபேசியர் 5:24–27).

மீட்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் சித்தத்திற்கு கீழ்ப்படிவதினால் அவர் அவர்களை தம்முடைய சரீரமாகிய சபையில் சேர்த்துக் கொள்கிறார் (அப்போஸ்தலர் 2:47). கிறிஸ்துவால் அந்த சரீரத்தில் சேர்க்கப்படுகிறவர்கள் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்கள். இதுபோன்ற மாபெரும் உண்மைகளும், இன்னும் இது போன்ற நித்திய முக்ணுயத் துவம் வாய்ந்த காரியங்களும் எவ்விதத்திலும் இரட்சிப்பதற்கான விஷயமல்ல என்று கூறிவிட முடியாது.

அவ்வப்போது மதுபானம் குடிப்பதினால் என்ன தவறு இருக்கிறது எவ்விதத்திலும் இது இரட்சிப்பதற்கான விஷயமல்ல. திருமண பந்தத்திற்கு வெளியே கள்ளத்தொடர்பு வைத்திருந்தால் என்னத் தவறு இருக்கிறது, அது நித்திய முக்கியத்துவம் வாய்ந்த காரியமல்ல இன்னும் ஓரினச்சேர்க்கையில் இரண்டு ஆண்களோ அல்லது இரண்டு பெண்களோ ஈடுபடுவதில் என்ன தவறு இருக்கிறது? அது அவர்களுடைய தனிப்பட்ட விவகாரம் அதற்கும் இரடசிப்புக்கும் என்ன சம்மந்தம் இருக்கிறது? ஒரு தனிப்பட்ட நபர் தான் எப்படி விரும்புகிறாரோ அப்படி ஆராதித்தாலும் தேவனுக்கு அது ஒரு பிரச்சனை அல்ல. அந்த நபர் மனப்பூர்வமாக அதைச் செய்யும்போது தேவன் எந்த வகையான ஆராதனை முறையையும் ஏற்றுக் கொள்வார். ஆராதனை என்பது நித்திய முக்கியத்துவம் வாய்ந்ததாகவோ ஒருவருடைய இரட்சிப்பு அதை சார்ந்தே இருக்காதே.

மேற்சொல்லப்பட்ட விவாதங்களில் தனிப்பட்ட நபர்கள் ஈடுபடலாம். அவைகள் ஒன்றும் தேவன் தம்முடைய பரிசுத்த மனுஷர்களைக் கொண்டு வெளிப்படுத்தியிருக்கிற தம்முடைய கட்டளைகளை மாற்றமுடியாது. நியாயத்தீர்ப்பின் நாளில் தனிநபர்கள் கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்கும்போது தேவனுக்கிருந்த காரியங்களை எவ்விதத்திலும் இது இரட்சிப்பதற்கான விஷயமல்ல என்று விமர்சித்து மாபெரும் தவறு என்பதை உணர்ந்து கொள்வார்கள். அவர்களால் தேவனுடைய கட்டளைகளை குறைந்தபட்சம் கூட மாற்ற முடியாது. ✝

# வாழ்வதற்கான உபதேசம்

# வேலிக்கம்பத்தில் உட்காருதல்

## SITTING ON THE FENCE POST

***Ernest S. Underwood***



**ஆ**பகூக் தீர்க்கன் குறைந்தபட்சம் தன்னுடைய நாட்களில் ஏற்பட்ட பிரச்சனை களைக் குறித்து தேவன் கண்டு கொள்ளாமல் இருக்கிறார் என்று சற்று ஏமாற்றம் அடைந்ததாகத்தான் சொல்ல வேண்டும். தன் குமுறலில் அவர் இவ்விதமாகச் சொன்னார்.

கர்த்தாவே நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் கேளாமலிருக்கிறீரே. கொடுமையினிமித்தம் நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் இரட்சியாமலிருக்கிறீரே? நீர் எனக்கு அக்கிரமத்தைக் காண்பித்து என்னைத் தீவினையைப் பார்க்கப் பண்ணுகிறதென்ன? கொள்கையும், கொடுமையும் எனக்கு எதிரே நிற்கிறது; வழக்கையும், வாதையையும் எழுப்புகிறவர்கள் உண்டு. ஆகையால், நியாயப்பிராமணம் பெலனற்றதாகி நியாயம் ஒருபோதும் செல்லாமற் போகிறது; துன்மார்க்கன் நீதிமானை வளைந்து கொள்ளுகிறான்; ஆதலால், நியாயம் புரட்டப்படுகிறது (ஆபகூக் 1:2–4).

ஆனால், இங்கே தேவன் அந்தத் தீர்க்கதரிசியிடம் கோபப் படுவதற்குப் பதிலாக தீர்க்கதரிசிக்குத் தெரியாத பல தகவல்களை அவருக்கு விளக்க ஆரம்பிக்கிறார். கர்த்தர் ஆபகூக்கைப் பார்த்து நீங்கள் புறஜாதிகளை நோக்கிப் பார்த்து, ஆச்சரியப்பட்டுப் பிரமியுங்கள்; விவரிக்கப்பட்டாலும் நீங்கள் விசுவாசியாத ஒரு கிரியை உங்கள் நாட்களில் நடப்பிப்பேன். இதோ, நான் கல்தேயரென்னும் கொடியதும் வேகமுமான ஜாதியரை எழுப்புவேன். அவர்கள் தங்களுடையதல்லாத வாசஸ்தலங்களை கட்டிக்கொள்ளத் தேசத்தின் விசாலங்களில் நடந்து வருவார்கள். வசனம் 56).

தேவன் தொடர்ந்து கல்தேயர்களின் பெலத்தையும், அவர்களுடைய கொடிய தன்மையையும் தீர்க்கதரிசிக்கு தொடர்ந்து காட்டினார். அதற்குப் பிறகு தீர்க்கதரிசியாகிய ஆபகூக் அந்தக் கடுமையான நியாயத்தீர்ப்பைக் குறித்து எச்சரிக்க ஆரம்பித்துவிட்டது போல் தோன்றுகிறது. ஆனால், கடைசியாக ஆழமாக இவ்விதமாகச் சொன்னார். நான் என் காவலிலே தரித்து, அரணிலே நிலை கொண்டிருந்து அவர் எனக்கு என்ன சொல்லுவாரென்றும் அவர் என்னைக் கண்டிக்கும்போது நான் என்ன உத்தரவு சொல்லு வாரென்றும் கவனித்துப் பார்ப்பேன் என்றேன் (ஆபகூர் 2:1).

மாபெரும் தேசமாகிய அமெரிக்க ஐக்கிய தேசம் உருவானதில் தேவனுடைய மராமரிக்கும் கரம் இருக்கிறதென்று உறுதியாக நான் நம்புகிறேன். அமெரிக்க தேசம் இத்தனை மகத்தான வளர்ச்சி அடைந்ததற்கான காரணம் தேவன் அதை அபரிதமாக ஆசீர்வதித்த தினால்தான் என்னும் மாபெரும் உண்மையை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இருந்தபோதிலும் ஆபகூக்கைப் போல காரியங்கள் விரும்பியதுபோல் நடக்காதபோது தேவன் நம்மை கைவிட்டுவிட்டார் என்று நினைக்கத் தொடங்கி விடுகிறோம். ஒருவேளை அவர் நம்மை மறந்திருக்கலாம். இருந்தபோதிலும், அவர் நம்மை முழுமையாக நம்பி, உண்மையாகவே தேவன்தான் இவ்வுலகை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார் என்று விசுவாசித்தால் அவருடைய வல்லமையை நாம் ஒருபோதும் குறைந்து மதிப்பிட மாட்டோம். இவ்வுலகிலே அவர் சகலவற்றையும் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும். இரண்டிற்கும் இடைப்பட்ட நிலை என்று எதுவும் கிடையாது. தேவனுடைய பிள்ளைகள் நிச்சயமாகவே தேவனே இப்பிரபஞ்சத்தை தம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார் என்று விசுவாசிக்கிறார்கள்.

ஆபகூக் நாட்களைப் போலவே தீமை நாம் வாழும் உலகில் பெருகிக் கிடக்கிறது. அரசின் அதிகார உச்சத்தில் இருப்பவர்கள் பொழுதுபோக்குகளிலும் உலகில் இருப்பவர்கள் தீமையிலும் திளைத்துப் போய் இருப்பதையும் நம்மால் காண முடிகிறது. நாம் வாழும் இவ்வுலகில் அரசாங்க அதிகாரிகள், ஊடகத்துறையினர் உயர் பதவியில் இருப்பவர்கள், திரைப்பட பிரபலங்கள், மத வட்டாரத்தில்

ஒரு சிலர் ஆகியோர் மிகவும் ஒழுக்கக் கேடான வாழ்க்கையை வாழ்ந்து சர்வ வல்ல தேவனையும் அவருடைய வார்த்தையையும் எதிர்க்கிறார்கள்.. ஒவ்வொரு நாளும் இஸ்லாமியர்கள் செய்யும் கண்முடித்தனமான காரியங்களை நாம் கேள்விப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். அதேபோல் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்கள் செய்யும் அட்டகாசத்திற்கு அளவே இல்லை. அவர்களுக்கு ஆதரவாக திரையுலகினர் பெரும்புள்ளிகள் இருக்கிறார்கள். வயிற்றில் இருக்கும் குழந்தைகள் பிறப்பதற்கு முன்பாகவே அரசாங்கத்தின் ஒப்புதலோடு கரு கலைக்கப்படுகிறது. பாதி குழந்தைகள் பதின் பருவத்தை அடைவதற்கு முன்பாகவே பல விதமான பாலியல் பாவங்களில் சிக்கி சீரழிந்து விடுகிறார்கள்.

கிறிஸ்துவுக்காக சிரச்சேதம் செய்யப்பட்ட பலிபீடத்தின் கீழ் இருக்கிற அந்த ஆத்துமாக்களுக்காக கர்த்தாவே நான் எது வரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன் என்று சில வேளைகளில் நமக்குக் கதறத்தோன்றும். நம்மில் பலருக்கு இந்நாட்களில் சுற்றித்திரியும் துன்மார்க்கர்களுக்கு அழிவு ஏற்பட வேண்டுமென்று தனிப்பட்ட ரீதியில் ஆசை இருக்கும். சில வேளைகளில் அவைகளைப் பழிவாங்கக்கூட நாம் நினைக்கலாம். ஆனால், பழிவாங்குதல் எனக்குரியது என்று தேவன் சொல்கிறார். நம்மெல்லோரும் ஆபகூக்கின் மனநிலையை பெற்றுக்கொண்டு வேலிக்கம்பத்தில் அமர்ந்து தேவன் செய்கிறதைப் பார்த்தால் சிறந்ததாயிருக்கும். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் [யாத்திராகமம் 14:14].

✝

---

## *வானம் திறக்கப்பட்ட சம்பவங்கள்*

✎ இயேசுவின் ஞானஸ்நானத்தின் போது திறக்கப்பட்டது (மத்தேயு 3:16).

✎ ஸ்தேவானின் மரணத்தின்போது திறக்கப்பட்டது (அப்போஸ்தலர் 7:56).

✎ பேதுரு யோப்பா பட்டணத்தில் தரிசனங்காணும்போது திறக்கப்பட்டது (அப்போஸ்தலர் 10:11)

✎ பவுல் கூறிய மனிதன் மூன்றாம் வானம் வரை எடுத்துக் கொள்ளப்பட்டபோது திறக்கப்பட்டது (II கொரிந்தியர் 12:2).

### செயலில் கிறிஸ்தவம்

# நீங்கள் எதை விட்டிருக்கிறீர்கள்?

## What Have You Given up?

*Gary c. Hampton*

இயேசு கிறிஸ்து ஓர் அடிமையின் ரூபமெடுத்து இப்பூமிக்கு வந்து வாழ்வதற்காக தேவனுக்கு சமமாயிருப்பதை விட்டுவிட்டார் [பிலிப்பியர் 2:67]. இதை அப்போஸ்தலனாகிய பவுல் எளிய முறையில் இவ்விதமாக விளக்குகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே: அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவானாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே [II கொரிந்தியர் 8:9].

இயேசு கிறிஸ்து எனக்காக பரலோகத்தையே விட்டுவந்தார். ஆனால், பல வேளைகளில் நான் என் தனிப்பட்ட ஆசைகளை நிறைவேற்றுவதற்காக ஆராதனையை விட்டிருக்கிறேன். வேத பாட வகுப்பில் கலந்து கொள்வதற்குப் பதிலாக உறங்குவது என்பது கிறிஸ்துவின் தன்னலமற்ற தன்மையை பிரதி பலிக்கத் தவறுவதாகும். இது தவறான முன்னுதாரணம், ஆவிக்குரிய கூட்டங்களுக்கு அழைக்க வீடு வீடாகச் செல் வதற்குப் பதிலாக பொழுது போக்கு அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது மற்றுறொரு மோசமான முன்னுதாரணமாகும்.

அப்போஸ்தலனாகிய பவுல் தனக்குப் பெருமையாக இருந்த காரியங்களை தனக்கு லாபமாயிருந்த காரியங்களை கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லா வற்றையும் விட்டுவிட்டதாகச் சொல்கிறார் [பிலிப்பியர் 3:71]. பவுல் கிறிஸ்தவ ஓட்டத்தை வெற்றிகரமாக ஓடி முடிக்க மரணபரியந்தம் பாடுபட முன்வந்தார். [அப்போஸ்தலர் [ 20:22-28]. மேலும், பவுல் கிறிஸ்துவுடனே கூட சிலுவையிலறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக் கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத் தினாலே பிழைத்திருக்கிறேன் [கலாத்தியர் 2:20].

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரி கிறிஸ்தவர்களுக்கு விடுத்த வேண்டுகோளை நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும். அப்படியிருக்க சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்பு கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று படுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிற தினாலே மறுரூபமாகுங்கள் [ ரோமர் 12:12].

பிரியமானவர்களே நம் அருமை இரட்சகரின் பாதப்படிகளை பின்பற்றுவதற்கான ஒரே வழி, பிதாவின் சித்தத்தை செய்யும்படி நம் ஆசைகளை தியாகம் செய்வது தான். நாம் ஒவ்வொருவரும் நான் எதை விட்டிருக்கிறேன் என்னும் கேள்வியை நமக்குள் கேட்டுக் கொள்ள வேண்டும்.

✝

## கிறிஸ்தவர்கள்

- கிறிஸ்தவர் என்னும் பெயர் கிறிஸ்துவைத் தழுவி வருவதால் நாமெல்லாரும் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாயிருக்கிறோம் [II யேவான் 2:20]
- கிறிஸ்தவர் என்னும் பெயர் மேன்மையானதும் நம்மை மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்படுத்துகிற பெயராகவும் இருக்கிறது [II கொரிந்தியர் 7:1]
- கிறிஸ்தவன் என்னும் பெயர் அதை தரித்திருக்கிறவர், கிறிஸ்துவின் உடமை என்பதை மற்றவர்களுக்கு சுட்டிக்காட்டுகிறது [I கொரிந்தியர் 6:19,20]
- முதன் முதலில் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று [ அப்போஸ்தலர் 11:26].

### செயலில் கிறிஸ்தவம்

## போதிக்கும் சிலாக்கியம்

## The Privilege of Teaching

*Neal Pollard*

**பொ**துவாகவே நாம் பார்க்கும் போது சிறு பிள்ளைகளுக்குப் போதித்தாலும் சரி, வயதானவர்களுக்குப் போதித்தாலும் சரி வேதாக மத்தை போதித்தல் என்பது ஓர் அருமையான சிலாக்கியமாகும். இது ராஜ்ஜியத்தின் எல்லைகளை விவரிக்க தேவனுடைய வழியாகும். இந்த விதத்தில் உண்மை கிறிஸ்தவம் மற்ற மதங்களிலிருந்து எப்படி வேறுபடுகிறது! இஸ்லாம் மதம் பட்டயத்தால் பரப்பப்படுகிறது. கத்தோலிக்க சபைகளும், ப்ரோடஸ்டன்ட் சபைகளும் பட்டயத்தால் தேசங்களை கைப்பற்றி இருந்த போதிலும் ஒரு கிறிஸ்தவனின் பட்டயம் தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. [எபேசியர் 6:17]. சபையின் கட்டளை நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்பதாயிருக்கிறது. [மத்தேயு 28:19]. நெகேமியா ஒரு போதகரின் நோக்கத்தை அறிவித்திருக்கிறார். அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணப் புத்தகத்தை தீர்க்கமாக வாசித்து அர்த்தஞ் சொல்லி, வாசித்ததை அவர்களுக்கு விளங்கப் பண்ணினார்கள் [ நெகேமியா 8:8].

ஒரு வேதாகம ஆசிரியராக இருப்பது சிலாக்கியமாகும். ஏனென்றால், எல்லோராலும் அப்படி இருக்க முடியாது. பல காரணங்களுக்காக : ஒழுங்கற்ற பண்பு, அறிவில்லாமை, திறமை யில்லாமை தான் போதிக்கிறதை நடைமுறைபடுத்த இயலாமை உற்சாகமின்மை போன்ற காரணங்களால் யாக்கோபு 3:1 என் சகோ தரரே அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக என்று சொல்லுகிறார். போதகர்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறபடியால் அவர்களை நேசியுங்கள் அவர்களை கனம் பண்ணுங்கள். அவர்களோடு நின்று அவர் களுடைய வேலையினிமித்தம் அவர்களுக்கு ஆதரவாயிருங்கள்.



நாம் யாருக்காக பிரயாசப்படுகிறோமோ அதை வைத்து பார்க்கும் போது போதிப்பது ஒரு சிலாக்கியமாகும். தேவன்தான் வேதாகமப் பள்ளியின் ஆசிரியராயிருக்கிறார். அவர் என்ன விரும்புகிறாரோ அதைத்தான் நாம் போதிக்கிறோம். பலவீனமுடைய கையாலாகாத மனித இனத்தைக் கொண்டு தேவன் இவ்வுலகிலேயே மகத்தான வேலையைச் செய்ய விரும்புவது ஆச்சரியமும், அதிசயமுமா யிருக்கிறது. நாம் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருப்பது எவ்வளவு சிலாக்கியமான காரியமாகும் [I கொரிந்தியர் 3:9].

**நாம் எதை நிறைவேற்றப் பாடுபடுகிறோமோ அதை வைத்துப் பார்க்கும் போது போதகராயிருப்பது ஒரு சிலாக்கியமாகும்.**

ஆண்கள், பெண்கள், வாலிபர்கள், சிறுபிள்ளைகள் போன்றோரை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்துவதுதான் ஒரு போதகரின் பிரதான குறிக்கோளாகும். இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் [ லூக்கா 19:10] . அது நம்முடைய வேலையுமாயிருக்கிறது. [II தீமோத்தேயு 2:2] போதகர்கள் நம் சமுதாயத்தையும், மக்கள் வாழும் விதத்தையும் மாற்றத்தக்கவர் களாயிருக்கிறார்கள். அவர்களுடைய உதாரணமும், பயிற்சியும் வகுப்பறையிலிருந்து நம் வரவேற்பு அறைக்கும், தனிப்பட்ட மனிதர்களுடைய வாழ்க்கைக்கும் பரவக்கூடியதாய் இருக்கிறது. நாம் உலகத்துக்கு வெளிச்சமாகவும், உப்பாகவும் இருந்து ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் [ மத்தேயு 5:13,16].

ஒவ்வொரு போதகரும் ஆத்துமாக்களை தேவனிடத்தில் கொண்டு வருவதே ஒட்டுமொத்த நோக்கம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

வகுப்பறை உங்கள் பிரசங்க மேடையாயிருக்கிறது. உங்கள் முயற்சியின் இறுதி பலன் இரட்சிப்பாயிருக்கிறது. வகுப்பறைகளில், பிரசங்க மேடைகளில், வீடுகளில் மற்றவர்களுக்குப் போதிப்பதில் செலவழிக்கப்பட்ட வாழ்க்கை ராஜ்ய விரிவாக்கத்தில் போய் முடிய வேண்டும். போதகர்கள் என்கிற நிலையில் நம் மாணவர்கள் முதல் இரண்டு பிரமாணங்களை கைக்கொள்கிறார்கள் என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல் பிதானிடத்திலும் அன்புகூருவாயாக (மாற்கு 12:30,31).

**போதிப்பதால் உள்ளடக்கிய மாபெரும் பலன்களை எண்ணிப் பார்த்தால் அது ஒரு சிலாக்கியமாகும்.**

போதிப்பதினால் நமக்கு கிடைக்குப் பலன்களில் ஒன்று உள்ளார்ந்த சமாதானம். நீங்கள் மிகப்பெரிய யுத்தத்தில் கர்த்தருக்காக போராடிக் கொண்டிருக்கிறீர்கள். மற்றவர்களையும் பிசாசுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றி பெற உதவினீர்கள். அது மட்டுமல்ல, நீங்கள் இவ்வுலகம் ஒரு சிறந்த இடமாக மாற உங்களால் முடிந்ததைச் செய்கிறீர்கள். தன்னைத்தானே அழித்துக் கொள்ள விரும்பும் இவ்வுலகத்திற்கு சமாதானத்தையும், நம்பிக்கையையும் பாதுகாப்பையும் உறுதி செய்கிறீர்கள். உண்மையுள்ளவர்களுக்கு இறுதியான பலன் காத்துக் கொண்டிருக்கிறது. நல்லது உத்தமும் உண்மையுள்ள ஊழியக்காரனே கொஞ்சத்திலே உண்மை யாயிருந்தால்; அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி (மத்தேயு 25:21)

தேவனுடைய வார்த்தையை போதிப்பவர்களே, நம்பிக்கையாயிருங்கள்! உலகிலேயே மிகப் பெரிய வேலை உங்களுடையது. தான் நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றக்காலத்தில் அறுப்போம் (கலாத்தியர் 6:9). எனவே, தொடர்ந்து தொய்வின்றி நன்மை செய்து கொண்டே இருங்கள். ✝

செயலில் கிறிஸ்தவம்

# நண்பர்கள் உங்களை விட்டு விலகும் போது

## When Friends Turn their Backs on you

*Cliff Holmes*



**ந**ம் நண்பர்கள் நம்மை விட்டு விலகும் போது பெரும்பாலும் அது நமக்கு சோகமான நேரமாகி விடுகிறது. இயேசு கிறிஸ்துவுக்கும் கூட இப்படி நடந்திருக்கிறது. அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார். சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: *ஆண்டவரே யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே என்றான்.*

இயேசு கிறிஸ்து ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு திரளான ஜனங்களைப் போஷித்த போது அங்கே மகிழ்ச்சி இருந்தது. அதே போல் நம் இரட்சகர் கடலின் மீது நடந்த போதும், பெருங்காற்று வீசின போதும் படகில் இருந்த சீஷர்கள் பயந்த போதும் நம் இரட்சகர் ஏறி காற்றை அமர்த்தின போதும் அங்கே மகிழ்ச்சி இருந்தது.

அடுத்ததாக, நம் ஆண்டவர் ஒட்டுமொத்த மனித இனத்துக்காகவும் தேவன் அனுப்பிய ஜீவ அப்பத்தைக் குறித்து போதித்ததை நாம் காண்கிறோம். கிறிஸ்து இப்படி போதித்ததன் காரணமாக யூதர்கள் முறுமுறுத்தார்கள். அவர்களுடைய சீஷர்களில் அநேகர் அவருடனே கூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்.

தேவனுடைய இலவசமான ஈவை விட்டு சீஷர்கள் பின்வாங்கியய போது அது நம் ஆண்டவருக்கு எவ்வளவு துக்கத்தையும், சோகத்தையும் தந்திருக்கும் என்பதை கற்பனை செய்து பாருங்கள். கிறிஸ்து அவர்களுக்கு ஜாக்கிரதையாக, மென்மையாக நன்றாக போதித்தார். இருந்த போதிலும். அவர்கள் கிறிஸ்துவை விட்டு விலகிப் போனார்கள். நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்று நம் இரட்சகர் கேட்ட போது அவருடைய இருதயம் எவ்வளவு வலித்திருக்கும்.

ஆனால், சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தமாக; **ஆண்டவரே யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து** என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான் [யோவான் 6:68,69]. கிறிஸ்து ஜீவ அப்பமாக இருக்கிற படியாலும், நித்திய ஜீவ வசனங்கள் அவரிடத்தில் இருக்கிற படியாலும் நாம் அவரைவிட்டு எங்கும் போக மாட்டோம் என்று தீர்மானம் எடுத்து அதை அனுதினமும் புதுப்பிக்க வேண்டும்.

✝

---

***பிரச்சனைகள் வரும்போதும், சங்கட சமயங்களிலும் நாம் கையைப் பிசைவதைக் காட்டிலும் எல்லாவற்றையும் தேவனுடைய கைகளில் விட்டுவிட்டால் கடைசியில் தேவனுடைய கைகள் எல்லாவற்றின் மேலும் இருந்து தீர்க்கமான தீர்வை நாம் காண முடியும். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் (I பேதுரு 5:7).***

சபை

# இயேசு நம் மாதிரியாயிருக்கிறார்

# Jesus is Our Pattern

*Greg Tidwell*



கிறிஸ்தவம் என்பது ஓர் உணர்வற்ற, கற்பனையான, உயிரற்ற ஒரு வாழ்க்கை முறை அல்ல. மாறாக, கிறிஸ்தவ முறை என்பது தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலமாக ஜீவனுள்ள தேவனோடு கொள்ளும் ஒரு தனிப்பட்ட உறவாகும். தேவனுடைய குமாரன் நம் வழியாகவும், சத்தியமாகவும், ஜீவனாகவும் இருக்கிறார். கர்த்தருடைய சபையானது கர்த்தருடைய சத்தியத்திற்கு தொடர்ந்து உண்மையாகவும், அர்ப்பணிப்புடனும் இருக்க வேண்டும். கிறிஸ்துவினுடைய ஜனங்களும் தொடர்ந்து கிறிஸ்துவுக்குத் தங்களை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும்.

சபைக்கு தேவனுடைய சித்தமானது நேரடி கட்டளைகள் மூலமாகவும், தம்முடைய அதிகாரப்பூர்வமான செய்தித் தொடர்பாளர்களின் உதாரணங்கள் மூலமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய நித்திய குமாரனாகிய இயேசு கிறிஸ்து தேவபக்திக்கேற்ற காரியங்களுக்கு நமக்கு பரிபூரண முன்மாதிரியாக இருக்கிறார். ஒருவர் இவ்வகையான உபதேசத்திலிருந்து கடந்து செல்கிறார் என்றால் நிச்சயமாக வழிவிலகிச் சென்று விடுவார்.

இயேசு கிறிஸ்து தம்முடைய உதாரணத்தின் மூலமாக தம்மைப் பின்பற்றுபவர்கள் எப்படியாக நடந்துகொள்ள வேண்டுமென்று வழியைக் காட்டியிருக்கிறார். கிறிஸ்துவின் ஜீவியத்தைப் பற்றிய முக்கிய தகவல்கள் நான்கு சுவிசேஷப் புத்தகங்களிலும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவர்கள் கர்த்தருடைய சபைக்கு அன்பு, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்கு முழுமையான மாதிரியை அளிக்கிறது. நாம் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் இயேசுவின் மாதிரியைப் பின்பற்றும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம்.

உண்மையான விசுவாசமும், உண்மையான கீழ்ப்படிதலும் ஒரே காரியம்தான். விசுவாசம் என்பது வெறுமனே ஓர் உணர்வல்ல. அது ஒரு செயலாகும். சுவிசேஷ செய்தி என்பது ஒட்டுமொத்த வாழ்க்கையையும் ஈடுபடுத்துகிறது. இயேசு கிறிஸ்து நமக்கு வாழ்க்கையைக் காட்டியிருக்கிறார்.

அதற்கு இயேசு : நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். என்னை அறிந்திருந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள். இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார் [ யோவான் 14:6].

## நாம் நித்தியத்தை இழந்துபோவதற்கான காரணங்கள்!

- சபை கூடிவருவதை விட்டு விடுவதினால் ( எபிரெயர் 10:25)
- வேதாகமத்தை ஆராய்ந்து பார்க்காததினால் ( அப்போஸ்தலர் 17:11)
- அவரவர் வரவுக்குத்தக்கதாக கொடுக்காமல் இருப்பதினால் (I கொரிந்தியர் 16:2)
- இடைவிடாமல் ஜெபிப்பதைத் தவிர்ப்பதினால் (I தெசலோனிக்கேயர் 5:17)
- தேவனுடைய ஆலோசனைகள் எல்லாவற்றையும் அறிவிக்காமல் இருப்பதினால் (அப்போஸ்தலர் 20:26)
- ஒப்பு கொடுக்கப்பட்டிருக்கிற விசுவாசத்திற்காக தைரியமாகப் போராடாமல் இருப்பதினால் (யூதா 3).

## சபை

# மூன்று முக்கியமான கேள்விகள்

## Three Important Questions

## Jimmy Clark

கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காக சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? [I கொரிந்தியர் 1:13]. இம்மூன்று கேள்விகளும் கீழ்க்காணும் பின்னணிக்கு எதிராக வைக்கப்படுகிறது.

சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும் பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லு கிறேன். ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்கு வாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது. உங்களில் சிலர் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும் நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நான் இப்படிச் சொல்லுகிறேன். [II கொரிந்தியர் 1:10–12]. பத்தாம் வசனத்தில் பவுல் விடுத்த வேண்டுகோளுக்கு பதில் கேள்விலேயே இருக்கின்றன. ஆனால், அவைகள் எதிர்மறையான பதில்களாகும். இம்மூன்று கேள்விகளிலிருந்தும் சில கருத்துக்களை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

### பிரிவினை மீதான கேள்வி : கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?

மத உலகம் வெகுவாகப் பிரிந்து கிடக்கிறது. மேலும், இதெல்லாம் தேவனால் ஏற்றுக் கொள்ளக்கூடியதுதான் என்று பலர் நம்புகிறார்கள். இயேசு கிறிஸ்து ஒற்றுமைக்காக ஜெபித்தார். [யோவான் 17:20–21]. கிறிஸ்து விசுவாசிகள் தம்முடைய சபையில் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்பதற்காக மரித்தார் [மத்தேயு 16:15.23; அப்போஸ்தலர் 20:28]. அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிகிற எல்லோரும் தாங்கள் எப்படி கிறிஸ்துவினிடத்தில் ஐக்கியம் கொண்டார்களோ அதே அளவு ஐக்கியம் கொள்ள வேண்டுமென்று உழைத்தார்கள் [I யோவான் 1:1–3]. மதப்பிரிவினை என்னும் பிரச்சனையை உருவாக்கியதே மனித ஞானம்தான். வேதாகமத்திற்கு வெளியே கண்டுபிடிக்கப்பட்ட மனிதக் கொள்கைகள், வேதாகமம் ஆதரிக்காத ஆளுகை அமைப்புகள், வேதாகமத்தின் வெளிப்படையான உபதேசத்திற்கு எதிரான உபதேசங்கள் இவைகளெல்லாம் தான்

கிறிஸ்தவனிடத்தில் பல பிரிவுகள் பெருகியிருப்பதற்கு காரணங் களாக அமைகின்றன. ஒரே ஒரு கர்த்தர் இருப்பதால் (எபேசியர் 4:5) ஒரே ஒரு சரீரம்தான் இருக்க வேண்டும் (எபேசியர் 4:4).

### ஒருவர் மீதான பற்று பற்றிய கேள்வி :
### பவுலா உங்களுக்காக சிலுவையிலறையப்பட்டான்?

பவுல் தன் மீதும் மற்றவர்கள் மீதும் காட்டப்படும் பற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக தன் பெயரைப் பயன்படுத்துகிறார். எல்லா துதியும் கனமும் கர்த்தருக்கு மாத்திரமே கொடுக்கப்பட வேண்டும். சிலுவையில் கிறிஸ்து மரித்தது எல்லா துதிக்கும் கனத்துக்கும் அவரே பாத்திரர் என்பதை வலியுறுத்துகிறது. பவுல் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் இவ்விதமாக எழுதினார். கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது. ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக் கென்று பிழைத்திருக்கும்படி அவர் எல்லாருக்காகவும் மரித்தா ரென்றும் நிதானிக்கிறோம் (II கொரிந்தியர் 5:14,5). பவுல் இதை தன் தனிப்பட்ட வாழ்க்கையிலே நடைமுறைப்படுத்தினார். அதனால்தான் இவ்விதமாகச் சொன்னார். இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத் திருக்கிறதோ என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுக்கிற தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத் தினாலே பிழைத்திருக்கிறேன் என்று சொன்னார் (கலாத்தியர் 2:20).

### சீஷத்துவம் மீதான கேள்வி:
### பவுலின் நாமத்தினாலேயா, ஞானஸ்நானம் பெற்றீர்கள்?

இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் பார்த்து நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுங்கள். என்று கட்டளையிட்டார் (மத்தேயு 28:19). அப்போஸ்தலன் 18:18 ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறபடி அநேக கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் கூட அவர்கள் பவுலின் சீஷர்களாக மாறவில்லை. மாறாக, கிறிஸ்துவின் சீஷர்களாகத்தான் மாறினார்கள். கொரிந்துதுப் பட்டணத்தில் பவுல் செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்து கட்டளையிட்டிருக்கிறார். நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே நான் உன்னுடனே கூட இருக்கிறேன். உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை. இந்தப் பட்டணத்தில்

எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார் (அப்போஸ்தலர் 18:9,10). ஞானஸ்நானத்தைப் பற்றிய எல்லாமே மனந்திரும்பிய ஒரு விசுவாசியை கிறிஸ்துவோடு இணைக்கிறது. ஒருவருடைய பழைய மனுஷன் கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்படுகிறார் (ரோமர் 6:6). அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானம் மனந்திரும்பிய ஒரு விசுவாசியை கிறிஸ்துவோடு இணைக்கிறது. ஒருவருடைய பழைய மனுஷன் கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்படுகிறார் (ரோமர் 6:6). அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனோடே அடக்கம் பண்ணப்படுகிறார் (ரோமர் 6:4). ஞானஸ்நானம் ஒருவரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது. (கலாத்தியர் 3:27).

**வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக இருப்பதற்கான ஏராளமான ஆதாரங்களைக் காட்டுகிறது. அப்படியென்றால், இதற்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி இருக்க வேண்டும். இதில் இடம் பெற்றிருக்கிற எல்லா தீர்க்கதரிசனங்களுமே ஒருவரை மாத்திரம் சுட்டிக்காட்டி சம்பவங்கள் நடப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே எழுதும்படியாக தேவ மனுஷர்கள் தேவ ஆவியினால் ஏவப்படிருக்கிறார்கள். வேதாகமம் சுமார் 1500 ஆண்டுகள் கால அளவில் 40 வித்தியாசமான ஆசிரியர்களால் எழுதப்பட்டது. இருந்தபோதிலும் கருப்பொருளான கிறிஸ்துவை சுட்டிக்காட்டி அவரைப் பற்றியும் அவருடைய பணியைப் பற்றியும் சொல்வதில் ஒருமித்த கருத்துடன் இருக்கிறது. எனவே, வேதாகமத்தை விசாரித்து அறிய விரும்பும் எந்த ஒரு நபரும் வேதாகமத்தைப் பற்றிய சத்தியத்தை கண்டறிய முடியும். வேதாகமத்தை பரிசோதித்துப் பாருங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ப இருக்கிறதா என்று பாருங்கள். சத்தியத்திற்கு எதைக் கண்டும் பயம் இல்லை. நீங்கள் அதைப் பார்த்தால் அது தேவ ஆவியினால் ஏவப்பட்டதாக இருக்க வேண்டும். தேவன் உங்களிடம் என்ன விரும்புகிறார் என்பதை அறிய வேதாகமத்தை வாசித்துப் பாருங்கள்.** ✝

# எண்ணிக்கை அடிப்படையிலான மற்றும் ஆவிக்குரிய பிரகாரமான வளர்ச்சி காரணிகள்

# Numerical and Spiritual Growth Factors

*Ronald D. Reeves*

சமீப காலங்களில், சபை வளர்ச்சியில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிற காரியங்களைப் புரிந்து கொள்ள சகோதரர்கள் தங்களைத்தாமே அர்ப்பணித்திருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சி தகவல்களோடு கீழ்க்காணும் காரியங்களை நாம் வளர்த்துக் கொண்டால் மிகப்பெரிய வளர்ச்சியை நாம் அடைய முடியும்.

1. **அனுதின கிறிஸ்தவ ஜீவியத்தில் உண்மைத்தன்மை :**
   சபை அங்கத்தினர்கள் நல்ல காரியங்களுக்காக நிற்பதற்காக அறியப்பட்டிருக்கிறபடியால் அவர்கள் தங்கள் குடும்பங்களை தேவ பக்தியில் வழி நடத்த வேண்டும்.

2. **கிறிஸ்துவுக்காக உறுதியான அர்ப்பணிப்பு :**
   சபை அங்கத்தினர்கள் ஆவிக்குரிய முயற்சிகளில் உண்மையான தனிப்பட்ட அர்ப்பணிப்பை காட்ட வேண்டும்.

3. **தேவனுடைய ராஜ்ஜியத்தில் சுறுசுறுப்பான செயல்பாடுகள் :**
   சபை அங்கத்தினர்கள் சபையில் பெரும்பாலான வேலைகளை குருட்டுத்தனமாக பின்பற்றக்கூடாது. அவர்களே நேரில் செயல்பட வேண்டும்

4. **உண்மையான தனிப்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சி :**
   சபை அங்கத்தினர்கள் நீதியின் மேல் பசிதாகமுடையவர்களாக இருக்க வேண்டும்.

5. **தியாகப்பூர்மான கிறிஸ்தவ ஜீவியம்**
   சபை அங்கத்தினர்கள் கிறிஸ்துவின் நிமித்தம் தனிப்பட்ட ரீதியில் தியாகங்களைச் செய்ய தயக்கம் காட்ட கூடாது.

6. **புதிய ஏற்பாட்டு சபை மீதான அன்பு**

சபை அங்கத்தினர்கள் எப்படி தங்கள் குடும்பத்தின் மீது அக்கறை கொள்கிறார்களோ அதே மாதிரி கர்த்தருடைய சபையின் மீதும் அக்கறை கொள்ளவேண்டும்.

7. **மனித ஆத்துமாக்கள் மீதான அன்பு**

சமுதாயம் மற்றும் இனம் சம்மந்தமான காரியங்கள் ஆத்துமாக்களை தேடுவதற்கும், இரட்சிப்பதற்கும் தடைகளாக இருக்க அனுமதிக்கக் கூடாது.

நாம் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடும் போது மேற்சொல்லப்பட்ட இந்த ஏழு பண்புகளும் நமக்கு பெரிதாக உதவும் ( II தீமோத்தேயு 4:7) , இந்த பகுதிகளில் நாம் வளர்வோமாக.

---

## கிறிஸ்தவத்தை எப்படி வெளிப்படுத்துவது?

| | | |
|---|---|---|
| குடும்பத்தில் | - | அன்பாலும், தன்னலமற்ற தன்மையாலும் |
| வியாபாரத்தில் | - | நேர்மையினாலும், கவனத்தாலும் |
| சமுதாயத்தில் | - | தயவாலும், தாழ்மையினாலும் |
| பாதிக்கப்பட்டவர்களிடத்தில் | - | கருணையினாலும், இரக்கத்தாலும் |
| பெலவீனர்களிடத்தில் | - | பொறுமையினாலும், உதவியினாலும் |
| துன்மார்க்கரிடத்தில் | - | நிதானத்தினாலும், தீமையை வெல்வதினாலும் |
| தேவனிடத்தில் | - | அன்பாலும், கீழ்ப்படிதலினாலும். |

# கிறிஸ்தவர்களும் சபையும்

# Christians and The Church

*Dan. R. Owen*

கர்த்தருடைய சபை உங்களுக்கு எப்படி முக்கியமான தாயிருக்கிறது? நீங்கள் சபையை நேசிக்கிறீர்களா? சமீபத்தில் அமெரிக்காவிலுள்ள Duke பல்கலைக்கழகத்தின் இறையியல் துறையின் சார்பாக நடத்தப்பட்ட ஆய்வில் பெரும்பாலான அமெரிக்கர்கள் தேவனுடனான உறவை மதிப்பதாகவும். ஆனால், சபை சம்மந்தமான காரியங்களில் குறைவான விருப்பம் உள்ளவர் களாக இருப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் உலகப்போருக்கு முந்தைய தலைமுறையில் 53% மக்கள் அவர்கள் வளர்ந்து வந்த கால கட்டங்களில் சபைக்கு போகிறவர்களாகவே இருந்திருக்கிறார்கள். பின்பு அந்த எண்ணிக்கை அடுத்த தலை முறையில் 45 சதவீதமாக குறைந்தது. அதற்கடுத்த தலை முறையில் அந்த எண்ணிக்கை 35 சதவீதமாக குறைந்தது. ஆனால், இன்றைய நாட்களில் ஜனங்கள் தாங்கள் தேவனுக்கு தங்களை அர்ப்பணித்திருப்பதாகவும், சபைக்கு அல்ல என்றும் சொல்கிறார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரை நான் கர்த்தருடைய சபையைப் மிகவும் நேசிக்கிறேன், ஏனென்றால், அந்த சபைக்காகத்தான் இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு வந்தார்.

## இயேசு இவ்வுலகத்திற்கு வந்ததற்கான பிரதான நோக்கம்

தம்முடைய சபையை ஸ்தாபிப்பதற்காகத்தான் எருசலேமில் அதற் கான நாளை எதிர்பார்த்த இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களைப் பார்த்து அந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை என்று சொன்னார் [மத்தேயு 16:18]. சிறிது நேரத்திற்கு முன்பாகத்தான் பேதுரு இயேசுவை கிறிஸ்து என்று அறிக்கையிட்டார். பெந்தேகொஸ்தே நாளிலே சுவிசேஷ செய்தியின் உச்சம் தேவன் இயேசுவை ஆண்ட வரும் கிறிஸ்துவுமாக்கினாரென்பதுதான். இயேசு கிறிஸ்துவை தங்கள் வாழ்விலே ராஜாவாகவும் கர்த்தராகவும் ஏற்றுக்கொண்ட வர்கள்தான் சுவிசேஷ செய்தியை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று சபையின் முதல் அங்கத்தினர்களானார்கள். இயேசு கிறிஸ்து தம்மை உலகத்தின் ஆண்டவராக ஸ்தாபித்தப்பிறகு தான் சபையை அவர் ஸ்தாபித்தார். ஏனென்றால், சபை என்பது அவருக்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்களை உள்ளடக்கிய ஒன்றாகும்.

இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார் [லூக்கா 19:10]. மனித இனம் அதன் பாவத்தினால் இழந்து போயிருக்கிறது. பாவமானது ஜனங்களை தங்கள் தேவனிடமிருந்து பிரித்து வருவதால். அவர்கள் தங்கள் பாவங்களிலும் அக்கிரமங்களிலும் மரித்து விடுகிறார்கள். ஜனங்கள் தேவனிடமிருந்து பிரிந்து விடுவதால் அவர்கள் இவ்வுலகில் தேவனில்லாமலும், நம்பிக்கையில்லாமலும் இருக்கிறார்கள். இழந்துபோன ஜனங்களுக்கு தேவனுடைய கோபாக்கினையைத் தவிர எதிர்நோக்குவதற்கு ஒன்றுமே இல்லை [ரோமர் 1:18; 2:7-8]. ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நீதிமானாக்கப்படுவதன் மூலமாகத்தான் தேவ கோபாக்கினையிலிருந்து காப்பாற்றப்பட முடியும். [ரோமர் 5:8,9]. இயேசு கிறிஸ்து சிலுவையிலே தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தபோது இழந்துபோனவர்களை இரட்சிக்கும்படியாகவே அப்படிச் செய்தார். ஆயினும், இயேசு கிறிஸ்துவின் மரணத்தை சுவிசேஷத்தின் மூலமாகக் கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி மற்றும் ஞானஸ் தானத்தின் மூலமாக அந்த சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிகிறவர்கள் பாவத்திலிருந்தும், தேவ கோபாக்கினையிலிருந்தும் காப்பாற்றப்படுகிறார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சபையிலே சேர்க்கிறார் [அப்போஸ்தலர் 2:41,47]. ஆகவே, இயேசு இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் வந்தார் என்று சொல்வதும் அவர் சபையை ஸ்தாபிக்க வந்தார் என்று சொல்வதும் ஒன்றுதான்.

இயேசு கிறிஸ்து அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் [மாற்கு 10:45]. கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது [எபேசியர் 1:7]. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக நாம் கட்டித் தீர்க்க முடியாத பாவக் கடனை அவர் முழுமையாக கட்டித் தீர்த்தார். பரமசேனை இயேசுவைப் பார்த்து இவ்விதமாக துதித்தது. நீர் அடிக்கப்பட்டு சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு [வெளி 5:9]. பவுல் எபேசு பட்டணத்து மூப்பர்களைப் பார்த்து தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் என்று சொன்னார் [அப்போஸ்தலர் 20:28]. எனவே, இயேசு கிறிஸ்து நம்மை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க வந்தார் என்பதும் அவர் சபையை கட்ட வந்தவர் என்பதும் ஒன்றுதான். ✝

# சபை
# The Church

**ச**பை என்பதே மனிதர்களை தேவனிடத்தில் ஒப்புரவாக்குவதைப் பற்றியதுதான். அது தேவனுடைய மீட்பின் நித்திய திட்டத்தின் மையமாயிருக்கிறது.

இப்படி இவைகளெல்லாம் உண்மையாயிருக்க இவ்வுலகில் நமக்கு சபைதான் மிக முக்கியமான ஒன்றாக இருக்க வேண்டும். நாம் சபையை நேசிக்க வேண்டும். சேவை செய்ய வேண்டும். அதற்கு ஆதரவாக இருந்து அதற்காக ஜெபிக்க வேண்டும். இவைகளை எல்லாம் நாம் செய்ய வேண்டும். ஏனென்றால், அப்படி செய்யும்போது மட்டுமே கர்த்தரை நாம் சேவிக்க முடியும். இயேசு கிறிஸ்து சபைக்காக தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார் [எபேசியர் 5:25]. நாம் இயேசுவை நேசித்தால் நாம் அவர் கட்டிய சபையையும் நேசிப்போம்.

இஸ்ரவேலே கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் அன்பு கூருவாயாக [உபாகமம் 6:45]. தேவன் இஸ்ரவேலர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து அவர்களை மாபெரும் தேசமாக மாற்றியபடியால் இஸ்ரவேலர்களுக்கு தேவனிடத்தில் முழு ஆத்துமாவோடும் முழு பலத்தோடும் அன்புகூர்வது அவ்வளவு கடினமான ஒன்றாக இருந்திருக்கக் கூடாது. தேவன் நமக்கும் அதே மாதிரிதான் செய்திருக்கிறார். அதாவது, தேவன் நம்மை பாவத்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுவித்து நம்மை பரிசுத்த ஜாதியாக மாற்றி [Iபேதுரு 2:9]. தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தியிருக்கிறார் [கொலோசெயர் 1:13]. தேவனுக்கு நம் பதில் என்ன?

✝

## வசன ஆராய்ச்சி
## I கொரிந்தியர் 10:14–31
## Jerry Bates

ஆகையால் எனக்குப் பிரியமானவர்களே, விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள். உங்களைப் புத்திமான்களென்று எண்ணி பேசுகிறேன்; நான் சொல்லுகிறதை நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்ததின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும், ஒரே சரீரமுமாயிருக்கிறோம். மாம்சத்தின்படியாக இஸ்ரவேலரைப் பாருங்கள்; பலிகளைப் புசிக்கிறவர்கள் பலிபீடத் தோடே ஐக்கியமாயிருக்கிறார்களல்லவா? இப்படியிருக்க விக்கிரகம் ஒரு பொருளென்றும் விக்கிரகத்திற்குப் படைக்கப்பட்டது ஒரு பொருளென்றும் நான் சொல்லுகிறேனோ? அஞ்ஞானிகள் பலியிடு கிறவைகளை தேவனுக்கு அல்ல பேய்களுக்கே பலியிடுகிறார் களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை. நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம் பண்ணக்கூடாதே: நீங்கள் கர்த்த ருடைய போஜன பந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக் கூடாதே. நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவீனர்களா?

எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு. ஆகிலும், எல்லாம் பக்தி விருத்தியை உண்டாக்காது. ஒவ்வொரு வனும் தன் சுயபிர யோஜனத்தைத் தேடாமல் பிறருடைய பிரயோஜனத்தைத் தேடக் கடவன். கடையிலே விற்கப்படுகிற எதையும் வாங்கிப் புசியுங்கள்; மனச்சாட்சியினிமித்தம் நீங்கள் ஒன்றையும் விசாரிக்க வேண்டிய தில்லை. பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. அன்றியும் அவிசுவாசிகளுள் ஒருவன் உங்களை விருந்துக்கு அழைக்கும்போது, போக உங்களுக்கு மனதிருந்தால் மனச்சாட்சினிமித்தம் ஒன்றையும் விசாரியாமல் உங்கள் முன் வைக்கப்படுகிற எதையும் புசியுங்கள். ஆயினும், இது விக்கிரகங் களுக்குப் படைக்கப் பட்டதென்று ஒருவன் உங்களுக்குச் சொன்னால், அப்படி அறிவித்தவனிமித்தமும் மனச் சாட்சியினி மித்தமும் புசியாதிருங்கள்: பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. உன்னுடைய மனச்சாட்சியைக் குறித்து நான் இப்படிச் சொல்லாமல் மற்றொருவருடைய மனச்சாட்சி யினாலே குற்றமாய் எண்ணப்பட வேண்டுவதென்ன? மேலும், நான் அதை ஸ்தோத்தரித்து

அனுபவிக்கிற பொருளைக் குறித்து நான் தூஷிக்கப்படுவேன்? ஆகையால், நீங்கள் புசித்தாலும், குடித்தாலும் எதைச்செய்தாலும், எல்லா வற்றையும் தேவனுடைய மகிமைக் கென்று செய்யுங்கள்.

ஆகையால் எனக்குப் பிரியமானவர்களே, விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள். உங்களைப் புத்திமான்களென்று எண்ணிப் பேசுகிறேன்; நான் சொல்லுகிறதை நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும், ஒரே சரீரமுமாயிருக்கிறோம். மாம்சத்தின் படியாக இஸ்ரவேலரைப் பாருங்கள்; பலிகளைப் புசிக்கிறவர்கள் பலிபீடத் தோடே ஐக்கியமாயிருக்கிறார்களல்லவா? இப்படியிருக்க விக்கிரகம் ஒரு பொருளென்றும் விக்கிரகத்திற்குப் படைக்கப்பட்டது ஒரு பொருளென்றும் நான் சொல்லுகிறேனோ? அஞ்ஞானிகள் பலியிடு கிறவைகளை தேவனுக்கு அல்ல பேய்களுக்கே பலியிடுகிறார் களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை. நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம் பண்ணக்கூடாதே: நீங்கள் கர்த்தருடைய போஜன பந்திற்கும் பேய்களுடைய போஜனபந்திற்கும் பங்குள்ளவர்களாயிருக்கக் கூடாதே. நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரும் நாம் பாவங்களா? எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்தி விருத்தியை உண்டாக்காது.

ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல் பிறருடைய பிரயோஜனத்தைத் தேடக் கடவன். கடையிலே விற்கப்படுகிற எதையும் வாங்கிப் புசியுங்கள்; மனச்சாட்சியினிமித்தம் நீங்கள் ஒன்றையும் விசாரிக்க வேண்டியதில்லை. பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. அன்றியும் அவிசுவாசிகளுள் ஒருவன் உங்களை விருந்துக்கு அழைக்கும்போது, போக உங்களுக்கு மனதிருந்தால் மனச்சாட்சி யினிமித்தம் ஒன்றையும் விசாரியாமல் உங்கள் முன் வைக்கப்படுகிற எதையும் புசியுங்கள். ஆயினும், இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதென்று ஒருவன் உங்களுக்குச் சொன்னால், அப்படி அறிவித்தவனிமித்தமும் மனச்சாட்சி யினிமித்தமும் புசியாதிருங்கள்: பூமியும் அதின் நிறைவும் கர்த்த ருடையது. உன்னுடைய மனச் சாட்சியைக் குறித்து நான் இப்படிச் சொல்லாமல் மற்றொருவருடைய மனச்சாட்சியினாலே குற்றமாய் எண்ணப்பட வேண்டுவதென்ன? மேலும், நான் அதை ஸ்தோத்தரித்து அனுபவிக்கிற பொருளைக் குறித்து நான் தூஷிக்கப் படுவேன்? ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.

**தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்.**

1. பவுல் குறிப்பிடுகிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் என்ன? (வசனம் 16)

2. அப்பம் எதைக் குறிக்கிறது? (வசனம் 16)

3. கிறிஸ்தவர்களாகிய நாம் அநேகராயிருந்தாலும் நாம் ஒரே .......... ஒரே .......... (வசனம் 17)

4. கிறிஸ்தவர்கள் யாரோடு ஐக்கியமாயிருக்கக் கூடாது? (வசனம் 20)

5. கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய ........... பேய்களுடைய ......... பானம் பண்ணக்கூடாதே (வசனம் 21)

6. கிறிஸ்தவர்கள் யாருடைய பிரயோஜனத்தைத் தேட வேண்டும்? (வசனம் 24)

7. கிறிஸ்தவர்கள் கடையிலே விற்கப்படுகிற எல்லாவற்றையும் எதினால் வாங்கிப் புசிக்க முடிகிறது? (வசனம் 25).

8. கிறிஸ்தவர்கள் அவிசுவாசிகளுடைய வீட்டுக்கு அழைக்கப் பட்டால் என்ன செய்ய வேண்டும்?

9. கிறிஸ்தவர்களிடத்தில் ஒருவர் இது விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டதென்று சொன்னால் அவர்கள் என்ன செய்ய வேண்டும்? (வசனம் 28).

10. பவுல் யாருடைய மனச்சாட்சியைக் குறித்து இங்கே அக்கறைப்படுகிறார்? (வசனம் 29).

11. நாம் புசித்ததாலும் குடித்தாலும் எதற்கென்று செய்ய வேண்டும்? (வசனம் 31).

# ஆராதனை
# பாடல் சபை வளர்ச்சியை பாதிக்கிறது
## *Singing Affcts Church Growth*
## *E. Claude Gardner*

முந்தைய தலைமுறையின் புகழ் பெற்ற பிரசங்கியார் ஒருவர் சபையில் பாடலுக்கான முக்கியத்துவத்தை வலியுறுத்தி நாம் பிரசங்கிப்பதை விட நன்றாகப் பாடுகிறோம் என்று முழங்கினார். இது இன்று முக்கியமில்லாமல் இருக்கலாம். உண்மையில், சபைகளில் பாடலும், பிரசங்கமும் மேம்பட வேண்டும்.



நாம் சபை நடுவில் தேவனை துதித்துப்பாட வேண்டும் [எபிரெயர் 2:12]. பாடல் சபை வளர்ச்சிக்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்குகிறது. சில பாடங்கள் சபை வளர்ச்சியையும் ஏற்படுத்துவதில்லை, ஆராதனையின் தரத்தையும் உயர்த்துவதில்லை. பாடல் பாடுவதின் நோக்கம் துதிப்பதற்கும், போதிப்பதற்கும் என்று சுருக்கமாகச் சொல்லப்படும். [எபேசியர் 5:19 ம்] [கொலோசெயர் 3:16ம்] இது சம்மந்தமான வசனங்களாகும். பாடலில் வழி நடத்துகின்ற எல்லோரும் ஆராதனையை ஒழுங்கு செய்கிறவர்களும், எல்லா கிறிஸ்தவர்களும் இவைகளை மனதில் கொள்ள வேண்டும். சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திச் சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி [ கொலோ 3:16].

நன்றாக உற்றுப் பார்த்தால், ஆராதனையில் பயன்படுத்தப்படும் பாடல்களில் பெரும்பாலானவைகள் தேவனை துதிக்கும் பாடலாகவும், போற்றும் பாடலாகவுந்தான் இருக்கிறது. விசுவாசிகளை செயல்பட அழைக்கும் போதனைப் பாடல்கள் அலட்சியப்படுத்தப்படுகின்றன. ஒருவரிடம் துதிப்பாடல்கள் எத்தனை போதனை பாடல்கள் எத்தனை என பட்டியலிடச் சொன்னால் அங்கே ஆச்சரியம் தான் காத்திருக்கும்.

பொதுவாக துதிப்பாடல்களை தேவனுக்கான வேலை செய்வதற்கான எவ்வித அர்ப்பணிப்புமின்றி ஆழமான அன்பு மற்றும் உற்சாகத்தோடு பாடிவிடலாம். மேலும், இதை நாம் செயல்பாட்டிற்கான எவ்வித தீர்மானமும் எடுக்காமல் நம்முடைய சௌகரியத்திற்கு ஏற்றவாறு பாடிவிடலாம்.

பல இடங்களில் சபை வளர்ச்சி மிகப்பெரிய பிரச்சனையாக உருவெடுத்திருக்கிறது. பல சபைகள் அங்கத்தினர்களை இழந்து வெறிச்சோடி காணப்படுகின்றன. வளர்ச்சியின்மைக்கு பல்வேறுபட்ட காரணங்கள் சொல்லப்படுகின்றன. அதில் சில உண்மைகளும் இருக்கத் தான் செய்கின்றன. இருந்தபோதிலும், அதில் ஒரு அபிப்பிராயம் என்னவென்றால், பழைய போதனை பாடல்களை நாம் தவிர்ப்பதன் மூலமாக நம் ஊழிய ப் பொறுப்புகளை தட்டிக்கழிக்கிறோம். இவ்வகையான பாடல்களை நாம் பாடும் போது நாம் மாய்மாலம் செய்து பொய்யை பாடமாட்டோம். நாம் கர்த்தருக்காக செய்யும் பணிக்காக அழைப்பு விடுத்து பாடல்பாடும் போது நாம் நண்பர்களுக்குப் போதிக்க முயற்சிக்கிறோம். அதேபோல் வழிதப்பிப்போனவர்களை மறுபடியும் மீட்க விரும்புகிறோம்.

✝

---


## குறிப்புகள் :

1. **எல்லா கிறிஸ்தவர்களும் பாட வேண்டும். ஒருவர் மற்றவரைப் போல் நன்றாகப் பாடாமல் இருக்கலாம். ஆனால் ஒருவர் தன்னால் முடிந்த வரை சிறந்த முறையில் கர்த்தரிடம் பாட முடியும்.**

2. **நாம் துதிப்பாடல்கள், போதனை பாடல்கள் என்று எல்லாவகையான பாடல்களையும் பாட வேண்டும். ஏனென்றால், எல்லா பாடல்களும் வேதாகமத்தின் சத்தியத்தைப் போதிக்கின்றன. சத்தியம் எப்படி பிரசங்கிக்கப்படுகிறதோ அப்படியே சத்தியம் பாடப்படவும் வேண்டும்.**

3. **பாடல்களில் சமச்சீரான தன்மை காணப்படும்போது அது ஒட்டு மொத்த சபைக்கும் பிரயோஜனமாயிருக்கும்.**

# பிரிவினைச் சுவர்




**எபிரெயர் 9:11-28- கிறிஸ்துவின் இரத்தம் இருபக்கங்களிலும் பாய்கிறது (I யோவான் 2:2).**

## ஆராதனை
# நேர்மறையான பிரசங்கம்
## *Positive Preaching*
### *Neal Pollard*

தேவன் நேர்மறையான பிரசங்கங்களையே விரும்புகிறார், அப்படித்தானே? உண்மையாகவே பிரசங்கியார்கள் சுவிசேஷத்தின் சத்தியத்தை உறுதிப்படுத்த வேண்டும். அவர்கள் தேவன் சொல்கிறதை வெளிப்டையாக, தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். அவர்களுடைய பிரசங்கம் சந்தேகத்திற்குரியதாகவும், யூகத்தின் அடிப்படையிலும் இருக்கக்கூடாது. அது நிச்சயமானதாகவும், உண்மையானதாகவும் இருக்க வேண்டும். பிரசங்கங்கள் தெளிவான தாகவும், உறுதியானதாகவும் இருக்கும் போது அவைகள் நேர் மறையானதாகவும் இருக்கும். தேவன் வேறு எதிலாவது பிரியமா யிருக்கிறாரா? கீழ்க்காணும் மூன்று காரியங்கள் நேர்மறையான பிரசங்கமல்ல என்று நினைக்கிறேன்.

### பிரச்சனைகளைத் தவிர்ப்பது பிரசங்கமல்ல

சில சபை அங்கத்தினர்கள் உடை, பேச்சு மற்றும் சரியான உறவுமுறை சம்மந்தமாக வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை கேட்காமலேயே வளர்ந்து விட்டார்கள். ஓரினச்சேர்க்கை, ஒழுங்கற்றதன்மை மார்க்கப்பிரிவினையாரோடு வளர்ந்து விட்டார்கள். ஐக்கியம், கிருபையினாலே மாத்திரம் இரட்சிப்பு, இசைக் கருவிகளைப் பயன்படுத்துதல் அல்லது வேறு ஏதாவது பாவப் பிரச்சனையாக இருந்தாலும் சரி ஒரு தேவனுடைய பிரசங்கியார் அவைகளுக்கான தீர்வையும் கண்டு, இத்தகைய காரியங்களில் வேதாகம நிலைப்பாட்டை எடுப்பார். ஒரு மனிதன் ஒழுக்க ரீதியாகவும், உபதேச அடிப்படையிலும் நடுநிலையான பிரசங்கங்களைச் செய்து சக மனிதர்களைப் பிரியப்படுத்தலாம். ஆனால், இந்த நபரால் தேவனுடைய அங்கீகரிப்பைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால், மேற்சொல்லப்பட்ட பிரசங்கங்கள் பொறுமையோடும் அன்போடும் செய்யப்பட வேண்டும் (II தீமோத்தேயு 2:2426) (எபேசியர் 4:15). நேர்மறையான பிரசங்கியார்கள் வாழ்க்கையின் முக்கியமான பிரச்சனைகளை எதிர் கொண்டு, அதற்கு விளக்கம் கொடுத்து அதற்கு பதில் அளிக்கிறார்கள்.

**பெயர் சொல்லி அழைக்கப்படாதது பிரசங்கமல்ல**

உலகத்தின் அசுத்தங்களுக்கும் ( பேதுரு 2:20பு22) மனுஷருடைய உபதேசங்களுக்கும் ( மத்தேயு 15:6–9) மத அமைப்புகளுக்கும் (எபேசியர் 4:4) தப்பித்து சபையில் அங்கம் வகிக்கும் அங்கத்தினர்களுக்கு விசுவாசத்தை பெலப்படுத்தும் பிரசங்கங்கள் செய்யப்பட வேண்டும். சூழ்நிலைகளில் தவறு செய்யும் மார்க்கப் பிரிவினை சபைகள் பெயர் சொல்லி அழைத்து. வெளிப்படையாக கண்டிக்கப்பட வேண்டும். அதே போல் தவறு செய்யும் மார்க்கப் பிரிவினை போதகர்களை வெளிப்படையாக கள்ளப்போதகர்கள் என்று அழைக்க வேண்டும் ( II பேதுரு 2:1). இது கிறிஸ்துவின் சபையிலுள்ள தவறுகளுக்கும் பொருந்தும். அதாவது ஒரு குறிப்பிட்ட இடத்திலே ஒரு பிரச்சனை பெரிய சேதத்தை ஏற்படுத்துமானால் அதன் பெயர்கள் கோட்பாடுகள் செயல்பாடுகள் வெளிப்படையாகவே அறிவிக்கப்படவேண்டும்.

அப்படியென்றால், ஒரு பிரசங்கியார் ஜனங்களுக்கு ஆறுதலான பிரசங்கங்களைச் செய்யாமல் கசப்பான மனப்பான்மையுடன் கடுகடுவென இருக்க வேண்டுமா? இல்லை! பிரசங்கத்தின் போது ஒருவரின் பெயரை உச்சரிக்கத் தவறும் ஒரு பிரசங்கியார் பயப்படுகிறவர்களின் பட்டியலில் வந்துவிடுகிறார் ( வெளிபடுத்தின விசேஷம் 21:8). தவறுகளை சுட்டிக்காட்டும் போது முகத்தை கொடூரமாகவோ, சோகமாகவோ காட்டாமல் தன் இயல்பான முக பாவனைகளை ஒரு பிரசங்கியார் வெளிப்படுத்த வேண்டும்.

கேட்கிறவர்கள் எதை விரும்புகிறார்கள் அதை மட்டும் பிரசங்கிப்பது பிரசங்கமல்ல. தேவனுடைய தூதுவர்களுக்கு இதைக்குறித்து எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது (II தீமோத்தேயு 4:3 4). சில விசுவாசிகள், பிரசங்கியார்கள் தங்கள் பக்கமாகத் திரும்பி இதமாக வார்த்தைகளைப் பேசும் வரை திருப்தி அடைவதில்லை. இன்னும் சில சபைகள், இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசும் பிரசங்கி யார்களையே தெரிந்து கொள்கிறார்கள். பழைய ஏற்பாட்டில் நாம் பார்க்கும் போது ஜனங்களுடைய பாவமான வழிகளினால் தேவ கோபாக்கினை அவர்கள் மீது கொழுந்து விட்டு எரியும் போது சில தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் ஜனங்களுக்கு சமாதான வாக்குத் தத்தங்களை வாரி வழங்கியிருக்கிறார்கள் (எரேமியா 8).

தேவனுடைய முழு ஆலோசனையையும் பிரசங்கியார் மூலமாக கேட்பவர்கள் சில பாடங்களை நடத்துவதற்கு பிரசங்கியார்களுக்கு கடினமானதாக இருந்தாலும் எல்லாவற்றையும் அதாவது, தேவ னுடைய முழு ஆலோசனையையும் அறிவிப்பார்கள் என்பதை அறிந்திருக்கிறார்கள் [ அப்போஸ்தலர் 20:27].

பிரசங்கியார்கள் மத்தியில் ஒரு வாக்கெடுப்பு நடத்தினால் அதாவது, அவர்கள் பரலோகத்தைப் பற்றி பேச விரும்புகிறார்களா? அல்லது நரகத்தைப் பற்றி பேச விரும்புகிறார்களா? என்று ஒரு கணக்கெடுப்பு நடத்தினால் பெரும்பாலானவர்கள் பரலோகத்தைப் பற்றிப் பேசவே விரும்புவார்கள். ஒரு கூட்டத்துக்கு முன்பாக நின்று பிரபலமாகாத ஒரு சத்தியத்தைப் பேசுவது கடினமானது தான். சபையில் அநேகரைப் பாதிக்கும் ஒரு விஷயத்தைப் பற்றி பேசுவது சற்று கடினமானதாகும்.

ஒருவர் சத்தியத்திற்காக நிற்பதற்காக வெறுப்புணர்வுடன் பிரசங்கிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், சாத்தானோடு யுத்தம் செய்ய பயப்படும் கிறிஸ்துவின் போர்ச்சேவகர்கள் நம்பத்தகாத துரோகிகளாக இருப்பார்கள் [எபேசியர் 6:10]. பவுல் கிறிஸ்தவர் களுக்கு கொடுத்த ஆலோசனைகள் பிரசங்கியார்களுக்கும் பொருந்தும். நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப் போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம் [ கலாத்தியர் 6:9].

✝

---

## யோனா – ஜெபங்களின் புத்தகம்

- **கப்பற்காரர் பயந்து தங்கள் தேவர்களை நோக்கி வேண்டினர் [யோனா1:5]**
- **மீனின் வயிற்றிலிருந்து யோனா ஜெபித்தார் [யோனா 2:19]**
- **நினிவே மக்களின் உபவாச ஜெபம் [யோனா 3:59]**
- **தன் ஜீவனை எடுத்துக்கொள்ளும்படி யோனா ஜெபித்தார் [யோனா 4:3].**

## ஆராதனை

# சபையாக சேர்ந்து நாம் பாடும் பாடல் தவறாகும் போது

## *When Our Congnegational Singing Becomes Wrong*

### *Wes MC Adams*

ஆராதனை வேளையில் நாம் சபையாக சேர்ந்து பாடல் பாடுவது வேதாகம அடிப்படையிலானது என்று நம்புகிறேன். மேலும், அது எல்லோருக்கும் நன்மையானது என்றும் நம்புகிறேன். இருந்த போதிலும், நாம் ஜாக்கிரதையாக இல்லாவிட்டால் நம் பாடல் தவறாக மாறிவிடும் என்றும் நம்புகிறேன். நாம் வாரந்தோறும் பாடல் பாடுவதால் நம் பாடல் சரியானது தான் என்று நாம் நினைத்துக் கொள்கிறோம். ஆனால், புதிய ஏற்பாடு இதைப் பற்றி என்னசொல்கிறது என்று மறுபடியும் சோதித்து பார்ப்பது சாலச் சிறந்ததாகும். கீழ்க்காணும் சந்தர்ப்பங்களில் நாம் சபையாக சேர்ந்து பாடும் பாடல் தவறாகிவிடுகிறது.

நம் இருதயங்கள் ஈடுபடுத்தப்படாதபோது பாடல் தவறாகி விடுகிறது. புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கும் கருத்து கிறிஸ்தவ இசையானது இருதயத்திலிருந்து வர வேண்டும் என்பதாயிருக்கிறது. [எபேசியர் 5:19] லிருந்து நமக்குத் தெளிவாகிற காரியம் என்ன வென்றால், ஒரு கிறிஸ்தவன் தன் இருதயத்தைத்தான் இசைக் கருவியாகப் பயன்படுத்தி கர்த்தருக்கு இசையை ஏறெடுக்க வேண்டும் என்பதாயிருக்கிறது. இருந்த போதிலும், ஆராதனையில் நம் உதடுகள் ஈடுபடுத்தப்பட்டு, நம் இருதயங்கள் ஈடுபடுத்தப்படாத போது நம் ஆராதனை வீணான ஆராதனையாக மாறிவிடுகிறது. வேறுவிதமாகச் சொன்னால், நம் ஆராதனை அர்த்தமற்றதாகிவிடும்.

அநேக வேளைகளில் நாம் பாடல் வேளைகளில் பாடலில் கவனம் செலுத்தாமல் எதையோ நினைத்துக் கொண்டு அதை அரை குறை மனதுடன், உற்சாகமில்லாமல் ஏனோதானோ என்று பாடும்போது நம் பாடல் தவறாகி விடுகிறது. என் மனமும் என் இருதயமும் வேறு காரியங்களின் மீது கவனம் வைத்தால் எந்த தைரியத்தில் நாம் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக வந்து அவர் பரிசுத்தர் பரிசுத்தர், பரிசுத்தர், என்று பாடுகிறோம்? நாம் தேவனை நோக்கி துதி பாடல்களைப் பாடும் போது நம் இருதயங்களை ஈடுபடுத்த நாம் கவனமாகவும், ஜாக்கிரதையாகவும் இருக்க வேண்டும். இல்லையென்றால், நம் பாடல்கள் அர்த்தமற்றதாகிவிடும்.

நாம் செய்ய வேண்டிய காரியங்களைச் சரிபார்ப்பது போல பாடல்கள் பாடும் போது அது தவறாக மாறிவிடுகிறது.

துரதிஷ்டவசமாக, சிலர் ஆராதனை செய்ய வேண்டிய காரியங்களை சரிபார்ப்பது போன்ற மனநிலையாக ஏற்படுத்தி யிருக்கிறார்கள். நான் இந்த வாரம் ஆராதனையில் பங்கெடுத்தேன். நான் தலைதாழ்த்தி ஜெபித்தேன். நான் பாடல்களைப் பாடினேன், நான் என் கடமையை நிறைவேற்றினேன் என்று நாம் சொல்லத் தொடங்கிவிட்டோம். நாம் ஆராதனையை இந்த விதமாக அணுகுவது எவ்வளவு சோககரமானது.

நிச்சயமாகவே, மேற்சொல்லப்பட்ட காரியங்களையெல்லாம் நாம் செய்ய வேண்டும். ஆனால், ஆராதனையை அலாதியான ஒன்றாகவும், ஆசீர்வாதமான ஒன்றாகவும் பார்ப்பதற்குப் பதிலாக அதை செய்ய வேண்டிய கடமையாக பார்ப்பது பொருத்தமான ஒன்றல்ல. இது என் சொந்த வீட்டில் ஆகாரத்தைப் புசித்துவிட்டு அதன்பிறகு, நான் செய்ய வேண்டியதைத்தான் செய்கிறேன், நான் விருந்தில் பங்கெடுத்தேன், நான் என் குடும்பத்தோடு புசித்தேன், நான் என் கடமையை நிறைவேற்றினேன் என்று சொல்வதைப் போல் உள்ளது. நான் இப்படியெல்லாம் சொன்னால் என் பிள்ளைகள் அல்லது மனைவி என்னை பாராட்டுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. உங்களுக்கு எப்படித் தோன்றுகிறதுத?

நாம் தேவனுக்காக சேர்ந்து பாடும் வேளை வாரத்தின் மிகப் பிரதானமான வேளையாக அமைய வேண்டும். அதை நாம் குடும்பமாக சேர்ந்து வந்து நம் பரலோக தகப்பனிடம் அவரை எவ்வளவாக நேசிக்கிறோம் என்று அறிக்கையிடும் வேளையாக இருக்கிறது. உற்சாகமாகக் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் என்பது காணிக்கைப் பெட்டியில் காணிக்கைப் போடுவதற்கு மட்டுமல்ல. வாழ்க்கையின் பல பகுதிகளுக்கும் பொருந்தும். நாம் விசனமாயும், கட்டாயமாகவும் கொடுக்கும் போது தேவன் அதில் பிரியப்படுவதில்லை [II கொரிந்தியர் 9:7].

நம் பாடல்கள் எல்லாமே இசைக்கருவிகளை சார்ந்து அமையும் போது அது தவறாகிவிடுகிறது.

நாம் சபையாக சேர்ந்து பாடும் போது அது இசைக் கருவிகளோடுதான் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. நாம் இசைக்கருவிகளோடு பாடல்களை தேவனுக்கு ஏறெடுக்கும் போது

பாடலின் நோக்கத்தையே வீணாக்கி விடுகிறோம். என் நண்பர் ஒருவர் இவ்விதமாகச் சொன்னார். நாம் சோகமான பாடல்களை மெதுவாகப் பாடுகிறோம், சந்தோஷமான பாடல்களை வேகமாக குரல்களை உயர்த்திப் பாடுகிறோம், எல்லா பாடல்களும் ஒரே மாதிரியாகத்தான் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. எனவே, ஒருவர் இது போன்ற மெதுவான பாடல்களைப் பாடிப்பாடி சோர்ந்து போய்விட்டேன், உற்சாகமான வேகமான பாடல்களையே நான் விரும்புகிறேன் என்று சொன்னால் அவர் பாடல்களின் நோக்கத்தை சிதைத்துவிட்டார் என்று தான் பொருள்படும்.

**மிக முக்கியமான கருத்து :**

நாம் சபையாக சேர்ந்து பாடல்களைப் பாடுவது ஒருவருக் கொருவர் பக்திவிருத்தியை உண்டாக்கும் வேளையாகவும், தேவனை துதிக்கும் வேளையாகவும், மகிமைப்படுத்தும் வேளை யாகவும் அமைகிறது. ஆனால், அது உள் நோக்கமாக இல்லா விட்டால் நம் பாடல்கள் அர்த்தமற்ற சடங்காச்சாரமாகவும், பொழுது போக்கு அம்சமாகவும் மாற நாமே அனுமதித்து விடுவோம். அப்போது நம் குரல்களின் சத்தத்தை நாமே ரசிப்பவர்களாகத் தான் இருப்போம். நாம் எதற்குக் கவனம் கொடுக்க வேண்டுமோ அதற்கு கவனம் கொடுத்து உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை தேவனுக்கு ஏறெடுப்போம் (எபிரெயர் 13:15).

✝

---

**எண்ணிப் பார்ப்போம்**

*தேவன் நமக்கு எத்தனையோ ஆசீர்வாதங்களைத் தந்திருக்கிறார். தேவனிடத்திலிருந்து நான் ஒரு ஆசீர்வாதத்தைக் கூட பெறவில்லை என்று ஒருவர்கூட சொல்ல முடியாது. ஆனாலும், பல வேளைகளில் தேவன் எங்களுக்கு ஒரு நன்மையும் செய்யவில்லை என்று சிலர் முறு முறுப்பதை, முணுமுணுப்பதை நாம் பார்க்க முடியும். உண்மையாகவே, தேவன் நமக்குப் கொடுத்த ஆசீர்வாதங்களை எண்ணிப்பார்க்க நாம் அதிக நேரத்தை எடுத்துக் கொண்டால், நாம் கவலைப்படுவதற்கு நமக்கு நேரமே இருக்காது.*

## தேவனுக்கு மகிமையைக்கொண்டு வரும் கொடுத்தல்

## Giving that Brings Glory to God

**Demar Elam**

எவ்வகையான கொடுத்தல் தேவனுக்கு மகிமையைக்கொண்டு வருகிறது? சிலுவையின் செய்தியை அதாவது இயேசு கிறிஸ்து மூலமாக மனிதனுக்கு கொடுக்கப்பட்ட கிரியை சர்வ சிருஷ்டிக்கும் எடுத்துச் செல்ல வல்லமையுள்ள கொடுத்தலே தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருகிறது. விதவைகளை, அநாதைகளை, சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருப்பவர்களை துன்பப்படுகிறவர்களை விடுவிக்கும் கொடுத்தலே தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருகிறது. கிறிஸ்தவ உதாரத்துவத்தின் விளைவாக செய்யப்படும் நற்கிரியைகளைக் கொண்டு தெருவில் இருக்கும் ஒருவரை தேவனை மகிமைப்படுத்தச் செய்யும் கொடுத்தலே தேவனுக்கு மகிமையைக் கொண்டுவரும் கொடுத்தலாகும்.

வேதாகமம் மனிதன் தேவனுக்கு மகிமையைக்கொண்டு வரும் விதத்தில் தன் உக்கிராணத்துவ கடமைகளை நிறைவேற்றத் தேவையான போதனைகளால் நிறைந்திருக்கிறது. நம் கொடுத்தல் மகிமையானதாகவும், அருமையானதாகவும், உதாரத்துவமாகவும், அர்த்தமுள்ளதாகவும், உற்சாகமானதாகவும், நன்மை பயக்கத் தக்கதாகவும் இருக்க வேண்டும். கொஞ்சமாகக் கொடுத்து கடமை முடிந்தது என்று சமாளிப்பதை விட அதிகமாகக் கொடுத்து அதனால் வரும் அதீத ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் தேவனுக்கு மகிமையை கொண்டு வரத்தக்க நம் கொடுத்தல் இருக்க வேண்டும். வாங்குகிறதைப் பார்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறாரே [அப்போஸ்தலர் 20:35]

கொடுத்தலைப்பற்றி பேசுவதற்கு, விவாதிப்பதற்கு பலர் பயப்படும்போது நம் இயேசு அதற்கு பயப்படவில்லை. நம் ஆண்டவர் கொடுங்கள் என்னும் வார்த்தையைப் பயன்படுத்தத் தயங்கவில்லை [லூக்கா 6:38]. ல் நம் கர்த்தரின் வார்த்தைகளைக் கவனியுங்கள், கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்கிக்குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்.

நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார். இங்கே இன்றைய நாட்களில் பெரும்பாலானோர் பயன்படுத்தத் தயங்கும் கொடுங்கள் என்னும் வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்.

சரி, கர்த்தருக்கு நாம் கொடுப்பதினால் நமக்கு கிடைக்கும் பயன்கள் என்ன? நாம் எப்படிக் கொடுக்கிறோமோ அப்படி நமக்கு திருப்பித் தருவதாக நம் கர்த்தர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அதை அடிப்படையாக வைத்துப் பார்த்தால் வாழ்க்கையில் உங்களுக்கு தேவைப்படும் காரியங்களை நீங்கள் பெற்றுக்கொள்வீர்களா அல்லது குறைவுபடுமோ? நம் கொடுத்தலுக்கும் நம் ஆசீர்வாதங் களுக்குமிடையே நேரடித் தொடர்பு உண்டு. இயேசு கிறிஸ்து நமக்கு அமுக்கிக்குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து தருவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இப்போது இங்கே கேள்வி என்ன வென்றால் நாம் லூக்கா 6:38 யை விசுவாசிக்கிறோமா இல்லையா? நாம் தேவனுக்கு மகிமை உண்டாகும் விதத்தில் கொடுக்கவில்லை யென்றால் நாம் விசுவாசிக்கிறோம் என்று சொல்ல முடியாது.

இது கொடுத்தலைப் பற்றி நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மாபெரும் பாடமாகும். தேவனுடைய குமாரன் நாம் எந்த அளவு உதாரத் துவமாக கொடுக்கிறோமோ அந்த அளவு நம்மை ஆசீர்வதிப்பதாக வாக்கு தத்தம் செய்திருக்கிறார். ஆனால், அவரைப் பின்பற்றுபவர்கள் இயேசு சர்வவல்லவர் அவர் செய்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் என்பதை விசுவாசிக்கிறார்களா என்பதுதான் கேள்வியாயிருக்கிறது. ஆனால், சோகமான உண்மை என்ன வென்றால் பலருக்கு தேவன் மகிமைப்படும் அளவுக்கு உதாரத்துவ மாய்க் கொடுப்பதற்கு விசுவாசமில்லை. தேவன் மல்கியா 3:10 லும் இவ்விதமாக வாக்குதத்தம் செய்கிறார். என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசமபாகங்களையெல்லாம் பண்டக சாலை யிலே கொண்டு வாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பல கணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். இங்கே மனிதன் தன் இருதயத்தின் நிலையை தேவனுக்கு கொடுப்பது மூலமாக வெளிப்படுத்த வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். உதாரத்துவமாய் தேவனுக்குக்கொடுங்கள் உதாரத்துவமாய் பெற்றுக் கொள்ளுங்கள் இல்லையென்றால் கொஞ்சமாகக் கொடுங்கள், கொஞ்சமாக பெற்றுக் கொள்ளுங்கள் அவ்வளவுதான்.

தேவனுடைய குமாரன் நாம் எந்த அளவு கொடுக்கிறோமோ அந்த அளவு நம்மை ஆசீர்வதிப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். உங்கள் கொடுத்தல் கிறிஸ்துவிலும் அவருடைய வாக்குத்தத்திலும் விசுவாசத்தை பிரதிபலிக்கிறதா (லூக்கா 6:38; மல்கியா 3:810). தேவன் என்னை சோதித்துப் பாருங்கள் என்று வேதாகமத்தில் ஓர் இடத்தில் சொல்லியிருக்கிறார் என்றால் அது மல்கியா 3:1 ல் தான். பவுல் (பிலிப்பியர் 4:10-20) வசனங்களில் தன் உபத்திரவத்தில் பிலிப்பி

பட்டணத்தார் உதாரத்துவமாகக் கொடுத்ததை குறிப்பிட்டு சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே தான் மக்கதோனியாவிலிருந்து புறப்பட்டபோது கொடுக்கல் வாங்கல் காரியத்தில் பிலிப்பி பட்டணத்தார் மாத்திரம் உடன்பட்டதாக குறிப்பிடுகிறார். மேலும், அந்தச் சபையார் தன்னுடைய தேவையில் இரண்டொருதரம் உதவியதாகவும் குறிப்பிடுகிறார். இவ்வகையான கொடுத்தல் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருகிறது! அதனால்தான் பவுல் பிலிப்பியரைப் பார்த்து உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன் என்று சொல்கிறார் [பிலிப்பியர் 4:17]. இங்கே பிலிப்பி பட்டணத்தார் பவுலுக்கு ஊழியத்தில் உதவி செய்வதால் அவர்களுடைய கணக்குக்குப் பலன் பெருகுகிறதை கவனியுங்கள்; அவர்களுடைய கொடுத்தலைப் பற்றி பவுல் சொல்லும் போது உங்களால் அனுப்பப்பட்டவைகளை சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப் பற்றிக் கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன் என்று சொல்கிறார் [பிலிப்பியர் 4:18]. கிறிஸ்துவின் ஊழியம் முன்னேறிச் செல்லவும் அதற்காக பொருளாதார உதவிகளைச் செய்யவும் நீங்கள் எதாவது தியாகம் செய்திருக்கிறீர்னா? எப்போதாவது நீங்கள் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியைக் கொடுத்திருக்கிறீர்களா?

இங்கே தேவனுக்கு மகிமையைக் கொண்டுவரும் கொடுத்தலினால் என்ன நடக்கும் என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள் என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் [பிலிப்பியர் 4:19]. தேவனுக்காகத் தியாகப்பூர்வமாக கொடுத்து அவரை மகிமைப்படுத்துபவர்களின் குறைவையெல்லாம் நிறைவாக்குவார் என்பது தேவனுடைய உறுதிமொழியாக இருக்கிறது. இவ்வகையான தியாகப்பூர்வமான கொடுத்தல் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக என்று பவுலை சொல்ல வைத்தது [பிலிப்பியர் 4:20].

கிறிஸ்தவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்து அவைகளை பற்றிக்கொண்டு தேவனுக்கென்று கொடுப்பதினால் அவர்கள் எதையும் இழந்து போவதில்லை. மாறாக, செழிப்பாக பெற்றுக்கொள்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த ஒட்டுமொத்த செயல்முறையும் மிக எளிதானதாகும். தேவன் தம்மைப் பின்பற்றுபவர்கள் தமக்கு உற்சாகமாக அதிகமாகக் கொடுக்கும்போது அதைத்திருப்பிக் கொடுப்பதாக தெளிவு படுத்தியிருக்கிறார். தேவன் அமுக்குக் குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து மடியிலே போடுவார். **தேவனே எங்கள் விசுவாசத்தை வார்த்திக்கச் செய்யும்.**

**Worldatlas.Com தரவுகளின்படி உலகில் நான்கு மிகப்பெரிய மதங்கள் உள்ளன.**

1. கிறிஸ்தவம் – இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் (2:22 பில்லியன் மக்கள் பின்பற்றுகிறார்கள்).

2. இஸ்லாம் – அல்லாவின் மீது நம்பிக்கைக் கொண்டவர்கள் (1.605 பில்லியன் மக்கள் பின்பற்றுகிறார்கள்ர)

3. இந்துமதம் – இது ஒரு பழங்கால நம்பிக்கை முறையாக கருதப்படுகிறது (1.05 பில்லியன் மக்கள் பின்பற்றுகிறார்கள்)

4. புத்தமதம் – புத்தரின் போதனைகளில் நம்பிக்கைக் கொண்டவர்கள் (488 மில்லியன் மக்கள் பின்பற்றுகிறார்கள்).

✝

---

**சத்தியத்திற்கு கீழ்ப்படிய தாமதம் ஏன்?**

- ☛ சத்தியத்தை சரியாகப் புரிந்து கொள்ளாததால் (அப்போஸ்தலர் 17:32)
- ☛ சத்தியத்திற்கு கீழ்ப்படிய தேவையில்லை என்று நினைப்பதால் (அப்போஸ்தலர் 24:25)
- ☛ உலகத்தை அதிகம் நேசிப்பதால். (யோவான் 12:48)
- ☛ சத்தியத்தில் நிலைத்திருக்க முடியாதென்று நினைத்தால் (மத்தேயு10:28)
- ☛ கொடுக்க வேண்டிய விலை அதிகமென்று எண்ணுவதால் (மாற்கு 8:34)
- ☛ ஆயினும் சத்தியத்திற்கு கீழ்ப்படிய பவுல் தாமதிக்கவில்லை நீங்கள் எப்படி?

# நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்கள்?

தேவனே உமது கிபையின்படி எனக்கு இரங்கும் உமது இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிகிறேன். என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து; உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன். நீர் பேசும் போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும் போது உம்முடய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன். தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும்.



உமது பரிசுத்த ஆவியை என்னிடத்தி யிலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இருக்கும். உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள். தேவனே என்னை இரட்சிக்கும் தேவனே, இரத்தப்பழிகளுக்கு என்னை நீங்கலாக்கி விடும். அப்பொழுது என் நாவு உம்முடைய நீதியை கெம்பீரமாகப்பாடும். சங்கீதம் 51:1-4, 10 -13,14.

# அனுதின கிறிஸ்தவ ஜீவியம்
## விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு, உலகில் சக்திவாய்ந்த மூன்று காரியங்கள்

*Faith Hope and Love*
*The Most Powerful Trio in The World*
***J. Pandal Matheny***

முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது [பிரசங்கி 4:12]. இப்பூமிக்குரிய எந்த சக்தியாலும் இம்மூன்றையும் மேற்கொள்ள முடியாது. இவைகளோடு கர்த்தருடைய வார்த்தை விருத்தியடைந்து மேற்கொள்ளும் [அப்போஸ்தலர் 19:20]. இவைகளைப் பெற்றிருக்கிறவர்கள் பாக்கியவானாக எண்ணப்பட்டு உற்சாக மின்மைக்கும், சத்துருக்களுக்கும் எதிர்த்து நிற்பார்கள்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கியிருக்கிற வெளிச்சத்தின் பிள்ளைகளாகிய நாம் சில காரியங்களை தரித்துக்கொள்ள வேண்டும். பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து விசுவாசம், அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம் [I தெசலோனிக்கேயர் 5:8].

**விசுவாசம், நம்பிக்கை, அன்பு :**

இருள்சூழ்ந்த நாட்களில் அவைகள் நம்மைத் தாங்குகின்றன. அவைகள் தேவனுடைய உண்மைத் தன்மையையும், வாக்குத்தத்தங்களையும், அன்பையும் நம் தரிசனத்தின் நடுவே வைக்கின்றன. அவைகள் நமக்கு முன்னெப்போதையும் விட தேவைப்படுகின்றன. தேவனுடைய குடும்பத்திற்கு முன்பாக இருக்கும் சவால்கள் காலம் செல்ல செல்ல வளர்ந்து கொண்டு தான் இருக்கிறது. பலர் பிரசித்திபெற்ற உபதேசங்களுக்காக தங்கள் விசுவாசத்தைக் கைவிடுகிறார்கள். மற்றவர்கள் நட்பை விட்டு விட்டு கசப்புணர்வை வளர்த்துக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் நித்திய இரட்சிப்பைப் பற்றிய பார்வையிலிருந்து விலகி, பூமிக்குரிய காரியங்களுக்கு திரும்பி விடுகிறார்கள்.



பரிசுத்தவான்கள் தங்களை விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பில் மூழ்கடிக்க வேண்டும். இது நம்பிக்கையற்றவைகளுக்கான நேரமல்ல. இது சரண் அடைவதற்கான சமயமுமல்ல. இக்காலம் பக்திவைராக்கியத்திற்காக நாம் தைரியம் கொள்ளும்படி நம்மை அழைக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இனிமையான நற்செய்தியை அறிவிக்க நம்மை அழைக்கிறது.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்பாக, ஆங்கில பத்திரிக்கையான Spiritual Sword இலக்கை நோக்கித் தொடருங்கள் என்னும், கருப்பொருளின் ஓர் அருமையான கட்டுரை வெளிவந்தது. அதில் அதன் பதிப்பாசிரியரான Alan Highers என்பவர், விசுவாசத்தைவிட்டு விலகிச் சொல்பவர்களை எதிர்க்க வேண்டும். ஆனால், உலகத்திற்கு ஊழியத்தை எடுத்து செல்லும் நம் தரிசனத்தை நஷ்டப்படுத்தி அல்ல. நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் [ மாற்கு 16:15]. அதே புத்தகத்தின் மற்றொரு முக்கியமான கட்டுரையை எழுதிய Philsanders என்பவர், எல்லா கலாச்சாரத்திலும் அதிகமாகத் தேவைப்படுகிற ஒன்று சுவிசேஷந் தான். ஜனங்கள் நன்றாக வாழ்வதற்கு விசுவாசமும், நம்பிக்கையும், அன்பும் அவசியமாயிருக்கின்றன.

அப்போஸ்தலனாகிய பவுல் விசுவாசம், நம்பிக்கை அன்பு இம்மூன்றையும் விரும்பினார். அவர் இம்மூன்றையும் பரிசுத்தவான்கள் ஜீவனையும், வெற்றியையும் பெற்றுக் கொள்ளும் வல்லமையுள்ள ஊற்றுக்களாக கண்டார்.

விசுவாசம் தேவனால் எல்லாம் கூடும் அவர் செய்வார் என்று நம்புகிறது. நம்பிக்கை தேவன் நியாயத்தையும் இரட்சிப்பையும், நீதியின் கனியையும் கொண்டு வருவார் என்று எதிர் நோக்குகிறது. அன்பு இவ்வுலகத்தைக் கடந்த ஐக்கியத்தின் பாலங்களைக் கட்டுகிறது.

கடைசிநாளில் விசுவாசம் பார்வையாக மாறும். நம்பிக்கை அதன் ஆசையைப் பெற்றுக் கொள்ளும். அன்பு நித்திய ராஜ்ஜியத்தை தெய்வீக நன்மையுடன் இணைக்க என்றென்றும் நிலைத்திருக்கும். அதுவரை, நித்தியத்தில் வெளிப்படுத்தப்பட்டு தேவனுடைய அன்பின் நிரந்தரத் தன்மையை நமக்கு பெற்றுத்தரும். இந்த முப்பபுரிநூலை நாம் அரவணைத்துக் கொள்வோம்.

✝

## இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்

- **தானியேல்** ஜெபித்தார் ... தேவன் சிங்கங்களின் வாயைக் கட்டினார்
- **யோசுவா** ஜெபித்தார் ... சூரியன் அப்படியே நின்றது
- **எஸ்தர்** ஜெபித்தாள் ... பாழாக்கும் தீமையிலிருந்து யூதர்களை தேவன் விடுவித்தார்.
- **எலியா** ஜெபித்தார் ... மூன்றரை வருடங்களுக்கு மழை பெய்யவில்லை
- **மோசே** ஜெபித்தார் ... சிவந்த சமுத்திரத்தைத் தேவன் இரண்டாகப் பிரித்தார்

## அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

# ஒருவருக்கொருவர் தயவாயிருங்கள்

*And be Kind To One Another*

***Raymond Elliott***

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு அவர்களுடைய முந்தைய வாழ்க்கை முறையைக் குறிக்கும் பழைய மனுஷனைக் களைந்து போட்டு, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சபையாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளும் படி அறிவுரை வழங்கினார். மேலும், பவுல் ஒரு கிறிஸ்தவருடைய வாழ்க்கையில் ஒருபோதும் காணப்படக்கூடாத சில குறிப்பிட்ட பாவங்களை அங்கே பட்டியலிடுகிறார் (எபேசியர் 4:22-31). பவுல் எபேசு பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு எழுதின இந்த நிருபத்தை அவர்களுக்கு நேர்மறையான புத்திமதியை வழங்குவதன் மூலமாக முடிக்கிறார். ஒருவருக்கொருவர் தயவாயும், மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் ( எபேசியர் 4:32) என்று வாசிக்க முடியும்.

இங்கே, தயவு என்னும் வார்த்தையை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இந்த பண்பு ஒரு பக்தியுள்ள கிறிஸ்தவரின்



இருதயத்தையும், செயல்பாட்டையும் விவரிக்கிறது. பவுல் அன்பு தயவுள்ளது என்று (I கொரிந்தியர் 13:4) ல் சொல்கிறார். II பேதுரு 1:6,7 ல் அப்போஸ்தலனாகிய பேதுரு நம் கிறிஸ்தவ வளர்ச்சியில் **விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும்,**

**பொறுமையோடே தேவபக்தியையும், தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்** என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம். (கலாத்தியர் 5:22ல்) தயவு ஆவியின் கனிகளுள் ஒன்றாக இருக்கிறது என்று நாம் வாசிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெ கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது, **ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும், உருக்கமான இரக்கத்தையும், தயவை யும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையும் தரித்துக் கொள்ளும்படி புத்திமதி சொல்கிறார்.** (கொலேசெயர் 3:12)

நாம் ஒருவருக்கொருவர் ஏன் தயவாயிருக்க வேண்டும் என்பதற்கான காரணம் தயவு என்றும் வார்த்தையிலே அடங்கியிருக்கிறது. தயவு என்பது, கிறிஸ்தவ பண்புகளுள் ஒன்றாக இருக்கிறபடியால் இதற்கு நாம் அழுத்தம் கொடுத்து, இப்பண்பை வெளிப்படுத்தி அநேகரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வர வேண்டும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து (மத்தேயு 23:8) ல் நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்: கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள் என்று சொன்னார். இங்கே, இயேசு கிறிஸ்து, நாம் ஒரு சகோதரரை உயர்த்தி வைக்கக்கூடாது என்கிறார். ஏனென்றால், நாமெல்லாரும் சமமாக சகோதர, சகோதரிகளாக இருக்கிறோம். நாமெல்லாரும் உறவினர்களாக எப்படி மாறினோம்? ஆவிக்குரிய பிரகாரமாக நான் கேட்கிறேன்?

இக்கேள்விக்கான பதில் (கலாத்தியர் 3:26-29) வசனங்களில் இடம் பெற்றிருக்கிறது. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.

நாம் ஒருவருக்கொருவர் உறவினர்களாயிருக்கிறபடியால் நாம் ஒருவருக்கொருவர் மனஉருக்கமாயும், மன்னிக்கிறவர்களாகவும் இருப்போம். நாம் கிறிஸ்துவுக்குள் சகோதர, சகோதரிகளாக இருப்போம். நாம் தேவனுடைய குடும்பமாயிருக்கிறோம் (எபேசியர் 3:14, 15). ✝

# கிறிஸ்தவ இல்லம்
# விவாகம் தேவனுடைய வழியில்
## *Marriage God`s Way*
### ***Denny Petrillo***

இன்றைய நாட்களில் பல திருமணங்கள் முறிவில் முடிகிறது. கர்த்தருடைய ஜனங்களும் இதனால் பாதிக்கப்படாமல் இருப்பதில்லை என்பதும் உண்மையாயிருக்கிறது. பிரச்சனைகளின் ஆதாரம் அநேகமாயிருக்கிறது. தம்பதிகள், பொருளாதாரம், பிள்ளைகள், பெற்றோர், சேர்ந்திருக்கும் நேரம், தனிமையான நேரம் முக்கியத்துவங்கள், இன்னும் பல காரியங்களுக்காக வாக்குவாதத்தில், ஈடுபடுகிறார்கள்.

தேவன், இந்த விவாகம் அல்லது திருமணம் சம்பந்தமாக மதிப்பு மிக்க புத்திமதிகளை வழங்கும்படி சாலொமோனை ஏவினார். எனவே, தான் சலொமோனை சூரியனுக்குக் கீழே தேவன் உனக்கு நியமித்திருக்கிற மாயையான நாட்களிளெல்லாம் நீ நேசிக்கிற மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவ வாழ்வை அனுபவி; இந்த ஜீவனுக்குரிய வாழ்விலும், நீ சூரியனுக்குக்கீழே படுகிற பிரயாசத்திலும் பங்கு இதுவே (பிரசங்கி 9:9) என்று சொன்னார். இவ்வசனம் வெற்றிகரமான வாழ்க்கைக்கு சில மதிப்பு மிக்க ஆலோசனைகளை வழங்குவது போல் தெரிகிறது. கீழ்க்காணும் காரியங்களை கவனியுங்கள்.

**முதலாவது,** இவ்வசனம் ஒரு வெற்றிகரமான திருமணத்திற்கு அன்பை வழங்குவது அவசியம் என்று (நேசிக்கிற) காட்டுகிறது. காமமும், ஒழுக்கக்கேடும் நிறைந்த இவ்வுலகில் பல அல்லது பெரும்பாலான திருமண உறவுகளில் தேவன் விரும்புகிற நெருக்கம் குறைவுபடுகிறது. இக்காரியத்தைக் குறித்து பவுல் (I கொரிந்தியர் 7:35) ல் சில தகவல்களைக் கொடுக்கிறார்.

**இரண்டாவது,** இவ்வசனம் வெற்றிகரமான திருமணத்திற்கு சந்தோஷத்திற்கான தேடல் அவசியம் என்று காட்டுகிறது (ஜீவ வாழ்வை அனுபவி) பெரும்பாலான ஜனங்கள் தங்கள் வாழ்க்கைத்

துணை தங்களுக்கு சந்தோஷத்தை தரவில்லை என்ற குறை கூறுவதை பார்க்கிறோம். அதை விட்டுவிட்டு தங்கள் வாழ்க்கைத் துணையை மகிழ்ச்சியாய் வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும். இயேசு கிறிஸ்து வாங்குகிறதை பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று சொன்னதன் பொருள் என்ன? [அப்போஸ்தலர் 20:35]. பெற்று கொள்பவரை விட கொடுப்பவருக்கு அதிக மகிழ்ச்சி கிடைப்பதாயிருக்குமோ?

**மூன்றாவது,** இவ்வசனம் ஒரு வெற்றிகரமான திருமணத்திற்கு நீண்டகால அர்ப்பணிப்பு அவசியம் என்று காட்டுகிறது. **தேவன் உனக்கு நியமித்திருக்கிற மாயையான நாட்களிலெல்லாம்** நாம் வாழும் சமுதாயம் பிரச்சனைகளை எதிர் பதிலாக அதிலிருந்து ஒளிந்து ஓடும் சமுதாயமாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து [மத்தேயு19:6] ல் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிக்கக்கடவன் என்று போதித்தார்.

நாமெல்லாரும் தெய்வீக ஆலோசனைகளுக்கு நம்மை உட்படுத்தும்போது வெற்றிகரமான வாழ்வை பெற்றுக் கொள்ள முடியும். தேவனுடைய வழியில் திருமணம் என்பது தேவனையும் பிரியப்படுத்தும், திருமண தம்பதிகளையும் பிரியப்படுத்தும்.


✝

---

## அழைக்கப்பட்டிருக்கிறோம்

- **சுவிசேஷத்தினால் அழைக்கப்பட்டிருக்கிறோம்**
  **(II தெச. 2:1314)**
- **அந்தகாரத்திலிருந்து அழைக்கப்பட்டிருக்கிறோம் (I பேதுரு 2:9)**
- **தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் ஐக்கியத்திற்குள் அழைக்கப்பட்டிருக்கிறோம் (I கொரி. 1:9).**
- **கிறிஸ்து கிருபையினாலே அழைக்கப்பட்டிருக்கிறோம் (கலாத்தியர் 1:6)**
- **சமாதானத்திற்கென்று அழைக்கப்பட்டிருக்கிறோம்**
  **( கொலோ. 3:15)**
- **நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்டிருக்கிறோம்**
  **( I தீமோத். 6:12)**

# கிறிஸ்தவ இல்லம்
# குடும்பம் முக்கியமாகிறது
## *Family Matters*
### *Derek Broume*



குடும்பங்கள் என்று வரும் போது தீர்மானங்கள் பல எடுக்க வேண்டியதாயிருக்கும். நிறையக் காரியங்களைக் குறித்து பரிசீலிக்க வேண்டியதாயிருக்கும். நாம் கொஞ்ச நேரம் எடுத்து குடும்பத்தைப் பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை காண்போம்.

**நாம் இரு தனித்தனி நபர்களுடன் தொடங்க வேண்டும்:**

ஆணும், பெண்ணும் இரு தனித்தனி நபர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இரு ஆத்துமாக்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை சம்பவங்கள் தனித்துவம் வாய்ந்தவைகள். அவர்களிடத்தில் பாவம் இருக்கிறது; அவர்கள் போராடுகிறார்கள், அவர்களுக்கு ஒட்டு மொத்த மனித இனத்தைப் போலவே ஒரு இரட்சகர் அவசியப்படுகிறார் [ரோமர் 3:23] அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவார்களா? [ அப்போஸ்தலர் 2:38]. அவர்கள் எப்போதுமே தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாக இருப்பார்களா? [ வெளிப்படுத்தின விசேஷம் 2:10]

**நாம் இப்போது திருமணமான ஒரு தம்பதியரைக் காண்கிறோம்.**

முன்பு இருவராக இருந்தவர்கள் இப்போது ஒரே மாம்சமாகிவிட்டார்கள் [ஆதியாகமம் 2:24] கணவன்மார்கள் எப்படி கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்தாரோ, அதே போல் மனைவிகளிடத்தில் அன்பு கூர வேண்டும் [எபேசியர் 5:25]. மனைவிகளும் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதைப் போல தங்கள் சொந்த புருஷர்க்கு கீழ்ப்படிய வேண்டும் [ எபேசியர் 5:22] கிறிஸ்து சபைக்குத்

தலையாயிருப்பது போல புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் ( எபேசியர் 5:25) கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் உண்மையாயிருப்பார்களா? ( எபிரெயர் 13:4 அல்லது அவர்கள் விவாகரத்துப் பெறுவார்களா? (மத்தேயு 19:9)) அவர்கள் ஓரிவரிலொருவர் அன்பாயிருந்து கர்த்தருக்குள் கீழ்ப்படிவார்களா?

## தம்பதியார் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும்படி தீர்மானிக்கிறார்கள்

ஒரு குடும்பம் நன்றாக போஷிக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும் (I தீமோத்தேயு 5:8). குடும்பத்தில் தகப்பன் தலைவனாக இருந்து பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்கையிலும் போதனை யிலும் வளர்க்க வேண்டும் (எபேசியர் 6:4). தகப்பனும், தாயும் சேர்ந்து பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்த வேண்டும் (நீதிமொழிகள் 22:6). குழந்தைகள் பெற்றோர்களால் நேசிக்கப்படுகிறார்கள் என்றால், அவர்கள் மீது சில ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பெற்றோர்கள் கர்த்தருக்குள் குழந்தைகளுக்கு அவசியமான பராமரிப்பையும், பயிற்சியையும் அளிப்பார்களா?

## அதன் பின்னர், நமக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள்.

பிள்ளைகள் தங்கள் பெற்றோரை கனப்படுத்தி, அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் (எபேசியர் 6:12). அவர்கள் தாங்கள் பெற்றுக் கொண்ட பயிற்சியை வைத்து மற்ற விசுவாசிகளுக்கு மாதிரி யாயிருங்கள் (I தீமோத்தேயு 4:12) பிள்ளைகளும் பெரியோரைப் போலவே பாவத்தில் விழுந்து விடுவதற்கு வாய்ப்பு உண்டு ( ரோமர் 3:23): பிள்ளைகள் கர்த்தருடைய வார்த்தைகளை பின்பற்றுவார்களா? என்பது அவர்கள் எடுக்கும் தீர்மானத்தைப் பொறுத்துத்தான் அமையும். அவர்கள் எதைத் தெரிந்து கொள்வார்கள்?

குடும்பங்கள் என்று வரும் போது தேவனுடைய வார்த்தை மிகத் தெளிவாக காரியங்களைச் சொல்லியிருக்கிறது. குடும்பங்கள் மிக முக்கியமானது என்று வேதாகமம் காட்டுகிறது. விசுவாசம், அன்பு, சிட்சை, போதனை போன்றவைகள் சில காரணங்களாகும், தேவனை பின்பற்றி, குடும்பத்தில் தன் பங்கை நிறைவேற்றுவது ஒவ்வொரு தனிப்பட்ட நபரைப் பொறுத்ததாகும். உண்மை என்னவென்றால், பூரணமான

அல்லது முழுமையான குடும்பம் சபையிலும் குடும்பத்திலும், வேலை செய்து வாழ்ந்து கொண்டிருக்கும் போது, நாம் என்பது தேவனுடைய குடும்பம் மட்டும் தான். வழியில் நாம் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய சூழ்நிலைகள் வரும். நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்கள் கூட உலகத்தின் வழிகளைத் தெரிந்து கொண்டாலும் கூட நாம் எப்பொழுதும் தேவனுடைய வழிகளையே தெரிந்தெடுப்போம். நாம் எப்பொழுதும் இப்பூமியில் தேவனுடைய பிள்ளைகளாக வாழ்வோமாக.

✝

---

**(பிலிப்பியர் 4:13) வசனம் பல இருதயங்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கக்கூடிய ஓர் அருமையான வசனமாகும். என்னை பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு என்று சொன்னால், என்னால் தண்ணீரின் மேல் நடக்க முடியும். மரித்தவர்களை உயிரோடு எழுப்ப முடியும் என்று பொருள்படாது. இவ்வசனம் அதன் சந்தர்ப்பத்தின்படி பார்க்கப்பட்டால் மிகவும் அழகானது. ஏனென்றால், பவுல் சிறையிலிருந்து தான் எப்படி எல்லாச் சூழ்நிலைகளிலும் மனரம்மியமாக இருக்கக் கற்றுக் கொண்டதாக கூறுகிறார். வாழ்க்கையில் எப்படித் தன்னை பெலப்படுத்தினபடியால் வாழ்ந்திருக்கவும் தனக்குத் தெரியும், தாழ்ந்திருக்கவும் தனக்குத் தெரியும் என்று சொல்கிறார். இதில் நான் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் என்னவென்றால், என் வாழ்க்கையில் என்னபாடுகள் வந்தாலும் கிறிஸ்துவின் மூலமாக எல்லாவற்றையும் நான் சரிப்பேன் என்பதாகும்.**




# I பேதுரு புத்தகம் மூலமாக தேடுதல் வேட்டை


Rebecca Rushmore

1. நம் விசுவாசத்தின் பலன் என்ன?
2. கர்த்தருடைய வசனம் எதுவரை நிலைத்திருக்கும்?
3. நாம் எதிலிருந்து அழைக்கப்பட்டிருக்கிறோம்?
4. அரசாங்கங்களின் நோக்கம் என்ன?
5. கிறிஸ்தவர்கள் நீதியின் நிமித்தமாக பாடுபட்டால் எப்படி உணர வேண்டும்?
6. நோவாவின் நாட்களில் எத்தனை ஆத்துமாக்கள் தண்ணீரினால் இரட்சிக்கப்பட்டார்கள்?
7. எது திரளான பாவங்களை மூடும்?
8. நியாயத்தீர்ப்பு எங்கே தொடங்க வேண்டும்?
9. கிறிஸ்தவர்கள் எதை அணிந்துகொள்ள வேண்டும்?
10. கிறிஸ்தவர்கள் எந்த மிருகத்தோடு ஒப்பிடப்பட்டிருக்கிறார்கள்?

# ஒரு பொதுவான விளக்கம்

## *A Common Hermenutic*

*Cecil May, Jr*



ஒரு பொதுவான கட்டளை அதிகாரம் கொடுக்கிறது; அதே காரியங்களைக் குறித்த மௌனம் தடை செய்கிறது. அப்போஸ்தல கட்டளை பாடல் பாடுவதாகும்: மற்ற வகையான இசையைக் குறித்து மௌனம் காப்பது அவைகளை விலக்குவ தாகும்.

இது நாம் பிள்ளைகளாக கற்றுக்கொண்ட பொதுவான விளக்கமாயிருக்கிறது. நம் அம்மா நம்மைப் பார்த்து கொல்லைப் புறத்தில் போய் விளையாடுங்கள் என்று சொன்னபோது கொல்லை புறம் என்ற இடம் குறிப்பிட்ட இடமாக இருந்தது. நம் சிறு வயதில் கொல்லைப்புறம் அல்லது வீட்டின் பின்புறம் பரிச்சயமான, சுவாரஸ்யமான ஓர் இடமாக இருந்தது. அம்மா நாம் தெருவில் விளையாடுவதையோ அல்லது அடுத்துள்ள வீட்டில் விளையாடு வதையோ குறித்து மௌனமாயிருந்தது அங்கெல்லாம் விளையாட நமக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது என்பது நமக்குப் புரிந்தது. இவைகளையெல்லாம் ஓர் உதாரணத்துக்காகச் சொல்கிறேன்.

இவைகளெல்லாம் நமக்கு மிக எளிதாகப் புரியும் போது ஆராதனை எங்கே ஏறெடுக்கப்பட வேண்டும்? எப்படி ஏறெடுக்கப்பட வேண்டும் போன்ற காரியங்கள் மட்டும் நமக்கு ஏன் புரிவதில்லை?

தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுது கொள்ளு கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும். ✝

# விவாகம்

இரு கிறிஸ்தவர்களாக இருந்து கொண்டு ஒரே நம்பிக்கையில் இருக்கும்

கிறிஸ்தவர்களின் விவாகம் எவ்வளவு அருமையானது, அழகானது

அவ்விருவருமே ஒரே எஜமானின் இரு வேலைக்காரர்கள்

அவர்களை ஆவியிலும் சரீரத்திலும் எதுவும் பிரிப்பதில்லை

அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள் ஒரே மாம்சம் எங்கே உண்டோ அங்கே ஒரே ஆவியும் உண்டு

அவர்கள் ஒன்றாக இணைந்து ஜெபிக்கிறார்கள், அவர்கள் ஒன்றாக ஆராதிக்கிறார்கள்

அவர்கள் ஒருவருக்கொருவர் போதித்துக் கொண்டு, ஒருவருக் கொருவர் பலப்படுத்திக் கொண்டு அவ்வப்போது தேவனுடைய சபைக்குப் போவார்கள்; அவர்கள் இணைந்தே பாடுகளையும், உபத்திரவங்களையும் எதிர் கொள்கிறார்கள்

அவர்கள் ஒருமித்து தங்கள் ஆறுதல்களை பகிர்ந்துகொள்கிறார்கள்.

அவர்கள் இருவருக்குமிடையே எந்த இரகசியமும் இருப்பதில்லை

ஒருவர் மற்றொருவர் இருதயத்திற்கு துக்கத்தைக் கொண்டு வருவதில்லை

எவ்வித தர்மசங்கடமுமின்றி, வியாதியஸ்தர்களைப் போய் சந்திக்கிறார்கள்.

ஏழைகளுக்கு உதவுகிறார்கள் எவ்வித கவலையுமின்றி தர்மம் செய்கிறார்கள்

அவர்கள் சங்கீதங்களையும், கீர்த்தனைகளையும் பாடுகிறார்கள்.

இதையெல்லாம் கிறிஸ்து பார்த்து, கேட்டு களிகூர்ந்து இப்படிப்பட்டவர்களுக்கு சமாதானத்தைக் கொடுக்கிறார்

இப்படிப்பட்டவர்கள் இணைந்திருக்கும் போது கிறிஸ்து அவர்கள் மத்தியில் வாசம் செய்கிறார். அவர் எங்கே இருக்கிறாரோ அங்கே தீமை இருப்பதில்லை.

வேதாகம கதாபாத்திரங்கள்

# மரியாளும், மார்த்தாளும்

## *Mary and Martha*

**MARTHA LYNN RUSHMORE**

**பி**ன்பு அவர்கள் பிரயாணமாய்ப் போகையில் அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர் கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக் கொண்டாள். அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள். அவர்கள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலை யில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றார். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக : மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேகக் காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய், தேவையானது ஒன்றே மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்றார் (லூக்கா 10:38:42).

மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதி நாம் வீட்டு வேலைகளில் அக்கறைப்படக்கூடாது என்று உற்சாகப்படுத்தவில்லை. ஆனால், இயேசுவைப்பற்றிய சரியான மனப்பான்மை அவருக்கு செவிகொடுத்து அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவதாகும். இங்கே இரு சகோதரிகள் இடையே மிகப்பெரிய வித்தியாசம் காட்டப்பட்டிருக்கிறது. மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாளோ சமையல் செய்து கொண்டிருந்தாள். தேவையானது ஒன்றே என்னும் சொற்றொடர் ( லூக்கா 10:42) இயேசுவின் வார்த்தைகளைக் கவனிப்பதைக்குறிக்கும், அதைத்தான் மரியாள் தெரிந்தெடுத்திருக்கிறாள் இதேவிதமான கருப்பொருள் லூக்கா (8:1–21) வசனங்களில் காணப்படுகிறது.

மரியாளும், மார்த்தாளும் லாசருவுக்கு சகோதரிகளாயிருந்தார்கள். அவர்கள் பெத்தானியா என்னும் ஊரில் வாழ்ந்து வந்தார்கள். இயேசு அவர்களை பார்க்க வந்திருந்தார். மார்த்தாள் விருந்தினருக்கு ஆகாரம் தயாரித்துக் கொண்டிருந்தாள். நம்மைப் போல்தான் மார்த்தாளும் இருந்திருககிறாள். நண்பர்கள் நம் இல்லங்களுக்கு வருகை தரும் போது எல்லாம் சரியாக இருக்க வேண்டுமென்று வீட்டை சரி செய்கிறோம். இருந்தபோதிலும் மரியாள் இயேசுவின் பாதத்தின் அருகில் அமர்ந்து அவர்களின் வார்த்தைகளை கவனித்தாள். மற்றுமொரு சந்தர்ப்பத்தில் மரியாள் கர்த்தருக்கு பரிமளத்தைலத்தை பூசி, தன் தலைமயிரினால் அவருடைய பாதங்களை துடைத்தாள். (யோவான் 11:2). லூக்கா பத்தாம் அதிகாரத்தில் மார்த்தாள் தனக்கு மரியாள் உதவி செய்யவில்லை என்று கர்த்தரிடம் புகார் செய்தாள். அதற்கு அவர் மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்றார்.

யோவான் (11:1-12;12) மரியாள், மார்த்தாள், லாசருவைக் குறித்து அதிகமான தகவல்களை கொடுக்கிறது. மரியாள் மற்றும் மார்த்த தாளுடைய சகோதரன் லாசரு மரித்துப்போனான். அவர்கள் பெத்தானி யாவில் வாழ்ந்து வந்தார்கள். மார்த்தாளும் லாசரு வியாதிப்பட்டிருந்த படியால் இயேசுவை அழைக்க ஆள் அனுப்பினார்கள். இயேசுவும் தம்முடைய சீஷர்களைப் பார்த்து பெத்தானியாவுக்குப் போவோம் என்று சொன்னார். ஆனால், யூதர்கள் அவரைக் கொல்ல வகைதேடின படியால் சீஷர்கள் இயேசுவை பெத்தானியாவுக்குப் போக வேண்டாம் என்றார்கள். இருந்த போதிலும், இரண்டு நாட்கள் கழித்து இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடம் லாசருவின் மரணத்தின் மூலமாக அவர்கள் விசுவாசிப்பார்கள் என்று சொன்னார்.

மார்த்தாள் இயேசு கிறிஸ்துவை நோக்கி ஆண்டவரே நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் மரித்திருக்கமாட்டான் என்று சொன்னார். மேலும், 39 ஆம் வசனத்தில் மார்த்தாள் இயேசுவை நோக்கி ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலு நாளாயிற்றே என்றாள். இவ்வசனப்பகுதியில் இயேசு கண்ணீர் விட்டார் என்று பார்க்கிறோம். இங்கே இயேசு லாசருவின் மரணத்திற்காக அழவில்லை தம்முடைய நண்பர்களின் சோகத்தில் பங்கெடுக்கும்படி அழுதார் என்று தான் தெரிகிறது.

கல்லறையில் வைத்து இயேசு மார்த்தாளிடம் உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார். ஆனால் இயேசு கடைசி நாளிலே நடக்கும் உயிர்த்தெழுதலைப் பற்றி பேசுகிறார் என்று மார்த்தாள் நினைத்தாள். இயேசு தாம் சொன்னபடியே லாசருவை உயிரோடு எழுப்பினார்.

இயேசு கொடுத்த ஆவிக்குரிய ஆகாரத்தை கவனிக்காமல் சரீரப்பிரகாரமான ஆகாரத்தை ஆயத்தம் செய்வதில் மார்த்தாள் பரபரப்பாக இருந்தபடியால் தான் அவளுக்கு கெட்டப்பெயர் கிடைத்தது. நாமும் கூட நம் வீட்டிற்கு நண்பர்களோ, உறவினர்களோ வரும் போது அவர்களை நன்றகாக கவனிக்க வேண்டு மென்பதற்காக பரபரப்புடனும், படபடப்புடனும் வீட்டை சுத்தப்படுத்துகிறோம், மரச்சாமான்களை தூசி தட்டுகிறோம். சமையல் செய்கிறோம். நாமும் கூட ஆவிக்குரிய ஆகாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அதை அதிகமாக உட்கொள்ளவேண்டும். நமக்குள் மார்த்தாள்களும், மரியாள்களும் இருக்கிறபடியால் நம் வாழ்க்கையில் சரீரப்பிரகாரமான காரியங்களைவிட ஆவிக்குரிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தேவனை மகிமைப்படுத்துவோம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

இயேசு கிறிஸ்து தம்முடைய போதக ஊழியத்தில் பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார். சில கேள்விகள் **கடிந்து கொள்ளும்** படி வடிவமைக்கப்பட்டிருந்தது (மத்தேயு 8:26). வேறு கேள்விகள் அவரைப் பின்பற்றுபவர்களுடைய **விசுவாசத்தை சோதிக்கும் படியாகக் கேட்கப்பட்டது** (மத்தேயு 9:28). இயேசு கிறிஸ்து ஒரு சத்தியத்தை போதிக்கும் போது கூட கேள்விகளைப் பயன்படுத்தி யிருக்கிறார் (மத்தேயு 10:25). அப்படி உங்களால் **எத்தனை கேள்விகளை** கண்டுபிடிக்க முடியும்?

## வேதாகம கதாபாத்திரங்கள்
## ஆறு வழிகளில் சாத்தான் நம் மீது தாக்குதலை நடத்துவான்
## (II இராஜாக்கள் 18-19 அதிகாரத்திலிருந்து எடுக்கப்பட்டது)

# *Six Ways Satan Will Attack Us*

*David Conley*

**சா**த்தான் நம்முடைய நலனில் அக்கறை உடையவனல்ல! அவன் உண்மையாகவே நாம் தேவனோடு நடப்பதில் தோல்வி அடைய வேண்டுமென்று தான் விரும்புகிறான். பல விதங்களில் அவன் நம்மீது தாக்குதலைத் தொடுக்கிறான். யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா சாத்தானால் தாக்குதலுக்கு உள்ளாகினான். அதாவது, சாத்தான் எசேக்கியாவை அசீரிய ராஜாவின் படைகளைக் கொண்டு தாக்குகிறான். சாத்தான் கீழ்க்காணும் ஆறுவிதங்களில் எசேக்கியா ராஜாவையும், யூதா தேசத்து ஜனங்களையும் தோற்கடிக்க முயற்சித்தான்.

1. **அவர்களெல்லாம் தனியாயிருக்கிறார்கள் என்று நம்பச் செய்ய முயற்சித்தான்.**
2. **உண்மையை திரித்துப் பேசினான்.**
3. **தேவன் உண்மையாகவே என்ன சொன்னாரோ அதைக் குறித்து பொய்சொன்னான்**
4. **ஜனங்களை அவர்கள் மொழியில் பேசி ஒருவருக்கு விரோதமாக மற்றவர்களை எழும்பச் செய்தான்**
5. **அவர்களோடு ஓர் உடன்படிக்கையை செய்து கொள்ளச் செய்தான்**
6. **ஜனங்கள் உண்யையாகவே தேவனை சார்ந்திருக்க முடியாது என்று அவர்களை சம்மதிக்க முயற்சி செய்தான்.**

சாத்தான் அசீரிய ராஜாவை எசேக்கியாவுக்கு விரோதமாக பயன் படுத்தினான். இன்று அவன் ஜனங்களை நமக்கு விரோதமாக பயன் படுத்துவான். அந்தப் பிரசங்கியார் தொலைக்காட்சியில் பேசும் போது, அவர் தேவனுடைய வார்த்தையைப் பேசுகிறாரா? அந்த குடும்ப அங்கத்தினர்கள் நம்மீது அழுத்தம் கொடுக்கும் போது, தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தால் அவர்கள் வழி நடத்தப்படுகிறார்களா? வேலைசெய்யும் இடத்திலோ அல்லது பள்ளிக் கூடத்திலோ அவர்களுடைய செயல்பாடுகளில் பங்கெடுக்க நம்மை அழைக்கும் போது, அவர்களுடைய செயல்பாடுகளில் தேவன் பிரியப்படுவாரா? சாத்தான் நம்மை இந்த வழிகளிலோ அல்லது வேறு வழிகளிலோ தாக்கும்போது, எசேக்கியா செய்தது போல் நாமும் செய்வோம் எசேக்கியா விடைகளுக்காக தேவனிடத்தில் திரும்பினான்.

## வேதாகமக் கேள்விகள்

## பரிசேயர் குருடருக்கு வழிகாட்டுகிற கடைசி குருடரா?

## *Were The Pharisees The Last Blind Leaders of the Blind?*

*Ardron Hinton*

இந்த வார்த்தைகள் (மத்தேயு 15:12–14) ல் பரிசேயர்களுக்காக பயன்படுத்தப்பட்டது. இப்பெயரைப் பெற்றுக்கொள்ள தகுதியானவர்கள் பரிசேயர்கள் மட்டுமல்ல, இன்றைய நாட்களில் நம் தேசத்தில் காணப்படும் அரசியல் மற்றும் சமுதாய தலைவர்களும் இதில் அடக்கம் சிந்தித்துப் பாருங்கள், நாம் கல்வியை மேம்படுத்த மலைத்துப் போகும் தொகையை செலவழித்திருக்கிறோம். இருந்தபோதிலும், லட்சக்கணக்கான மக்களின் துயர சம்பவங்களை நாம் இன்னும் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறோம். நாட்டில் வன்முறை கண்டபடி கட்டவிழ்த்து விடப்பட்டு பெருங்குற்றங்கள் முன்பெப்போதும் இல்லாத அளவுக்கு பெருகி கிடக்கின்றன. இருந்த போதிலும், அவைகளுக்கு ஊடக வெளிச்சம் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது நம்மையெல்லாம் வழிநடத்தும் அரசியல் தலைவர்கள் பிரச்சனைகளுக்கு தீர்வைக் காணாமல் பிரச்சனைகளுக்கான வேரைக்காண முடியாத குருடர்களாக இருப்பதைத்தான் காட்டுகின்றன.

நாம் விரும்பிய பாதுகாப்பை பணம் நமக்கு பெற்றுத் தரவில்லை. அதிகமாக செலவழிப்பது காரியங்களை மாற்றும் என்று ஏன் யூகிக்க வேண்டும்? நமக்கு கிடைக்கும் தகவல்கள் எல்லாப் பிரச்சனை களுக்கும், நம் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கும் இடையே உள்ள தொடர்பைக் காட்டுகின்றன. 1. பாரம்பரிய குடும்பங்களின் வளர்ச்சி குறைவு, 2. வேதத்தில் சொல்லப்படாத ஒழுக்க நெறிகளை ஏற்றுக் கொள்ளுதல், 3. கல்வியை முற்றிலும் தேவனற்றதாக மாற்றுதல் 4. ஜனங்களுக்கு பிரியமான இதமான வார்த்தைகளைப் பேசும் போக்கு அதிகரிப்பு. 4. பொது ஊடகங்களில் சமூகப் பொறுப்பு முற்றிலுமாக மறக்கப்படுதல் 6. மாநிலங்களின் உரிமை பறிக்கப்பட்டு மைய அரசு அதிகாரத்தைக் கையாளும் போக்கு. நம் தலைவர்கள் உண்மையான பிரச்சனை சமுதாயத்தில் எது என்பதை காண முடியாத குருடர்களா யிருக்கிறார்கள். ✝

# ஞானஸ்நானத்தின் எப்பக்கத்தில் இரட்சிப்பு உணரப்படுகிறது?

| | | |
|---|---|---|
| மாற்கு 16:16<br>விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் | = | இரட்சிக்கப்படுவான் |
| அப்போஸ்தலர் 2:38<br>நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் | = | பாவமன்னிப்பு |
| அப்போஸ்தலர் 22:16<br>நீ எழுந்து ஞானஸ்நானம் பெற்று ... | = | உன்பாவங்கள்போகக் கழுவப்படு |
| கலாத்தியர் 3:27<br>ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் ... | = | கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே |
| I பேதுரு 3:21<br>.... ஞானஸ்நானம்.... மாம்ச அழுக்கை நீக்கு தலாயிராமல் தேவனைப்பற்றும் நல் மன சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து... | = | நம்மையும் இரட்சிக்கிறது |
| ரோமர் 6:4,5<br>நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற் குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்து வுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். | = | புதிதான ஜீவன் |
| அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். | = | அவருடைய உயிர்த்தெழுதல் |

# எல்லாம் முடிந்தது

## *It Is Finishhed*

*Jerry R. Kendall*

**முன்னுரை**

1. இவ்வார்த்தை பரிகாசம் செய்யப்பட்ட, கைவிடப்பட்ட, முள்முடி சூட்டப்பட்ட, இரத்தம் வடித்துக் கொண்டிருந்த மனிதரால் சொல்லப்பட்டது.

2. மௌனம் மற்றும் அந்தகாரத்திலிருந்து கதறல்; என்ன முடிந்தது (அதாவது நான் முடிந்தேன் என்றல்ல, முடிந்தது) என்று கதறினார்.

3. இயேசு கிறிஸ்து உத்தேசிக்கப்பட்ட காரியங்களை முடிவுக்குக் கொண்டு வந்தார் ( அப்போஸ்தலர் 3:18).

4. ஒரு நோக்கத்தை நிறைவேற்றுவதில் நம் கர்த்தர் இறுதி செயலை செய்திருக்கிறார்

I **மையப்பகுதி :**

1. கிறிஸ்துவின் பாடுகள் முடிந்தது (லூக்கா 24:25–27).

A. அவருடைய பாடுகள் தேவனுடைய அன்பின் மகத்துவத்தைக் காட்டுகிறது (ரோமர் 5 :6–9)

B அவருடைய தாழ்மை முடிந்தது; இப்போது அவர் உயர்த்தப்பட்டிருக்கிறார் ( பிலிப்பியர் 2:3–22).

C பிதா மற்றும் பரிசுத்த ஆவியானவருடனான அவருடைய பிரிவு முடிவுக்கு வந்தது (யோவான் 7:5)

D அவரைப் பற்றிய வேதவாக்கியங்களின் நிறைவேறுதல் முடிவுக்கு வந்தது (யோவான் 19:28).

II **கிறிஸ்துவின் பாவ நிவர்த்தி செய்யும் பணி முடிந்தது ( எபிரெயர் 2:17)**

A. அவருடைய பலி பூரணமாக இருந்தது (தானியேல் 9:24˙ எபிரெயர் 9:26)

B மீட்பிற்கும், மன்னிப்பிற்கும் கிரயம் செலுத்தப்பட்டது (எபேசியர் 1:7 ; கொலோ 1 1:114)

C அவருடைய பலி பூரணமாக இருந்தது. [தானியேல் 9:24, எபிரெயர் 9:26]

D தேவ ஆட்டுக்குட்டி கொடுக்கப்பட்டார் [ யோவான் 1:29 3:3–6; வெளி 6:6]

E அவருடைய பாவமற்ற தன்மை நியாயப்பிரமாணத்தை முடிவுக்கு கொண்டு வந்தது [கொலோசெயர் 1:20:23; ரோமர் 6:14–10–3–4; கலாத்தியர் 3:13 ,21–25; 4:4–5.]

III **கிறிஸ்து சாத்தானின் ராஜ்யத்தை நொறுக்கிப்போட்டார் (மத்தேயு 12:29)**

A. சாத்தான் மற்றும் அவனுடைய ராஜ்யத்திற்கு எதிரான போர் முடிந்தது [ எபேசியர் 6:1017]

B ஸ்திரீயின் வித்து பிசாசின் தலையை நசுக்கியது [ஆதியாகமம் 3:15]

C முடிக்கப்பட்ட கிறிஸ்துவின் பணியை அடிப்படையாக வைத்துதான் நம் நம்பிக்கை இருக்கிறது [வெளி 20:1,17 –18].



IV **கிறிஸ்துவின் முடிக்கப்பட்ட பணி நிரூபிக்கப்பட்டிருக்கிறது.**

A. தேவாலய திரைச்சீலை மேலிருந்து கீழ்வரை கிழிந்தது [மத்தேயு 27:50–53]

B இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மற்றும் தியாகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது!

C கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்டார்


D பெந்தேகொஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியானவர் [யோவான் 14–16; அப்போஸ்தலர்2]

**முடிவுரை**

1. இயேசு கிறிஸ்துவின் பணி எல்லாம் முடிந்தது! அவர் பலியானவராக அல்ல மாறாக, ஒரு வெற்றியாளராக முடிந்தது என்று சொன்னார்.

2. கிரேக்கர்கள் நிறைய விஷயங்களை சுருக்கமாக சொல்வதில் தான் உண்மையான ஞானம் இருக்கிறது என்று நம்பினார்கள். அவர்கள் தங்கள் ஆசான்கள் கடல் போன்று திரளான காரியங்களை துளிகளில் சொல்ல வேண்டுமென்று விரும்பியிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து **முடிந்தது** என்று சொன்ன போது அதை அப்படியே செய்தார். அது நம் இரட்சகரின் வேதனையும், நம்பிக்கையின்மையும் நிறைந்த, வெறுமையான தோல்வியின் கதறல் அல்ல. அது வெற்றியின் கூக்குரலாக இருந்தது. கிறிஸ்து பிதாவின் பணியை செய்து முடித்தார். இயேசு எவையெல்லாம் செய்ய இப்பூமிக்கு வந்தாரோ அவைகளையெல்லாம் தாம் செய்து முடித்துவிட்டதாக அவர் பகிரங்கமாக அறிவித்தார். கிறிஸ்து தேவனை மனிதனுக்கு வெளிப்படுத்தினார். அவ்விதமாக அவர் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார். இப்போது கிறிஸ்து இரட்சிப்பிற்கான விலையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இங்கே அவர் பாடுகளின் முடிவைப்பற்றி மாத்திரம் பேசவில்லை. இறுதிக்கட்ட சாதனையான மனிதனுடைய மீட்பைப்பற்றி பேசுகிறார். இயேசு தாம் மனித இனத்தின் மீட்புக்காக செய்த எல்லாவற்றையும் ஒரே வார்த்தையில் முடிந்தது என்று சுருக்கமாக சொல்லிவிட்டார். கிறிஸ்துவின் மரணம் நம் பாவங்களுக்கான கிருபாதாரபலியாக மாறிவிட்டது, பரமப்பிதாவும் கிறிஸ்துவின் பணியில் திருப்தி அடைந்தார். இயேசு கிறிஸ்து அவருடைய ஒப்புரவாகுதலின் ஊழியத்தை செய்து முடித்தபடியால் நாமெல்லாரும் கீழ்ப்படிந்து அவரை ஏற்றுக்கொள்வோம்.

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

நம்பிக்கை TV வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் TV சனி காலை 7:00 - 8.00 மணி

**மாத இதழ் : திருமறை ஆசான்**

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.


தொடர்புக்கு

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.

தமிழ்நாடு, இந்தியா.


**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**


E.Z.S. ராஜநாயகம் : 98427 30382

P.R. சுவாமி : 098440 70763

P.C. பிலேமோன் ராஜா: 9244204420

B. அர்ஜுனன் : 994435 58041

## சத்திய வழி


❖ பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி**

❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்



❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜூனன்**

❖ தமிழன் TV : செவ்வாய் மாலை 6:00 – 6:30 மணி

❖ நம்பிக்கை TV : வெள்ளி 8:00 – 8:30 மணி


❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்

<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**

❖ தமிழன் : ஞாயிறு காலை 6:45 காலை 7.00 மணி

அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

❖ நம்பிக்கை TV : ஞாயிறு மாலை 3:30 காலை 4.00 மணி

❖ **Good News TV** : செவ்வாய் இரவு 7:30 – 8.00 மணி

❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)

❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை

❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL

❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

- ❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

- ❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய .............................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

- ❑ “சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி


**E.Z.S. ராஜநாயகம்**

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**


பெயர் : ________________________________

தெரு / ரோடு : ________________________________

நகரம் : ____________________ பின் கோடு : ____________

மாநிலம் : ________________________________

# 5 நிமிட வேத பாடம்

## கர்த்தர் என்னை அறிந்திருக்கிறார்

Paula Bates

1. கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து ........ என் உட்காருதலையும், என் எழுந்திருக்குதலையும் நீர் ............., என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர் (சங்கீதம் 139:1,2).

2. ........... அவர்கள் நினைவுகளை அறிந்து, நீங்கள் உங்கள் இருதயங்களில் ............... , .............. ? மத்தேயு 9:4.

3. அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் ............ அவர்களை நம்பி இணங்கவில்லை. ............. அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் ............. கொடுக்கவேண்டிய தாயிருக்கவில்லை (யோவான் 2:24, 25).


4. உன் ............, உன் ......., உன் வரவையும் நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளிக்கிறதையும் அறிவேன் ( II ராஜாக்கள் 19:27)

5. ஆகிலும் உங்களில் ........... சிலர் உண்டு என்றார், விசுவாசியாதவர்கள் ............ தம்மை காட்டிக்கொடுப்பவன் இன்னானென்றும் ஆதி முதலாக இயேசு .............. அவர் பின்னும் (யோவான் 6: 64).

6. எல்லாருடைய ............... அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய ............... போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப்பட்டத்திலும் பங்கு பெறுவதற்காக (அப்போஸ்தலர் 1:24).

For Further Information, Please Contact :

# சத்தியத்தின் குரல்












## இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்

‘ திருமறை ஆசான் ’
‘ கிருபையுள்ள வார்த்தை ’
‘ வேர்டு ஆப் கிரைஸ்ட் ’

மேலும் விபரங்களுக்கு : E.Z.S. **ராஜநாயகம்,** தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385